www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 9/00
நவ.06-12,1994
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

75

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு

அலையின் திசை இப்போது எங்கே?



## வெடித்த குண்டும்
## தேர்தல் கள
## நிலவரமும்!



உள்ளே தனியாக

பிரதமர் சந்திரிக்காவின்

வர்ணப் படம்

டயானாவின் இரகசியக் காதல்! படங்களோடு புதிய தகவல்



## பிரபாவின் அவசர வேண்டுகோள்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
75வது முரசிது.
எடுப்பான மகிழ்ச்சிதான்.

உங்கள் நம்பிக்கைகளுக்கு ஏற்ப
எங்களால் முடிந்தளவு
முயன்றதால் ஏற்பட்ட முன்னேற்றம்!

"ஆரம்பத்தில் அசத்துவார்கள்
அதற்குப்பின்...?" என்றவர்கள்
இன்று அசந்து போயிருப்பதும்
அவர்களே-
முரசை நேசிக்கத் தொடங்கியதும்
முரசின் பாணியை விரும்புவதும்
உங்கள் முரசின் வெற்றிதானே!

தங்கள் முகங்களை-
கண்ணாடியில் காணவே
வெட்கப்படுகின்ற நண்பர்களுக்கு
உண்மைகள் கசப்பானவைதான்.
உள்ளதைச் சொல்லும்போது
அவர்கள் முகம் சுருங்குவதும்
முணு முணுப்பதும் ஆச்சரியமல்ல.
எனவே-அவர்கள்-சிலசமயம்
முரசுமீது கோபப்படுவது விந்தையல்ல.

உண்மைகளை பேசத்தடை
என்றொரு நிலை இருந்தால்
பேசுவதை தற்காலிகமாக ஒத்திவைக்கலாம்.
அதற்காக பொய்யை சொல்லக்கூடாது
என்பதே முரசின் கருத்து.

அந்தக் கருத்தின் அடியொற்றியே
முரசின் அரசியல் விமர்சனங்கள்
அன்றும்- இன்றும்- இனியென்றும்!

பத்திரப்படுத்திக்கொண்ட
வாசகர் நம்பிக்கை-வலிய நேசம்
என்பவை கவசமாக
முரசு தன் சுவடுகள் பதிக்கும்.

முரசின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும்
உரிமை கோரும் உரித்துடையவர்கள்
நீங்கள்தான் என்பது
முகஸ்துதியல்ல; முற்றிலும் உண்மை.

எனவே-
ஏறியுள்ள 75 வது படியில் நின்று
மகிழ்ச்சியை பரிமாறிக்கொள்வோம்
களிப்போடு கை குலுக்கிக்கொள்வோம்!

□□

வெண்ணெய் திரளும் போதெல்லாம்
தாழி உடைவது, உடைக்கப்படுவது
அடிக்கடி இங்கே நடக்கும் அனர்த்தம்!

மீண்டும் ஒருமுறை
அந்த அனர்த்தம்-
பாலத்துறை குண்டுவெடிப்பின் வடிவிலே!

புதிய நோக்கோடு
சமாதானத்திற்கான முனையை திறக்க
பிரதமர் பிடிவாதமாக முயலும்போது
தடைக்கல்போல வெடித்தது குண்டு!!

சமாதானம் மலரும்
என்று நம்பியிருந்த மக்களுக்கு,
"நானிருக்க அந்த நம்பிக்கை எதற்கு?"
என்ற செய்தியைத்தான்
அரசியல் வன்முறை அறிவித்திருக்கிறது.

மக்கள் விரும்பினால் மட்டும்
மாற்றம் ஏற்பட்டு விடாது என்பதற்கு
மக்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பால்
கட்டுமீறி ஆடும் வன்முறையே சாட்சி.

மக்கள் மட்டுமல்ல
ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள்
மனம் வைத்தால்கூட
மாற்றம் என்பது சுலபமல்ல.
காரணம்,
விபரீதத்திற்கு வித்திடக்கூடிய
வன்முறை விசுவரூபமாகியிருக்கிறது.

துரதிஷ்டவசமாக
வன்முறைக்குத்தான் மதிப்புமிருக்கிறது.
நடு நிலை என்று கூறியபடி
வன்முறைக்கு மறைப்புப் போட்டு
வன்முறையை ஊக்குவித்தபடி
வன்முறை ஒழிக என்று
கோசம் போடுவோரும்
அதிகமாகி வருகிறார்கள்.

உதாரணமாக
காமினி கொலையை புலிகள்கூட
உத்தியோகபூர்வமாக உடனே மறுக்கவில்லை.

புலிகளிடமிருந்து 'ஒரேயொரு
உத்தியோகபூர்வ அறிக்கை வந்தால்
உடனடியாக அதனை-
உலகமறியச் செய்ய செய்தியுலகம்
காத்திருந்தது. கவனித்தபடி இருந்தது.
அதிகாரமுள்ள புலிப்பிரமுகர்கள்
எவரும் வாயே திறக்கவில்லை.

ஆனால், 'நடுநிலை'வாதிகள் சிலர்
புலிகளின் உத்தியோகபூர்வ பேச்சாளர்கள்போல்
புலிகளை தாமே பாதுகாப்பவர்கள் என்று
நினைத்துக்கொண்டதுதான் வேடிக்கை!

ஆக, வரக்கூடிய முடிவு என்னவென்றால்
பலம் இருந்தால் பணியவும்
பாதுகாப்பாளர்கள்போல் நடிக்கவும்
நான் முந்தி நீ முந்தி என்றளவில்
அவர்களை அளவுகடந்து ஆதரிப்போர் மீதுதான்!

இந்த நிலையில்,
ஆயுத பலத்தை தவறவிட
யாருக்குத்தான் எண்ணம் வரும்?
தவறு, ஆயுதம் வைத்திருப்பவர்கள் மீதல்ல;
அதற்கு அளவற்ற ஆதரவு கொடுப்போர்மீதே!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## இல்லத்திற்கு ஒரு நற்செய்தி

இவ்வாண்டை குடும்பங்களின் ஆண்டாக பிரகடனப்படுத்தி குடும்பங்களை ஆன்மீக வளர்ச்சியில் வளர்த்துக்கொண்டு வருகின்றது எம் தாய் திருச்சபை. குடும்பம் என்பது மானிட சமூகத்தின் திருவுளப்படி நடக்க இவ்வுலகில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் என்பதை நாம் மறத்தலாகாது. இல்லறம் ஒருபொறுப்புமிக்க அழைத்தலாகும். சமுதாயத்தில் திருமணத்தையும் குடும்பத்தையும் தாக்குகின்ற தீய சக்திகள் பலவுள்ளன. இவ்வாறான தீய சக்திகளை எதிர்த்து நன்னெறியில் நடந்து, ஒவ்வொரு குடும்பமும் ஒளியாக, உப்பாக திகழ வேண்டும். ஆனால் வாழ்க்கை எப்போதும் புனித வாழ்வாக அமைவதில்லை. மாறாக புனித வாழ்வு எப்போதும் போராட்டமாகவே அமையும்.

ஒரு குடும்பம் அன்பின் சின்னம், சிகரம். அது அன்பை பாதுகாக்கின்ற அன்பை அறிக்கையிடுகின்ற, அன்பை பகிர்ந்து கொள்ளுகின்ற பணிப்பொறுப்பைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தின் மாண்பையும், பொறுப்பையும் வரையறுத்து செயற்படுத்தல் அவசியம். இவை எப்போதும் ஆள் நிலை சார்ந்த உறவுகளால் அமைந்ததொரு சமூகமாகத் திகழவும் உயிரைப் பேணவும், சமூக வளர்ச்சியில் பங்கேற்கவும் திருச்சபையின் வாழ்விலும் பணிப்பொறுப்பிலும் பங்கேற்க வேண்டும், எனக்கூறும் எம் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் கூற்றுக்கு ஏற்ற வாழ முற்படுதல் அவசியம். குடும்பங்களில் அதி சிறந்த முறையில் வாழ்ந்த-முன்மாதிரியாக வாழ்ந்த குடும்பம், இறையாசீரால் ஒப்பற்ற விதத்தில் உயர்வாக, புனிதமாக போற்றி புகழும் குடும்பமான திருக்குடும்பத்தின் ஆசிய தேசத்தில் நாமும் வாழ்ந்திட தூய ஆவியின் வரம் கேட்போம். பிள்ளைகளுக்காக பழமொழியாகவும் 6:20-23ம் தாய்மாருக்கு சீராக் 26:16-21ம், கணவர்மாருக்கு எபேசியர் 5:27-32ம், குடும்ப ஒழுக்கம் எனும் ரீதியில் எபேசியர் **5:21–6:4** வரை. எனவே இவ்வார்த்தைகளை வாசித்து பயனுள்ள குடும்பமாக ஒளிர்வோமாக.

வாழைச்சேனை ஜி. நீற்றா.

## ஆன்மீகம்



## திருக்குர்ஆன் ஓதுவதின் சில ஒழுக்கங்கள்

திருக்குர்ஆன் ஓத விரும்புகிறவர் மிஸ்வாக் செய்து உளூச் செய்தபின் தனிமையான ஓரிடத்தில் மிகக் கண்ணியத்துடனும் பணிவுடனும் கிப்லாவை முன்னோக்கி அமர்ந்து, மன ஓர்மையும் பயபக்தியும் உடையவராக, அந்த நேரத்திற்குப் பொருத்தமான இரசனையை மனதில் கொண்டவராக அல்லாஹுத ஆலாவுடைய திருவேதத்தை அவனிடத்திலே ஓதிக்காண்பிப்பது போன்ற நிலையில் ஓத வேண்டும்.

அவர் பொருள் விளங்கியவராக இருந்தால் ஆராய்ச்சியுடனும் சிந்தனையுடனும் ஓதவேண்டும். நற்செய்தி கூறுதல், அருள் வழங்குதல் போன்ற கருத்துக்களுடைய ஆயத்துக்கள் வரும்பொழுது பாவ மன்னிப்பிற்கும், அருள் வேண்டியும் து ஆச் செய்துகொள்ள வேண்டும். தண்டனை, எச்சரிக்கை பற்றிய ஆயத்துக்கள் வரும்பொழுது அல்லாஹுதஆலாவிடத்தில் அவனைத் தவிர வேறு எந்தக் கதியும் இல்லை என்ற எண்ணத்தில் பாதுகாப்புத்தேட வேண்டும். அல்லாஹுதஆலாஹ்வுடைய பரிசுத்தத் தன்மைகள் கூறப்படும் இடங்களில் 'சுப்ஹானல்லாஹ்' என்று சொல்லிக்கொள்ள வேண்டும். தனிமையிலிருந்து ஓதும்பொழுது அழ வேண்டும். அழுகை வரவில்லையானால் சிரமப்பட்டு அழ முயற்சிக்க வேண்டும்.

திருக்குர்ஆன் ஓதும்பொழுது மனனம் செய்யும் நோக்கமில்லாவிடில் அவசரமாக ஓதக்கூடாது. திருக்குர்ஆனை ரேகாலீ, தலையணை அல்லது ஏதேனும் உயரமான பொருளின்மீது வைத்து ஓதவேண்டும். ஓதும்பொழுது இடையில் யாருடனும் பேசக்கூடாது. பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டால் குர்ஆனை மூடி வைத்து விட்டுப் பேசவேண்டும். பிறகு அஊதுபில்லாஹி ஓதி மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும்.

கவிப்பிரியா நிஷா—வெல்லம்பிட்டிய.

## கவிதைப்போட்டி இல-72

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**சீதனப் பேய்கள்!**

கண்ணாடி கூட
காதலிக்கும் உன்னழகை!
என்ன செய்வேன் மகளே.....?
பொன் பொருளைச் சீதனமாய்
புதுவீட்டில் கொட்டினால்தான்
உன்னைத்தான்கூட
உன்கையைப் பிடிப்பானாம்!

செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

### நிலவின் உருவே

பூ ஒன்று ஆயத்தமாகிறது
பூஜைக்கு அங்கு நேரமாகிறது
விடிவெள்ளி இங்கு பூத்திருக்கு
வெண்ணிலவு ஒன்று காத்திருக்கு!

தெ. லோஜனா, கொழும்பு-15.



### வியக்கப்பட்டவை

**!**

அடி ஆத்தாடி.....
இந்த யுத்த நாட்டிலும்
இத்தனை அழகா நான்!

எம். எச். ஏ. கரீம்
மருதமுனை-01.

"ஒப்பனையில் நீ
கற்பனையில் நான்.
சொப்பனத்திலாவது
இருவரும்......?......"

தங்கத்துரை ஜெயாஞ்சலி
தம்பிலுவில்-2.

**சமாதான மோர்**

யாழ் வந்த சமாதான
தூது குழுவுக்கு-மோர்
கொண்டு போக போறேன்.
அதற்கு முன்-முகத்தை
கொஞ்சம் பாத்துக்கிறேன்.

ராமசாமி ரமேஸ்குமாரி-நாவுஓயா.

**புது யுகம்**

புத்தாடை புனைந்து
புதுமுகம் காட்டி
புன்னகைக்கும் பெண்ணே!
புது யுகம் பிறப்பதெப்போ?

சி. ஜெயகுமார்
மாத்தளை.

**ஒப்பனை**

ஒய்யாரி சிங்காரி
ஓரவிழிக் காந்தாரி
ஒவ்வாத அரிதார
ஒப்பனைதான் உனக்கெதற்கு?

அ. பிரேமராணி-கொழும்பு-13.

**இங்கே பார்!**

கண்ணாடியில் உன்னை
காணாமல்
என் கண்ணில்
உன்னைப் பார்.

ஏ. எஸ். ஜீனத் உம்மா
பூண்டுலோயா.

**காவோடு காரிகை**

கண்ணாடி பார்த்துக்
களிகூரும் காரிகையே!
காவோடு செல்வது உன்
காதலனைக் கவரவா? அல்ல
கனிவான அவனிதயம்
களவாடிச் சுமக்கவா?

பரமேஸ்வரி சொலமன்-மட்டக்களப்பு.

**எச்சரிக்கை**

ஒய்யார அழகூட்டும்
ஒப்பனையில் கவனம்
சிதறின்....
கண்களின் பார்வைகள்
தவறலாம் உன்னில்!

மஸீதா ஏ. காதர்-ஏறாவூர்-06.

**அழகு**

நின்னழகில் நீ மயங்கி
நிலைமாறி சிரிக்கையிலே!
உன்னழகை எடைபோட
ஒரு ஆடி போதுமோடி?

த. மஞ்சுளா-பூண்டுலோயா.

**ஹாய்!**

கண்ணாடி
ஒன்று
முகம் பார்க்கின்றது

துரோணர்-கொழும்பு-04.

**களிகாலம் வந்தாச்சு**

கலிகாலம் போயாச்சு
களி காலம் வந்தாச்சு
வருக சாந்தி வருகவென
கரகம் ஆட்டம் ஆடுவமே!

திருமதி. ஹனா யூசுப்
மீதொட்டுமுல்லை.

**அட.....!**

"ஏய்-
அடி சுந்தரி!
நான் நல்லா-
இருக்கேனாடி...?"

வாஹிட் ஏ. குத்தூஸ்
பதுளை.

**கண்ணே!**

கண்ணாடி முன்நிற்கும்
தமிழ்ப்பெண்ணே- உன்
காதலன் வருவது நிஜம்
கண்ணே-காதில்
சொல்வான் கதை கண்ணே
அதற்கும் காரணம்
உன் கண்ணே!

சிவனு நீதிராஜா
மஸ்கெலியா.

**வருகிறாள்**

சந்தோசக் கலசம்
தாங்கி,
சமாதானப் பட்டுடுத்தி,
அமைதித் தேவதை
எங்கள்,
அவனியிலே
பவனிவர
அழகு பார்க்கிறாள்.

ஆரையூர்-இதயம்.

**திருப்தி**

அவள் அழகை யார்தான்
இரசித்தால் என்ன
தன்னழகை தான்
இரசித்தால் தான்
பரம திருப்தி.

எம். ஈவான்-மாரஸ்ஸன.

**அரங்கேற்று!**

அழகான
ஒப்பனைதான்.
இற்றுப்போன
இத்தேச மேடையில்
சமாதான நடனத்தை
அரங்கேற்று!

ஏ. அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**தேவை**

என்னழகு மேன்மை பெற
பொன்மணிகள் சேர்த்தேனடி
மண்ணுலகம் அழகுபெற
மனித இனம் அழியனுமோ!

பத்மா கதிர்வேல்
கொழும்பு-14.

## கவிதைப் போட்டி இல-75



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.11.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 75
தினமுரசு வாரமலர்
த. பெ. இல—1772,
கொழும்பு.

### முரசின் கவனத்துக்கு!

உன்னை ஒவ்வொரு வாரமும் நான் நேசிக்கின்றேன். முக்கியமாக தொடர்கதைகள், தேன் சிந்தும் தேன் கிண்ணம், லேடிஸ் ஸ்பெசல், சினிவிசிட், போன்றவை என் மனதுக்குள் இனிக்கின்றன. உனக்கு எனது பல்லாயிரம் வாழ்த்துக்கள்.

ப. சாரகை-களுவாஞ்சிக்குடி.

□□

ஒரு வார எல்லைக்குள், ஓராயிரம் அம்சங்களை, சீரான வழியில், பாகுபாடின்றி நீ சுமந்து வருகின்றாயே. வாழ்க தமிழ், வளர்க உமது பணி! என்றென்றும் உமது வாசகி.

ஜெகப்பிரியா தங்கத்துரை -சவளக்கடை. 07.

□□

தினமுரசே தேன் முரசே,
பல துன்பங்களுக்கு மத்தியில் வாழும் எனக்கு நீ தரும் ஆக்கங்களை இரசிக்கச் செய்து என் சோகங்களை எல்லாம் மறக்கச் செய்யும் உன்னை நான் எப்படி வாழ்த்துவது...?

எம். எஸ். எப். அரபா ஸஹீத்-சீனக்கோட்டை.

□□

கயல் விழி கொண்டு வர்ண ஜாலத்துடன் வெளிவரும் முரசே! உறுதியாக விளங்கி வரும் என் அருமை முரசே!

நீ அள்ளிவரும் ஒவ்வொரு தலைப்பிலும் இடம்பெறும் ஆக்கங்களும் மிக மிக சிறப்பே! நான் முரசைக் கையில் எடுத்தால் இலக்கிய நயம் எனும் பகுதியை சுவையுடன் அருந்தி விட்டே ஏனைய அரசியற் கண்ணோட்டத்திற்குத் திரும்புவேன். படிக்கப் படிக்க தேவாமிர்தம் போல் விளங்குவதை உணர்கிறேன். உமது சேவை முழு உலகிற்கும்- குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும் உதவப் பிரார்த்திக்கின்றேன்.

எஸ். பரமேஸ்வரன்-அக்கரைப்பற்று-07.

□□

## வாசகர் சாலை

அன்பின் முரசே!
வாரந்தோறும் நல்ல தரமான-புதுமையான அம்சங்களை தரும் முரசே! உன்னில் அடங்கியுள்ள பல்சுவை அம்சங்கள் அனைத்தும் புதுமை. சுவைக்க சுவைக்க திகட்டாதவை. நீ இன்னும் தரமான செய்திகளை தந்து வாசகர்கள் மத்தியில் நிலைபெற வாழ்த்துகிறேன்.

வாழ்க உன் ஆக்கங்கள். வளர்க உன் புகழெங்கும்.

ஜெயமணி. மணிவண்ணன்
சின்னபாறவத்தை.

□□

அன்பின் முரசே,
சோகத்தில் வாழும் எங்களை வாரா வாரம் சந்தோசத்தின் எல்லைக்கே கொண்டு செல்கிறாய். உனக்கு எனது நன்றி. உனது பணி தொடரட்டும்.

கந்தப்பளை-பி. கே.

□□

முரசின் வளர்ச்சி வாரத்திற்கு வாரம் அதிகரிப்பது கண்டு ஆரம்ப கால வாசகர்களான எமக்கு மகிழ்ச்சியே. சென்ற வாரம் சிந்தியாவை காணோமே?

புத்தளம்-ஜவாத்.

□□

வாரம் ஒருமுறை மலரும் மலரே, நீ எந்நாளும் மலரமாட்டாயா? நீ தாங்கிவரும் கவிதைகள், இலக்கிய நயம், கதைகள் போன்றன இனிமையிலும் இனிமை.

ஸிஹாறா யூசுப்-அக்குறணை.

□□

தேனினும் இனிய திருவிருந்தே என் தினமுரசே, துன்பத்தில் துடிக்கும் எம்போன்ற ஜீவன்களுக்கு நீ அள்ளி வழங்கும் இன்பச் சுவையம்சங்கள் அனைத்தும் என்னைக் கவர்ந்தன.

அ. ஜெயந்தி
சங்கமித்தை மாவத்தை.



அன்பின் முரசே,
அழகு தமிழில் அனுப்பும் இலக்கிய நயம் என் நெஞ்சை கிள்ளியது. மாண்டுபோன காவியங்கள் என்று நினைத்த மகாபாரதம், மீண்டும் என் கரம் கிட்டும்போது மகிழ்ச்சி அடைகிறேன். தொடரட்டும் உன் நற்பணி.

வீ. மகாலச்சுமி
கொழும்பு-3.

□□

அன்பின் ப்ரிய முரசே,
உன் ஆக்கங்கள் அனைத்தும் பாலிலே கலந்த தேன்போல சுவைக்கின்றன. குறிப்பாக எக்ஸ்ரே ரிப்போர்ட், ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், தகவல் பெட்டி, பாப்பா முரசு போன்ற ஆக்கங்கள் சூப்பரிலும் சூப்பர். உன் பணி மேலும் வளர, வாழ என் வாழ்த்துக்கள்.

மா. சரஸ்வதி-புப்புரஸ்ஸ.

□□

வாரா வாரம் உன் சுவை அதிகரித்துக்கொண்டே போகிறது. நீ என் இதயத்தில் நீங்கா இடம் பிடித்துவிட்டாய். காரணம் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வாசிக்கத்தூண்டும் வசந்த மலர்கள். எந்நாளும் நீ வாழ என் வாழ்த்துக்கள்.

எம். எ. ப். பாதிமா வர்தா.

□□

அன்புள்ள முரசே,
எங்கும் உன் பெயர் ஒலிக்க, என்றும் நிலைக்க, எங்கள் மனதிலே அன்பைப் பெருக்க, பல்சுவைகளை என்றும் பொழிய வாரமலருக்கு எங்கள் அன்பான வாழ்த்துக்கள்.

எஸ். உதயகுமார்-மடுல்சீமா போஸ்ட்.

□□

என் மனசின் முரசே!
எங்கள் உள்ளங்களைக் கொள்ளையடித்து அத்தனை பெயரையும் இடைவிடாது காதலிக்கின்றாயே! அனைவரும் உனது அங்கங்களை மட்டுமே சுவைக்கின்றனர். நான் மட்டும் உன்னை முழுமையாக சுவைக்கின்றேன். ஏனெனில் உனது ஒவ்வொரு ஆக்கங்களும் தன்னிகரற்றது.

எஸ். எஸ். ராஜன்-கிரான்குளம்-07.

□□

இதயம் கவர் இனிய முரசே,
உன்னுடைய வருகை வசந்தங்கள். என்றும் என் மனதைக் கவர்கின்றன. பாப்பா முரசு, கவிதைகள், மற்றும் சிறுகதைகள், பல்சுவை அம்சங்கள் அனைத்தையும் தாங்கி வந்து என் மனதை மகிழவைக்கும் உனக்கு நலம்வாழ என்னாளும் என் வாழ்த்துக்கள்.

வி. சாந்தி-மாத்தளை.

www.padippakam.com

# இலங்கை மாதாவின் இதயக்கனி

# என்றுமிவர் கரத்தில் வெற்றிக்கனி!




போர் வெறிக்குப் பதிலாக, புன்னகை!

இனவாதத்திற்குப் பதிலாக இனங்களின் நேசம்!!

சூளும் இருள் விலக்க சமாதான சூரியன்!!!

# இத்தனைக்கும் ஓரே நம்பிக்கை எங்கள் சந்திரிக்கா

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

ஸ்பெஷல் ரிப்போர்ட் ஸ்பெஷல் ரிப்போர்ட் ஸ்பெஷல் ரிப்போர்ட்

# குண்டுவெடிப்பின் முன்னர் நடந்த ஒத்திகை

# வீடியோவில் சிரிக்கும் வெடிகுண்டுப் பெண்?!

(அலுவலக நிருபர்)

## முதலில் நோட்டம்

**பா**லத்துறை குண்டுவெடிப்பில் மனிதக் குண்டாக இருந்தது ஒரு பெண் என்றே நம்பப்படுகிறது.

பாலத்துறை குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற காமினி திசாநாயக்காவின் கூட்டங்களுக்கு கொலையாளிகள் வந்திருக்கலாம். தாக்குதல் நடத்துவதற்கான திட்டத்தை வகுக்க நோட்டம் செலுத்தியிருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

அதனையடுத்து கொழும்பில் காமினி திசாநாயக்கா கலந்துகொண்ட ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட வீடியோப் படங்கள் விசாரணையாளர்களால் அலசப்பட்டன.

இதேவேளையில் ஐக்கிய தேசியக் கட்சியினரும்- முக்கியமாக காமினியின் நெருங்கிய வட்டாரங்களும் வீடியோப் படங்களை ஆராய்ந்தனர்.

இதனியிடையே பாலத்துறை குண்டு வெடிப்பின் பின்னர் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சிதறுண்ட தலை பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை மூலமாக ஒன்றுசேர்க்கப்பட்டது. அதன் புகைப்படங்களும் வெளி வந்தன.




காமினியின் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களை கூர்ந்து கவனித்ததில் அந்தத் தலையோடு ஒப்பிடக்கூடிய ஒரு பெண் அடையாளம் காணப்பட்டார்.

குறிப்பிட்ட வீடியோ படத்தை முரசின் அலுவலக நிருபர் நேரடியாகப் பார்வையிட்டார்.

கொழும்பு மருதானையில் நடைபெற்ற காமினி திசாநாயக்கா கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அப்பெண்ணும் பெண்கள் மத்தியில் அமர்ந்திருக்க காணப்படுகிறார்.

## சிரித்தபடி இருக்கிறார்

கூட்டத்தினர் சிரிக்கும்போது அப்பெண்ணும் சிரித்தபடி அமர்ந்திருக்கும் போதும் மேடையை கூர்ந்து கவனிப்பது புலப்படுகிறது.

சிகப்பு நிற சட்டை அணிந்திருந்த அப்பெண் கூட்டத்தினரோடு சேர்ந்து சிரிக்கும்போதும் இயல்பான சிரிப்பாக அது தோன்றவில்லை.

## இரகசிய சமிக்ஞையாக...?

ஒரு கட்டத்தில் அவர் தனது தலையை தொட்டுக்கொள்கிறார். கூட்டத்தின் மத்தியில் அவரது சகா வேறு எங்காவது இருந்திருக்கலாம். அவருக்கு சமிக்ஞை காட்டும் சைகை மூலமான ஒரு முயற்சியாக அது இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

வீடியோவில் 3-3 1/2 நிமிஷங்கள் அப்பெண் அமர்ந்துள்ள பகுதி பதிவாகியிருக்கிறது. அதனால் அந்தப் பெண்ணின் தோற்றத்தை தெளிவாக அறியக்கூடியதாக உள்ளது.

காமினி கொலை விசாரணைக்கு மருதானைக் கூட்டத்தின் வீடியோப்படம் மிக உபயோகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

## ராஜீவ் கொலையில்....

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் கொலையின் புலன் விசாரணைகளுக்கும் வீடியோப்படங்களே உபயோகமான தடயங்களாக இருந்தன.

ராஜிவ் கொலைக்கு முன்னர் வி.பி.சிங் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றுக்கு ஒற்றைக் கண் சிவராசன் என்பவர் சென்றிருந்தார்.

வி.பி.சிங்கின் கூட்டம் நடைபெற்ற வீடியோ கசட்டை தற்செயலாக பார்வையிட்ட இந்திய பத்திரிகையாளர் ஒருவர் சிவராசனை இனம் கண்டதும் வீடியோ கசட்டை சிறப்பு புலனாய்வு பிரிவிடம் ஒப்படைத்தார்.

அதனையடுத்தே குண்டுவெடிப்பில் ராஜிவ் கொல்வதற்கு முன் பல்வேறு அரசியல் கூட்டங்களில் ஒத்திகை பார்க்கப்பட்டிருக்கலாம் என்று கண்டறியப்பட்டது.

இப்போது காமினி கொலை விவகாரத்திலும் முன்கூட்டியே ஒத்திகை பார்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும் ஆதாரம் கிடைத்துள்ளது.

# பிரபாவின் அவசர வேண்டுகோள்

## போருக்கும்-நீதி-நிர்வாக சேவைக்கும் நிதி வேண்டும்!

## "விற்பனை வரியையும் நீக்க முடியும்"

**வெ**ளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களிடம் விடுதலைப் புலிகள் அமைப்பினர் தமிழீழத் தேசியப் பாதுகாப்பு நிதி கேட்டு அவசர வேண்டுகோள் விடுத்திருப்பது பற்றி ஏற்கனவே முரசு செய்தி வெளியிட்டிருந்தது.

நிதி திரட்டலில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளால் தற்போது அந்த அமைப்பின் தலைவர் திரு.வே.பிரபாகரனது வேண்டுகோள் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு திரு.பிரபாகரன் விடுத்துள்ள அந்த வேண்டுகோளில் பின்பவருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

"வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழீழத் தவரும் எமது நாட்டின் பிரசைகளே. அவர்கள் எமது மண்ணின் நிகழ்வுகளை வந்து பார்க்கவேண்டும்.

"வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமிழீழ மண் மீட்புப் போரில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியது அவர்களது தார்மீகக் கடமையாகும்.

எமது நாட்டின் மண்மீட்புப் போரையும், நாட்டின் அரச கருமம், நீதி, நிர்வாகச் செலவுகளையும் தமிழீழ மக்களே சுமக்கின்றார்கள்.

காவல்துறை, நீதிமன்றங்கள், வைப்பகம் (வங்கி) இவற்றுடன் இன்று தமிழீழ நிர்வாகச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பணியாற்றுபவர்கள் யாவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டே சேவையில் அமர்த்தப்படுகின்றனர். இதற்கான செலவுகளின் தேவை விரிந்து கொண்டே போகின்றது. தமிழீழத்திற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் எல்லோரும் தமது தாய் மண்ணிற்காக ஒருமித்து பங்களிப்பார்களேயானால் விற்பனை வரியை- போராட்டத்தில் பல துன்பங்களின் மத்தியில் தாய் மண்ணில் வாழும் மக்களிடம் விதிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படாது."

இவ்வாறு வே.பிரபாகரன் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

# வடக்கு-கிழக்கு-மலையகம்-

# நம்பியிருக்கலாம் சந்திரிக்கா!

(அரசியல் நிருபர்)

**எ**திர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இன மக்களின் வாக்கு வங்கியை கைப்பற்றும் திட்டமெதுவும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் கிடையாது.

சிறுபான்மை இன மக்களது நம்பிக்கையை பெற்றுள்ள வேட்பாளரை நிறுத்தத் தவறியமை அக் கட்சியின் தேர்தல் வியூகம் பலவீனமானதாக இருப்பதையே வெளிக்காட்டுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவின் பின்னர் சிறுபான்மை இன மக்களை கவரக்கூடிய ஒரு தலைவரை முன் நிறுத்துவதில் ஐ.தே.கட்சி தாமதித்துவிட்டது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் தலைமையோடு சிறுபான்மை மக்களது நம்பிக்கையை ஐ.தே.கட்சி இழக்கத் தொடங்கியது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மீதிருந்த அபிமானத்தின் அடிப்படையிலான சிறுபான்மை இன வாக்காளர்களது வாக்குகளையே கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது ஐ.தே.கட்சி பெற்றுக்கொண்டது.

மலையகத்தில் இ.தொ.கா ஆதரவும் சிறுபான்மை மக்களது வாக்கு வங்கியை பெற்றுக்கொடுத்திருந்தது.

கடந்த பொதுத் தேர்தலில், 1977ம் ஆண்டுக்கு முற்பட்ட சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலம் பற்றிய அச்சங்களும் மலையக தமிழ் மக்கள் ஐ.தே. கட்சியை ஆதரிக்க காரணமாகவிருந்தன.

ஆனால்-இப்போது அத்தகைய அச்சங்கள் பெரும்பாலும் விலகியுள்ளன.

வடக்கு-கிழக்கிலும், மலையகத்திலும் உள்ள சிறுபான்மை மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரைவிட திருமதி சந்திரிக்காவைத்தான் பெரிதும் விரும்புகின்றனர் என்று கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள வாக்காளர்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கூடுதலான செல்வாக்கு காணப்படுகிறது. வடக்கு-கிழக்கு பிரிப்பு பற்றி ஐ.தே.கட்சி வலியுறுத்திவருவதும் அதற்குரிய முக்கிய காரணமாகும்.

வடக்கு-கிழக்கு-மலையகம் தவிர்ந்த பகுதிகளைப் பொறுத்தவரை சிறுபான்மையின மக்களது வாக்கு வங்கி இரு தரப்புக்கும் சமபலமான நிலையைக் கொண்டிருக்கிறது.

கொழும்பு மாவட்டத்தை பொறுத்தவரை பாராளுமன்ற தேர்தலில் தமிழ் பேசும் வாக்காளர்கள் அநேகமானோர் ஐ.தே.கட்சியையே ஆதரித்தனர். ஆனால் இம்முறை அதில் பெருமளவான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அமைச்சர் பௌஸி, பிரதி அமைச்சர் அலவி மௌலானா ஆகியோர் தென்னிலங்கையில் தமிழ் பேசும் மக்களது வாக்குகளை திரட்டிக்கொள்வதில் முக்கிய பாத்திரம் வகிக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. ,புளொட், முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய முக்கியமான அரசியல் கட்சிகள் பொதுஜன முன்னணிக்கே ஆதரவளிக்கின்றன.

# நிறுத்திவைத்த ஆயுதக் கொள்வனவுக்குப் பச்சைக்கொடி!?

## குண்டுவெடிப்பையடுத்து படைகளை பலப்படுத்தத் திட்டம்!

(அரசியல் நிருபர்)

**ர**ஷியாவிலிருந்து சுமார் மூவாயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதியான ஆயுதக் கொள்வனவுக்கு முன்னைய அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தது.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் பிரதமர் சந்திரிக்காவால் அந்த ஆயுதக் கொள்வனவு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

பாலத்துறை குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து நிறுத்திவைக்கப்பட்ட ஆயுதக் கொள்வனவுக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. டாங்கிகள், யுத்தக் கப்பல்கள், விமானப்படை விமானங்கள் போன்றவையும் ஆய்தக் கொள்வனவில் அடங்கியுள்ளன.

கொழும்பின் ஆங்கில வார ஏடான 'சண்டே லீடர்' பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி வெளியிட்டுள்ள தலைப்புச் செய்தியில் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது. இதேவேளை பாதுகாப்புப் படையினர் மத்தியில் நம்பிக்கைகளை ஏற்படுத்துவதிலும், தப்பான அபிப்பிராயங்களை நீக்குவதிலும் புதிய அரசாங்கம் அக்கறைகாட்டுகிறது.

பி.பி.சி.தொலைக்காட்சிக்கு பிரதமர் சந்திரிக்கா அளித்த பேட்டியொன்றில் படையினர் தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தன.

குண்டுவெடிப்பையடுத்து பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்திய பிரதமர் படையினர்மீது தனக்கு நம்பிக்கை இருப்பதாக தெரிவித்தார். அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் பிரதமர் படையினர்மீது நம்பிக்கை தெரிவித்து வெளியிட்ட கருத்தை முக்கியத்துவப்படுத்துமாறு அரசாங்கத் தரப்பில் இருந்து உத்தரவுகள் பறந்தன என்றும் தெரியவருகிறது.

பி.பி.சி.பேட்டியால் ஏற்பட்ட தவறான அபிப்பிராயத்தை போக்கவே அவ்வாறு செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது.

பேச்சு முயற்சிகளில் அரசாங்கம் நம்பிக்கையிழக்கவில்லை. அதே சமயம் படையினரை உற்சாகமிழக்காமல் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்திருக்கிறது.

குண்டுவெடிப்பின் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய நிலைமை காரணமாக படையினரின் கருத்துக்கு செவிசாய்க்க வேண்டியதும் அவசியமாகியிருக்கிறது.

இதனால் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் உடனடியாக போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியங்கள் தற்போது தென்படவில்லை.

யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதை விடயத்தில் பூநகரி இராணுவ முகாமை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று புலிகள் வற்புறுத்திவருகின்றனர்.

அது குறித்து அரசு பரிசீலிப்பதாக பி.பி.சி. பேட்டியில் பிரதமர் தெரிவித்திருந்தார். ஆனால், பாலத்துறை குண்டுவெடிப்பையடுத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக படையினரை தற்போதுள்ள நிலைகளில் இருந்து விலக்கிக் கொள்ளும் முடிவை அரசாங்கம் மேற்கொள்ள முடியாமல் இருக்கும்.

# சந்திரிக்காவின் பக்கமே தொண்டா!

## பதவியேற்பால் பொ.ஐ.முன்னணிக்கு லாபம்!

(அரசியல் நிருபர்)

**இ**.தொ.காங்கிரசின் தலைவர் திரு. தொண்டமான் பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் உல்லாசப் பயணத்துறை அமைச்சராகியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திசாநாயக்கா உயிரோடிருந்த போதே இ.தொ.காவும் பொ.ஜ.முன்னணியும் அமைச்சர் பதவி தொடர்பாக பேச்சு நடத்தியிருந்தன.

தோட்டத்துறை அமைச்சுப் பதவியை இ.தொ.காவினர் எதிர்பார்த்ததாகத் தெரிய வந்தது.

எனினும், இ.தொ.காவுக்குள் ஒரு சாரார் திரு.காமினியின் பக்கம் நின்றமையால் நடுநிலையான முடிவை எடுக்க வேண்டியேற்பட்டதாக கூறப்படுகிறது.

காமினியின் மரணத்தின் பின்னர் இப்போது, திரு.தொண்டமான் அமைச்சராகியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலைப் போக்கு தொடரும் என்றும் அறிவித்துள்ளார். இது முரண்பாடாக இருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

எப்போது பொதுஜன முன்னணி அரசில் அவர் அமைச்சர் பதவி ஏற்றாரோ அப்போதே இ.தொ.கா பொதுஜன முன்னணி அரசின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதாக அர்த்தமாகிவிட்டது.

தமது தலைவர் அமைச்சராக உள்ள அரசாங்கத்தையே இ.தொ.காவின் ஆதரவாளர்களும் ஆதரிப்பார்கள் என்பதும் இயல்பானதே.

ஜனாதிபதித் தேர்தலில் மக்களிடம் முடிவை எடுக்கும் பொறுப்பை ஒப்படைப்பதாக அமைச்சர் தொண்டா தெரிவித்துள்ளார். மக்களின் முடிவுக்கு முன்னரே அவர் அமைச்சராகியும் உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் திரு.தொண்டமானை அமைச்சராக பதவியேற்கச் செய்தமை மூலம் மலையக தமிழ் வாக்காளர்களுக்கு தொண்டா தமது பக்கம் இருப்பதை பொதுஜன முன்னணி தெரிவித்திருக்கிறது.

# போட்டி வந்தால் ஆதரவு ரணிலுக்கு!

(நமது நிருபர்)

**எ**திர்கட்சித் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் திரு.ரணில் விக்கிரமசிங்கா தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆயினும், திரு.ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டதை பாராளுமன்ற சபாநாயகரிடம் உத்தியோக பூர்வமாக தெரிவிப்பதில் ஐ.தே.கட்சி தாமதம் செய்திருந்தது.

நம்பவர் முதலாம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முதல்நாள் நடைபெற்ற பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகர் கே.பி.இரத்நாயக்கா அவர்கள் திரு.ரணிலிடம் அதனைச் சுட்டிக்காட்டியதாக அறியப்படுகிறது.

பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவர் விடயத்தில் போட்டி ஏற்பட்டால் திரு.ரணில் விக்கிரமசிங்காவை ஆதரிப்பதற்கு எதிரணியில் உள்ள தமிழ் கட்சிகள் தயாராக இருந்தன என்று தெரிகிறது.

# "யானையை அடக்கிய அரியாத்தை"

## யாழ்ப்பாணத்தில் நூல் வெளியீட்டு விழா!

**'யா**னையை அடக்கிய அரியாத்தை' என்னும் நூல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை 30.10.94 அன்று யாழ்ப்பாணம் நல்லூரில் வெளியிடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடுதலைப் புலிகள் கலைப் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டின் பேரில் நூல் வெளியீட்டுவிழா நடத்தப்பட்டது.

அரியாத்தை என்பவர் ஒரு பெண்மணியாவார். அவர் யானையை அடக்கி வெற்றி கொள்ளுவதே நூலில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

செல்லையா [illegible] என்பவர் அந்த நூலை எழுதியுள்ளார்.

நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய புலிகள் இயக்க கவிஞர் புதுவை இரத்தினதுரை சாகரவர்த்தனா கப்பலை மோதித் தகர்த்த கரும்புலிகளான நளாயினி கட்டளைக் கப்பலை காங்கேசன்துறையில் மோதித் தகர்த்த கப்டன் அங்கையற்கண்ணி ஆகியோரை நினைவூட்டிப் பேசினார்.

'யானையை அடக்கிய அரியாத்தை' என்னும் இந்த நூல் வெளியீட்டு விழா காமினியின் இறுதிச் சடங்கு நடந்த மறுநாள் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


# அண்மைக் காலமாக அவள் ஒதுங்கி வாழ்கிறாள்...






முன்னரெல்லாம் மாலை வேளையில் வெளியே உலாவச் செல்வதில் அவளுக்கு அலாதிப் பிரியம். ஆனால் இன்று... கழுத்தில் ஸ்கா..பை சுற்றிய வண்ணம் வீட்டோடு ஒதுங்கிவிட்டாள்.

உண்மை அவளுக்குத்தான் தெரியும். அவளது அழகிய கழுத்தை தொண்டைக் கழலை நோய் பற்றிக் கொண்டுவிட்டது. இதனை மறைக்கவே வேறு வழியின்றி இந்த முயற்சி!

தொண்டைக் கழலை உடல் அழகை மட்டும் பாதிப்பதில்லை அது தொண்டையின் உள் நோக்கி வளரும் பட்சத்தில் உயிருக்கும் ஆபத்து விளைவிக்கலாம்.

குரல்வளைச் சுரப்பியின் வீக்கத்தினால் ஏற்படும் தொண்டைக் கழலை நோய்க்கு அயடின் குறைபாடு ஒரு முக்கிய காரணமாகும்.

எனவே உங்கள் சமையலுக்கு அயடின் கலந்த உப்பையே பாவியுங்கள். அயடின் கலந்த உப்பு அயடின் குறைபாட்டு நோய்களைத் தடுக்கும்.

இதோ ஒரு நல்ல செய்தி!

அயடின் கலந்த உப்பு இப்பொழுது நாடெங்கிலும். தாராளமாகக் கிடைகிறது.

நலம் தரும் செய்தியை அறிந்து நலமுடன் வாழுங்கள்.

## அயடின் கலந்த உப்பு




சுகாதார அமைச்சு.
லங்கா சோல்ட் லிமிட்டெட் /யுனிசெப்

Grant McCann

கூட்டுச்சதி

# குற்றச்சாட்டும் புலிகளின் மௌனமும்!

எக்ஸ்ரே ரிப்போர்ட் - நாரதர்



> "ராஜீவ் கொலை விவகாரத்தில் உடன் மறுப்பு வெளியிட்ட புலிகள்; காமினி கொலை விவகாரத்தில் மௌனம் சாதித்து அரசு திணறுவதை இரசிக்கிறார்கள்"

கடந்த மாகாணசபைத் தேர்தல் சமயத்தில் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டார்.

மேல் மாகாண சபையில் திருமதி சந்திரிக்கா முதலமைச்சராவதற்கு லலித் கொலையால் ஏற்பட்ட அனுதாப அலையும் கைகொடுத்தது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வந்தமையால் ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் செல்வாக்குமிக்க இரட்டையர்களாக இருந்தவர்கள் லலித்-காமினி.

லலித் கொல்லப்பட்டவுடன் அதற்கு காரணம் புலிகளே என்று கூறப்பட்டதை உறுதியாக மறுத்தவர் காமினி.

லலித் கொலைக்கு பிரேமாவே காரணம் என்று முன்னணியில் நின்று காமினி பிரசாரம் செய்தார்.

எங்கும் வெள்ளைக் கொடிகள். லலித் அத்துலத் முதலியின் படங்களோடு பல்லாயிரம் சுவரொட்டிகள்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான காமினிக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரசார மேடைகளில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார இயந்திரமே ஆட்டம் காணும் வகையில் லலித் கொலை விவகாரம் அனுதாப அலையை வீசியடித்தது.

மக்களின் நாடித்துடிப்பையறிந்து பிரசார இயந்திரத்தை முடுக்கிவிடும் வித்தையில் கைதேர்ந்தவர் பிரேமா.

மக்களை சுலபமாகக் கவரும் பிரசார தந்திரங்களில் தமிழ் நாட்டில் எம்.ஜீ.ஆரை அடிக்க ஆள் கிடையாது.

அதுபோல இலங்கையில் பிரேமாவை வெல்ல ஆள் இல்லை.

அப்படிப்பட்ட பிரேமதாசா தேர்தல் நேரத்தில் லலித் கொலைக்கு காரணமாக இருந்திருக்க முடியுமா? தேர்தல் நேரத்தில் எக் கட்சியின் வேட்பாளர் கொல்லப்படுகிறாரோ அக் கட்சிக்கே அனுதாப அலை சாதகமாக மாறும் என்கின்ற மிக சாதாரண சூத்திரத்தை பிரேமா அறியமாட்டார் என்று யாராவது நினைக்க முடியுமா?

விசயம் என்னவென்றால், பிரேமா மீது குற்றம்சாட்டியவர்களுக்கு பிரேமா காரணமல்ல என்று தெரிந்தே இருந்தது. காமினியும் அதில் அடக்கம்.

ஆனால், லலித் கொல்லப்பட்டதால் உணர்ச்சிவசப்பட்டிருந்த அவரது ஆதரவாளர்களுக்கு பொறுத்து, பகுத்து ஆராய நேரமிருக்கவில்லை.

இப்போது காமினி கொல்லப்பட்டிருக்கிறார். இதுவும் முக்கியமான தேர்தல் நேரம்தான்.

பிரதமர் சந்திரிக்காவும்-புலிகளும் சதிசெய்து காமினியை கொன்றுவிட்டார்கள் என்று ஐ.தே.கட்சி சொல்கிறது.

ஆனால், உண்மையில் காமினி கொலையால் பொதுஜன முன்னணிதான் திணறிக் கொண்டிருக்கிறது.

அனுதாப அலை தமது செல்வாக்கை அடித்துச் சென்றுவிடுமோ என்று பொதுஜன முன்னணி பரபரக்கிறது.

காமினிக்கு அஞ்சலி செய்வதற்காக நீண்ட கியூவரிசையில் மக்கள் காத்து நின்றார்கள்.

வடக்கு-கிழக்கு தவிர நாடெங்கும் வெள்ளைக்கொடிகள் சோகம் அறிவித்துக் கொண்டிருந்தன.

அனுதாப அலையை வாக்குகளாக மாற்றுவது பற்றி ஐ.தே.கட்சி தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து கணக்குப் போட்டுப் பார்த்த பொதுஜன முன்னணி சிங்கள வாக்காளர்கள் மத்தியில் தனக்குள்ள ஆதரவில் ஒரு சரிவு ஏற்படலாமோ என்று யோசிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

செய்திச் சுதந்திரம் பற்றிய பேச்சுக்களையெல்லாம் தற்காலிகமாக மூட்டைகட்டி வைத்தார்கள்.

ரூபவாஹினி தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களை ஐ.தே.கட்சிக்காரர்கள் சிலர் தாக்கியதை ஒரு சாட்டாக வைத்து காமினியின் அஞ்சலி நிகழ்ச்சிகள் ரூபவாஹினியில் தடை செய்யப்பட்டன.

அரச பத்திரிகைகளில் காமினியின் இறுதிச் சடங்குச் செய்திகள் அமுக்கப்பட்டன.

காமினியின் பூதவுடலுக்கு பிரதமர் சந்திரிக்கா அஞ்சலி செய்யும் படத்தை மட்டுமே அரச பத்திரிகை ஒன்று வெளியிட்டது. அதன் மூலம் சந்திரிக்கா நிரபராதி என்று காட்ட முற்பட்டார்களே தவிர, காமினியின் அஞ்சலியில் திரண்ட மக்கள் கூட்டத்தைப் பற்றி மூச்சே விடவில்லை.

அதிலும் ஜனாதிபதி கலந்துகொண்ட இறுதிச் சடங்கையே ரூபவாஹினி புறக்கணித்ததுதான் வேடிக்கை.

படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்ட நிலையில் ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யச் செல்வது எப்படி என்பதுபோல அரச தரப்பால் கேட்கப்பட்டது.

அப்படியானால் அரச பத்திரிகையாளர்களுக்கு என்ன நடந்தது? செய்தியாளர்கள் தாக்கப்படுவது கடுமையான கண்டனத்திற்குரியதுதான்.

ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் ரூபவாஹினி படப்பிடிப்பாளர்களை தாக்கியது அநாகரிக மான செயல்- ஜனநாயக மீறல்.

ஆனால், தடைகளைக் கண்டு- ஆபத்துக்களை கண்டு செய்தியாளர்கள் ஓடி ஒழிப்பது கிடையாது. செய்திச் சுதந்திரம் என்பது அதற்காகப் போராடுவதும் ஆகும்.

சட்டை கசங்காது என்பதற்கு உத்தரவாதம் இருந்தால் மட்டுமே செய்தி சேகரிக்கச் சொல்வோம் என்று பத்திரிகையாளர்கள் கூறுவது கிடையாது.

ஆக மொத்தத்தில், செய்திச் சுதந்திரமா? ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப் பெறுவதா என்ற கேள்வி எழுந்த இக்கட்டான நிலையில் பொதுஜன முன்னணி வாக்குகள் பெறுவதற்கு முன்னுரிமை கொடுத்துவிட்டது என்பதே மெய்.

முன்னர் டென்சில் கொப்பேகடுவ மரணச் சடங்கில் நடந்த கல்வீச்சுக்களையும் மறந்துவிட முடியாது. அமைச்சர் ஒருவர் உட்பட ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் பலர் அப்போது தாக்கப்பட்டனர்.

லலித் மரணச்சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற அன்றைய பாதுகாப்புச் செயலர் ஜெனரல் ரணதுங்காகூட தாக்கப்படும் அபாயத்தில் இருந்தார். பின்னர் லலித் இல்லத்தின் பின்புறம் வழியாக அவர் வெளியேற வேண்டியிருந்தது.

அதனால், லலித் மரணச் சடங்கிற்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்று பாதுகாப்புப்படை தரப்பு மறுத்திருந்தால் அன்றைய எதிரணியினர் அதனை நியாயம் என்று சொல்லியிருக்க முடியுமா?

காமினி கொல்லப்பட்டவுடன் இலங்கை வானொலியும், தொலைக்காட்சியும் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவித்தன.

தொலைக்காட்சியில் காயப்பட்டவர்கள் இருந்த மருத்துவமனைகூட காண்பிக்கப் பட்டது.

சில சமயம் கொந்தளிப்பு ஏற்படலாம்- இனப் பதட்டம் ஏற்படலாம் என்றுகூட யோசிக்காமல் செய்திச் சுதந்திரம் என்று எல்லாவற்றையும் காண்பித்தார்கள்.

ஒ.சி அபயகுணசேகராவை இலங்கை வானொலி அவசரமாக தனது செய்தியில் மரணமாக்கியது. பின்னர் மன்னிப்புக் கோரியது.

இந்த செய்திச் சுதந்திர கூத்துக்கள் யாவும் யாரோ அனுதாப அலை பற்றி எச்சரித்துவிட்டதால் திடீரென்று அடங்கிப் போனதுதான் சுவாரசியம்.

செய்திச்சுதந்திரம் என்ற ரீதியில் உண்மைக்கு மாறான செய்திகளை அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பலமுறை வெளியிட்டபோதும் கண்டுகொள்ளாமல் இருக்கப்பட்டது.

ஆனால், காமினி மரணச் சடங்கு விடயத்தில் உள்ளதை உள்ளபடி சொல்லும் விடயத்தில் மட்டும் தடை போடப்பட்டது.

காமினி மரணத்தின் பின்னர் அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் யாவும் பொதுஜன முன்னணியின் உத்தியோகபூர்வ பிரசார சாதனங்கள் போலவே தெரியத் தொடங்கிவிட்டன.

ஆனால், உண்மையான விசயம் என்னவென்றால் பொதுஜன முன்னணியை தர்ம சங்கட நிலைக்கு உள்ளாக்கியதும் இதே அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள்தான்.

பேச்சுவார்த்தை தொடங்க முன்னரே புலிகள் சமாதான வழிக்கு வந்துவிட்டார்கள். பிரபாகரன் பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார். அது முக்கிய கடிதம். பிரதமரை பாராட்டியிருக்கிறார். எல்லாம் மிகச் சுலபமாக நடந்துவருகிறது. பாலாறும் தேனாறும் யாழ்ப்பாணத்தில் ஓடுகிறது. அதிலே படகுச் சவாரி செய்து கொண்டே அரசும் புலிகளும் பேசிக்கொள்ளலாம் என்பது மாதிரியெல்லாம் மக்கள் நினைக்கக்கூடிய வகையில் பிரசாரம் செய்தார்கள்.

அந்த பிரசாரத்தில் கூறப்பட்ட சில விடயங்களை அரச தரப்பினரிடம் கேட்ட போது அவர்களே 'அப்படியா' என்று ஆச்சரியப்பட்டார்கள். அந்தளவுக்கு எள் என்றால் எண்ணெயாகி நின்றால்தான் லாபம் என்ற ரீதியில் சிந்திக்கின்ற யாரோ சிலரின் மூளைகள் அரசாங்கத்தை தர்ம சங்கடத்தில் சிக்கவைத்துவிட்டன.

அரசும்-புலிகளும் நெருக்கமாகி விட்டார்கள் என்ற எண்ணத்தை பிரசாரங்கள் ஏற்படுத்தியிருந்த நிலையில்தான் பாலத்துறையில் குண்டு வெடித்தது.

அதிர்ச்சியடைந்த அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் உத்தியோகபூர்வமற்ற ஒரு செய்தியை புலிகளின் மறுப்பாக தலைப்புச் செய்தியில் கூறவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இதனை எழுதிக்கொண்டிருக்கும் நேரம் வரை காமினி கொலையை, புலிகள் உத்தியோக பூர்வமாக மறுக்கவில்லை. மாறாக அரசாங்கம் திணறுவதை சுவாரசியமாக இரசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது.

அதே சமயம், பிரதமர் சந்திரிக்காவும்-புலிகளும் கூட்டுச் சதி என்று ஐ.தே.கட்சி சொல்லுவதும் புலிகளின் மௌனத்தால் அடிபட்டுப்போயிருக்கிறது.

அனுதாப வாக்குகளே ஐ.தே.கட்சியின் பெரிய நம்பிக்கையாக இருப்பதால் காமினி கொலையில் அரசாங்கத்தையும், திருமதி சந்திரிக்காவையும் வேண்டுமென்றே இழுத்துவிட்டு முடிச்சுப் போடுகிறார்கள்.

காமினி கொலைக்கு புலிகள் காரணமல்ல என்று மறுப்பதில் புலிகளைவிட அரசாங்கமே அதிக அக்கறை காட்டுவது 'ஐ.தே.கட்சியின் குற்றச்சாட்டில் உண்மையிருக்குமோ? இல்லையெனில், புலிகளை பாதுகாப்பதுபோல அரசாங்கம் ஏன் நடந்துகொள்ளவேண்டும்' என்று சாதாரண சிங்கள வாக்காளர்களை யோசிக்க வைத்துவிடும்.

ஆனாலும், அரசாங்கத்திற்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய பிரதமர் சந்திரிக்கா, சமாதானம் தோன்றும் என்று நம்பிக்கை வெளியிட்டார். நெல்சன் மண்டேலா போன்றவர்கள் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு முன்வந்தது போல பிரபாகரனும் வரலாம் என்று கூறினார்.

இப்போது போய் பிரபாகரன்தான் குண்டுவெடிப்புக்கு காரணம் என்று எந்த முகத்தோடு கூற முடியும்?

ஆனால், புலிகள் பிரதமர் சந்திரிக்காவின் தர்மசங்கட நிலையைத் தவிர்ப்பதற்கு ஒரு துரும்பைக்கூட எடுத்துப்போடவில்லை.

பிரதமரில் நம்பிக்கை தெரிவித்தார்- நம்பிக்கையோடு இருக்கிறார் என்று பிரசார சாதனங்களால் சொல்லப்பட்ட பிரபாகரன் மௌனமாக இருக்கிறார்.

ராஜீவ் கொலை விவகாரத்தில்கூட புலிகள் மறுப்பறிக்கைகளை உடனே வெளியிட்டனர். வெளியுலகில் இருந்து தமக்கு நெருக்கடி ஏற்படும் என்ற நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்தும், இலண்டனிலிருந்தும் புலிகளது மறுப்பறிக்கைகள் வெளியாகியிருந்தன.

தமது இயக்கத்துக்கு நெருக்கடி ஏற்பட்ட போது மறுப்பறிக்கைவிட்ட தீவிரத்தை தற்போது அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள போது புலிகள் ஏன் காட்டவில்லை என்று கேட்பதில் நியாயமிருக்கிறது.

பிரதமர் சந்திரிக்காமீது புலிகளுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் சந்திரிக்காவின் கரத்தை பலமாக்க உரிய நேரத்தில் கைகொடுக்க வேண்டும்.

காமினி கொலையில் புலிகள் தொடர்பான சந்தேகத்தால் அரசாங்கமும்,

(6ம் பக்கம் பார்க்க)



மறைந்தவரின் இறுதி அஞ்சலி நேரடி அஞ்சலின் போது தனியார் தொலைக்காட்சி நல்லா கஷ்டப்பட்டுப்போச்சு. அனுபவம் இன்மைதான் காரணமாம். மறைந்தவர்மீது அனுதாப முள்ளதாலைதான் அதிகார மட்டத்திற்கும் பயப்பிடாமை அஞ்சல் செய்தவையாம். இளம் தலைவரின் அஞ்சலி உரை தொடங்கினவுடனை அவர் முகமே திரையிலை தெரியேல்லை. குரல் மட்டுமே கேட்டது. தொழில்நுட்ப கோளாறாம். உண்மைதானோ?

நடுநிலை என்று கூறிக்கொள்ளும் வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்றுக்கு காமினி கொலை சூத்திரதாரிப் பெண் மருதானைக் கூட்டத்திலை கலந்துகொள்ளும் வீடியோ படத்தை பச்சை அணி கொடுத்ததாம். ஆனால் தங்கடை 24 மணிநேர செய்திச் சேவையிலை காட்ட மறுப்பு தெரிவிச்சப்போட்டினமாம். பீப்பீபீ ஐ.ஸீ! இதுதான் நடுநிலையோ?

கட்சி கொடுத்த நிதியை விட மறைந்தவர் 50 இலட்சத்திற்கு மேலே சொந்தமாகவும் செலவு செய்திருந்தாராம். அந்த செலவுக் கணக்கையும் கையிலை வைச்சுத்தான் மறைந்தவரின் 'வீர'மான மைத்துனர் மல்லுக்கட்டினவராம். செலவழிச்சது நாங்கள். அதனாலை அவரது குடும்பத்தில் இருந்தே வேட்பாளர் வரவேண்டும் எண்டதுதான் அவர் பக்க வாதமாக இருந்ததாம்.

திருவான மலை நகர தலைவர் இந்த முறை பச்சை அணிக்கு பள்ளியெழுச்சிபாடிக்கொண்டிருக்கிறார். சென்ற தேர்தலில் பச்சைக் கட்சியை அவர் கிழிகிழியெண்டு கிழிச்சதை சனம் மறக்கேல்லை. திரு மலையிலை பச்சைக்கட்சி முக்கியஸ்தர் ஒருவர் என்ன சொன்னவர் தெரியுமோ? "பார்த்தியளே, போன முறை என்னை வசைபாடிப்போட்டு இந்தமுறை அவர் மேடையிலை ஏறி வாழ்த்திப்பேசுறார்" என்ன செய்யிறது இதுதான் பாருங்கோ அரசியல்.

## அதிரடி அய்யாத்துரை

புதிய வேட்பாளரின் பெயர் தனது பெயர் மாதிரி இருப்பதால் அம்மையார் எரிச்சல்பட்டுப் போனாராம்.

அரச ஆங்கில ஏடுகளில் மாலைப் பதிப்பாக வரும் ஏட்டின் ஆசிரியர் திடீர் கட்டுப்பாடுகளை விரும்பவில்லையாம். ராஜினாமா செய்ய நினைச்சவராம். பிரதம இடத்தில் இருந்து "அவசரப்படவேண்டாம் கோபப்படவேண்டாம்" எண்டு சொல்லப்பட்டதாலை முடிவை தள்ளிப்போட்டிருக்கிறாராம்.

தடுப்புக்காவலை தளர்த்தினதுதான் குண்டுவெடிப்புக்கு காரணம் எண்டு பச்சை அணி சொல்லுறது பச்சைக்கலர் பொய்தானே! தடுப்புக்காவல் கூடங்கள் 'ஹவுஸ் ஃபுல்லா' இருக்கேக்கை மட்டும் கொழும்பிலை குண்டு வெடிக்கேல்லையோ? உதென்ன கதை?

குண்டுவெடிப்பு நடந்தவுடனை கொழும்பிலை எங்கடை தமிழ் சனம் கலங்கித்தான் போச்சு. ஆனால் சுவிசிலை இருந்து திருப்பி அனுப்பப்பட இருந்த எங்கடை ஆட்களுக்கு மனசுக்குள்ளை ஒரு நிம்மதி. உடனை திருப்பி அனுப்பக்கூடாது எண்டு சொல்ல வலுவான காரணம் சத்தமாய் கேட்டிருக்கல்லோ.

கனடாவில் ஒரு தமிழ் பத்திரிகை. பக்கத்திற்கு பக்கம் முரசில் இருந்து எடுத்து ஆக்கங்கள் போடுது. போடட்டும். ஆனால் 'நன்றி' போடும் நாகரிகம் மட்டும் இல்லை. அதன் ஆசிரியர் பிரபல பத்திரிகையாளர் எனப்படும் டி.பி.எஸ்! அவர் நன்றி போடாதது பற்றி முரசு ஆசிரியர் என்ன சொல்லுறார் தெரியுமோ? "அவர் நல்லவர்தான். ஆனால் என்ன செய்யிறது? ஒரு பக்கம் ரெண்டு பக்கம் எண்டா நன்றி போடலாம். அவர்கிட்டத்தட்ட 4-5 பக்கம் முரசின் உபயத்தில் நிரப்புறார். நன்றி சொன்னா முரசின் மறுபதிப்பு மாதிரியல்லோ தெரியும்." அதுவும் அப்படியோ?

-சித்தர் பாட்டில் இருந்து பொல்லா ஆசைக்கு ஒரு சாத்து-

"ஆசையென்னுஞ் செருப்பின்மேல் அடியை வைத்தே
ஆங்கார முட்காட்டை அறவே மிதித்தே
காசையெனுந் துர்க்குணத்தில் கனலைக் கொளுத்தி
காலாகாலங் கடந்தோம் என்று ஆடுபாம்பே"

இதை எழுதினது பாம்பாட்டிச் சித்தர். கையிலை மகுடியோடை திரிஞ்சிருப்பாராக்கும்!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அன்றும் இன்றும் ஓர் அலசல்

# -வடக்கே ஜனாதிபதித் தேர்தல்!-

# தமிழ் கட்சிகள்-சட்டவாதிகள் திடீர் மௌனம்!!

யாழ் மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

முரசு மட்டுமே அவ்வாறு நடைபெறும் சாத்தியம் இல்லை என்று தெரிவித்திருந்தது. இப்போது முரசு கூறிய கணிப்பு உண்மையாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல் நடைபெற்றிருந்தால் புலிகளின் காவல்துறையின் கண்காணிப்பிலேயே வாக்களிப்பு நடைபெற்றிருக்க வேண்டும்.

காமினி உயிரோடிருந்தால் கூட அங்கு பிரசாரத்திற்கு போயிருக்க முடியாது.

ஆனாலும், ஜனநாயகத் தேர்தல் பற்றி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பேசிய தமிழ் கட்சிகள் இம்முறை மேற்கொண்ட நிலைப்பாடு ஆச்சரியமானதாக இருந்தது.

"யாழ்- வன்னித் தேர்தல்கள் நடைபெறக் கூடாது.

"ஆயுதமேந்திய குழுக்கள் அப்பகுதியில் நடமாடுவதால் அங்கு நடைபெறும் தேர்தல் சுதந்திரமானதாக இருக்காது" என்று தேர்தலின் முன்னரே கூறியது தமிழர் விடுதலைக் கூட்டணி.

அரசாங்கத்தை விழுந்து விழுந்து ஆதரிப்பதில் தமிழ் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள ஜனநாயக (?!) போட்டிகாரணமாக அரசின் விருப்பத்திற்கு மாறாக வாய் திறக்க தமிழ் கட்சிகள் முன்வரவில்லை என்றும் கருதவேண்டியிருக்கிறது.

புலிகளின் காவல்துறை ஜனாதிபதித் தேர்தலை நல்ல முறையில் நடத்திக் கொடுக்கவிருப்பதாகவும் தமிழ் பத்திரிகை ஒன்றின் விமர்சகர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் புலிகள், ஜனநாயகம் பேசும் தமிழ் கட்சிகளைப்போல உடனுக்குடன் குத்துக்கரணம் அடிக்கக்கூடிய நிலையில் இல்லை.

**"சிறிலங்கா தேர்தலில் தமிழீழ மக்கள் பங்குகொள்ளக்கூடாது"** என்னும் கருத்தை அவர்கள் கைவிடுவது சாத்தியமில்லை.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது குறித்து தாம் யாருடனும் பேசவில்லை என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்தார்கள்.

**ஜனாதிபதித் தேர்தல் நடைபெற புலிகள் விட்டுக்கொடுப்பது அவர்களின் அடிப்படை** கொள்கை சார்ந்த விடயமாகும்.

இலங்கை ஒரு தீவு. சிறிலங்கா தமிழீழம் என்ற இரு நாடுகள் இருக்கின்றன என்றுதான் பள்ளிக்கூடங்களில்கூட புலிகள் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

இலங்கைப் பிரதமர் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பினால் சொல்கின்றன.

முன்னர் ஒருமுறை அமரர் அமிர்தலிங்கம் **"இவர்கள் ஈழம் என்று சொல்வது முழு இலங்கையையும் தான். இவர்களை நம்பாதீர்கள். தமிழ் ஈழம் இவர்களது நோக்கமல்ல"** என்றபோது ஈ.பி.ஆர்.எல்.எஃப்-ஈரோஸ் போன்ற இயக்கங்கள் அப்போது கோபப்பட்டன. **"அமுதர் பொய் சொல்கிறார். ஈழம் என்பது தமிழ் பேசும் மக்களது தாயகத்தையே குறிக்கும்"** என்று விழுந்தடித்து மறுத்தன என்பதும் இப்போது நினைவுக்கு வருகிறது.

ஐக்கிய இலங்கையை ஆதரிக்கும் ரெலோ, புளொட் போன்ற இயக்கங்கள் இப்போதும் தமது பெயர்களில் 'தமிழ் ஈழம்' என்ற பதத்தை விடாமல்



**பேச்சின் கூட்டறிக்கை"** என்றே புலிகள் வெளியிட்டனர்.

இந்த வரலாற்று தொடர்ச்சி அறியாமல் சில தமிழ் பத்திரிகைகள் புலிகளால் சிறிலங்கா என்று பாவிக்கப்பட்ட வார்த்தைகளை 'இலங்கை' என்று மாற்றி வெளியிட்டனர்.

இவ்வாறான குழப்பமான பார்வைகள் தான் புலிகள் ஜனாதிபதித் தேர்தலை நடத்திக்கொடுப்பார்கள் என்று சில விமர்சகர்கள் கூறவும் காரணமாக அமைந்தன.

உண்மையான நிலவரங்களில் இருந்து கணிப்புகளுக்கு வராமல் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் சில விமர்சகர்கள் தவறான கருதுகோளுக்கு வந்துவிடுவதன் வெளிப்பாடே இதுவாகும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற புலிகள் அனுமதித்திருந்தால் இலங்கை ஒரே நாடு. இலங்கையின் இறைமையை புலிகளும் ஏற்றுக் கொண்டனர் என்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

எனவே எதிர்பார்க்கப்பட்டது போலவே புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல் நடத்த சம்மதிக்கவில்லை.

இப்போது யாழ் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமே ஜனாதிபதித் தேர்தல் நடக்கப்போகிறது.

யாழ் மாவட்டத்தில் ஈ.பி.டி.பியும், எனப்படுவோர் கவலைப்படாமல் இருப்பது ஏன்?

யாழிலும், வன்னியிலும் பெரும்பாலான தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது. இந்நிலையில் சிறு தொகையான வடபகுதி மக்களிடம் நீங்களும் உங்கள் ஜனாதிபதியை தெரிவு செய்யுங்கள் என்று அரசாங்கம் தேர்தல் நடத்துகிறது.

தேர்தலின் பின் வடக்கிலும் தமக்கு ஆதரவு உண்டு என்று வெற்றிபெறும் வேட்பாளர் சொல்ல முடியும். அதனையும் கேலிக்கூத்து என்று கண்டிக்க தமிழ் கட்சிகள் தயாராக உள்ளனவா என்பதே கேள்வி. அவர்களது உண்மையான ஜனநாயக விருப்பதை அளவிடும் அளவுகோலும் அதுவே.

தம்மால் ஆசனங்களை பெற முடியாத போது மட்டும் ஜனநாயகம் பேசுவதும், தமது நலன்கள் பாதுகாக்கப்படும் அவசியம் கருதி 'ஜனநாயக கோஷங்களை' மூட்டைகட்டி வைப்பதும் தமிழ் கட்சிகளதும், ஆரவாரமான சில ஜனநாயக சட்டவாதிகளதும் மரபாகிவருவது மட்டுமே வெளிப்படையான விசயம்.

எடுத்ததுக்கெல்லாம் சட்டப் புத்தகங்களை உருவும் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் சிலர்கூட மௌனித்துப் போனதுதான் சுவாரசியம்.



> "சென்ற பாராளுமன்ற தேர்தல் வடக்கே நடைபெற்றதை கண்டித்த தமிழ் கட்சிகளும் ஜனநாயக சட்டவாதிகளும் வடக்கே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது குறித்து வாயே திறக்கவில்லை என்பதுதான் சுவாரசியம்!"



தேர்தல் நடந்து முடிந்த பின்னர் வன்னித் தேர்தலை ஆட்சேபித்து கூட்டணி வழக்கும் போட்டிருக்கிறது.

ஆனால், புலிகள் மட்டுமே ஆயுதபாணிகளாக இருக்கக்கூடிய யாழ் மாவட்டத்தின் பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது பற்றி அரசாங்கம் பேசியபோது கூட்டணி வாயே திறக்கவில்லை என்பதுதான் ஆச்சரியம்.

யாழ் மாவட்டத்திலும் வன்னியிலும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல் நடத்தப்படுவதே ஜனநாயக மீறலுக்கு வழிவகுக்கும் என்று சந்தேகித்தவர்கள், படையினரோ பொலிசாரோ இல்லாத புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேர்தல் நடத்தப்படுவது பற்றி பேசப்பட்டபோது மௌனம் சாதித்தனர்.

புலிகளின் காவல்துறை ஜனநாயக ரீதியாக நடந்துகொள்ளும் என்று அவர்கள் நம்பியிருக்க வேண்டும். அல்லது புலிகளின் கருத்துக்கு மாறாக ஜனநாயகம் பேசுவது ஆபத்தில் முடியும் என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும்.

**சிறிலங்கா பிரதமர் தமிழீழத் தேசிய தலைவருக்கு அனுப்பிய கடிதம்** என்றே புலிகளின் செய்திகளில் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் குடாநாட்டு பத்திரிகைகளில் இலங்கை பிரதமர் என்று குறிப்பிடப்படுவதில்லை. சிறிலங்கா பிரதமர் என்றே குறிப்பிடப்படுகிறது.

சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் இலங்கை சிறிலங்கா என்றுதான் குறிப்பிடப்படுவதுண்டு.

ஆனால், தமிழ் கட்சிகள் எதுவும் தமிழில் சிறிலங்கா என்ற பதத்தை பாவிப்பதில்லை. இலங்கை என்றே குறிப்பிடுவது வழக்கம்.

'ஈழப்போராட்டம்' ஆரம்பித்த பின்னர் சிறிலங்கா-தமிழ் ஈழம் அல்லது சிறிலங்கா-ஈழம் என்ற பதங்கள் இலங்கையில் இரு நாடுகள் என்பதை வெளிப்படுத்தவே பாவிக்கப்பட்டுவருகின்றன.

ஏனைய தமிழ் கட்சிகள் இப்போது ஈழக் கோரிக்கையை கைவிட்டுவிட்டன.

ஈ.பி.டி.பி. மற்றும், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் போன்ற கட்சிகள் தமது கட்சிப் பெயர்களில் உள்ள ஈழம் முழு இலங்கைக்கும் உரிய தமிழ் பெயர் என்று காரணம்

**ஆரூடன்**

வைத்திருப்பதுதான் ஆச்சரியம்.

ஆனால் புலிகள் மட்டும் சிறிலங்கா-தமிழீழம் என்ற பதப்பிரயோகத்தை தமது உறுதியான கொள்கை சார்ந்த விசயமாக தொடர்ந்து பாவித்து வருகின்றனர்.

இலங்கை அரசுப் பிரதிநிதிகளோடு சமீபத்தில் நடந்த பேச்சுக்களையடுத்து, **"சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகளோடு தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் நடத்திய**

வவுனியாவில் புளொட்டும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் எப்படியான செல்வாக்கில் இருந்தனவோ அப்படியே இம்முறையும் இருக்கின்றன.

அதுதவிர ஈ.பி.டி.பியும், புளொட்டும் பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்குமாறு அந்தப் பகுதிகளில் பிரசாரமும் செய்கின்றன.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் அந்தப் பகுதிகளில் வாக்குகள் பெறுவதற்கு இடையூறு ஏற்படலாம் அல்லவா? இதுபற்றி 'ஜனநாயக வாதிகள்'

## தேர்தல்கள் தொடர்பாக புலிகள்

.........இவை அனைத்துக்கும் மேலாக சிறிலங்காவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இலங்கைத் தீவில் அமைதி ஏற்படுத்த வந்த பிராந்திய வல்லரசு இந்தியாகூட ஒரு போலி மாகாணசபைத் தேர்தலை தமிழீழ மண்ணில் நடத்தி முடித்தது. ஆனால் ஏதாவது ஒரு நன்மையாவது தமிழீழ மக்களுக்கு இதன்மூலம் கிடைத்ததா என்றால்? அதற்கான பதில் 'இல்லை' என்பது தான்.

இவ்வாறு எந்த வகையான தேர்தல் மூலமும் வெல்லப்பட முடியாத ஒன்றாக 'சிங்கள இன வெறி' வளர்க்கப்பட்டு இன்று கோரமுகத்துடன் செயற்பட்டுவருகிறது. இதனை எத்தனை ஆயிரம் தேர்தல் எந்த உருவத்தில் வந்தாலும் வெல்ல முடியாது என்பதற்கு கடந்தகாலச் சம்பவங்கள் சாட்சிகளாக அமைகின்றன. ஆகவே இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு தற்போது நடைபெறும் ஒற்றையாட்சி அமைப்பு தேர்தல்கள் ஒருபோதும் தீர்வாகாது. எனவே தமிழீழ மக்களாகிய நாம் இந்த பதவி வெறி பிடித்த இனவெறியரும் இனத்துரோகிகளும் சேர்ந்து தமது சுயநலங்களுக்காக நடாத்தும் தேர்தல்கள் பற்றி அதிகம் சிந்திக்கத் தேவையில்லை.

-நன்றி-

புலிகளின் 'உலகத் தமிழர்' கனடா.(15.07.94)

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவும், தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தவும் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்று எந்தவொரு ஜனநாயக ஆர்வலரும் வேண்டுகோள்விடுக்கவும் முன்வரவில்லை.

புலிகள் அனுமதித்திருந்தால் ஒருவேளை 'ஆஹா' என்று புகழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

அனுமதிக்காவிட்டால் வாயே திறக்க மாட்டார்கள். வாழ்க, ஜனநாயகம்!

பக்கச்சார்பின்மை, ஜனநாயகம், மனித உரிமை பற்றிய பேச்சுக்கள் யாவும் ஒரு குறுகிய வரையறைக்குள் நின்றுகொண்டுள்ளவரை தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக காற்றை சுவாசிக்க நீண்டகாலம் காத்திருந்தேயாக வேண்டும்.

ஆனால் ஒரு விசயம் உண்மை, வட பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றிருந்தால் திருமதி சந்திரிக்காவை வடபகுதி மக்கள் அமோகமாக ஆதரித்திருப்பார்கள். புலிகள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அது நடந்தேயிருக்கும்.

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

பிரதமர் சந்திரிக்காவும் பாதிக்கப்படும் இந்த நேரத்தைவிட வேறு உரிய நேரம் இருக்க முடியாது.

பேச்சுவார்த்தை தீர்வுக்கு தயார் என்று புலிகளும் சொல்கிறார்கள். பொருளாதார தடை நீக்கம் பிரதமரது நல்லெண்ணத்தைக் காட்டியுள்ளது என்றும் புலிகளது அரசியல் துறை துணைத் தலைவர் கரிகாலன் கூறியிருந்தார்.

பாலத்துறை குண்டுவெடிப்புக்கு தாம் காரணமல்லவென்றால் புலிகளுக்கு ஆவேசமான கோபம் வந்திருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு எதிரான சதி-பிரதமரது கரத்தை பலவீனப்படுத்தும் முயற்சியாக குண்டுவெடிப்பை நோக்கியிருக்க வேண்டும். திரு.பிரபாகரன் தனது வலுவான கஷ்டத்தை வெளிப்படுத்தி குண்டுவெடிப்பின் உள்நோக்கங்களை அம்பலப்படுத்தியிருக்கவேண்டும்.

ஆனால்-பிரபாகரன் மௌனமாக இருக்கிறார். கோபப்படவில்லை. 'கூலாக' இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார். திருமதி.சந்திரிக்காவின் வாக்கு வங்கியில் சேதம் ஏற்படுவதையும், பலமான ஒரு தலைமை தெற்கே உருவாவதையும் புலிகள் விரும்பவில்லை என்பதே அந்த மௌனத்தின் அர்த்தமாகக் கருதவேண்டியிருக்கிறது.

இது- ஒன்றே ஐ.தே.கட்சி திருமதி சந்திரிக்காமீது குற்றம் சாட்டுவதில் அர்த்தமே இல்லை என்பதற்கு போதுமானதாகவும் இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இது தெரியும். ஆனால், அரசியல் வெற்றி தோல்விகளுக்காக அப்பாவிகளது முகங்களை கறைப்படுத்துவது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

உண்மையில் இதுவும் ஒரு வன்முறை தான். எதிராளியை பொய்யான குற்றச் சாட்டுக்களால் உளவியல்ரீதியாக உடைத்துப்போடுவதும் வன்முறைதான்.

இந்த வன்முறையை ஐ.தே.கட்சி அதிகாரத்தில் இருந்தபோது பொது ஜன முன்னணி செய்தது. இப்போது ஐ.தே. கட்சியின் முறை. காமினியின் மைத்துனர் விமல் விக்கிரமசூரியா தலைமையில் அந்த வன்முறையை ஐ.தே.கட்சி இரசித்துக் கொண்டு செல்கிறது.

காமினி திசநாயக்காவின் உடல் தகனமாக முன்னரே ஐ.தே.கட்சியின் தலைமைச் செயலகமான சிறிகொத்தவுக்குள் மூடிய கதவின் பின்னால் மோதல் அரங்கேறியது.

திரு.ரணில் விக்கிரமசிங்காவே

# வெடித்த குண்டும் தேர்தல்கள நிலவரமும்

ஜனாதிபதி வேட்பாளராவார் என்றே பரவலாக நம்பப்பட்டது.

ஆனால், காமினியின் சகோதரியின் கணவரான விமல் விக்கிரமசூரியா, திருமதி. காமினியே ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார்.

வாகனத்தில் ஆட்களை ஏற்றி அனுப்பி ஆர்ப்பாட்டம் எல்லாம் நடத்தி வாரிசுப்போர் நடத்தியதில் வெற்றி அவருக்கே.

**ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அனுதாப அலை மட்டும் போதாது. ஆளுமையுள்ள தலைவரும் வேண்டும் என்பதை ஐ.தே.கட்சி தாமதித்தே உணர்ந்துகொள்ளப் போகிறது.**

அனுதாப அலையும், புலிகள்மீதான சந்தேகமும் தென்னிலங்கையில் சந்திரிக்கா அலையில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அது வெற்றியை பாதிக்கக்கூடிய அளவில் இல்லை என்றே தெரிகிறது.

**தமிழ்-முஸ்லிம் வாக்காளர்கள் பிரதமர் சந்திரிக்காமீது வைத்திருந்த நம்பிக்கையை காமினி கொலை விவகாரம் சற்றும் பாதிக்கவில்லை** என்பதே உண்மை.

காமினி திசாநாயக்காவைவிட திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு தமிழ் பேசும் வாக்காளர்களுக்கிடையே செல்வாக்கு இருந்தது. காமினி மறைவின் பின்னும் அதில் மாற்றமில்லை.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் தமிழர்கள் மத்தியில் காமினி திசநாயக்கா தொடர்பான அதிருப்தி அனுதாப அலையால் மாறப் போவதில்லை.

மலையகத்தில் இ.தொ.காவின் சில பிரமுகர்கள் காமினியைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

தொண்டாவின் பேரனும் இ.தொ.கா பொதுச் செயலாளருமான திரு.ஆறுமுகம் தொண்டமான், திரு.புத்திரசிகாமணி போன்றோர் காமினியின் பக்கமே நின்றவர்கள்.

தொண்டாவின் பதிவியேற்போடு அந்த நிலையும் மாறியிருக்கிறது.

மலையக தமிழ் மக்களில் கணிசமானோர் சந்திரிக்காமீதே அபிமானம் கொண்டுள்ளதாக கணிப்பிடப்படுகிறது.

தமிழ்-முஸ்லிம் வாக்கு வங்கிகள், தெற்கிலே பொ.ஜ.முன்னணிக்கு சிறு சரிவு ஏற்பட்டால் அதை சரிசெய்ய உதவலாம்.

பாலத்துறை குண்டு வெடிப்பால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பெரும்பான்மையாக பெறக்கூடிய வாக்கு எண்ணிக்கையில் மட்டுமே சேதத்தை ஏற்படுத்துமே தவிர வெற்றி வாய்ப்பை பாதிக்காது என்பதே தற்போதைய நிலவரம்.

திருமதி காமினியை ஐ.தே.கட்சி வேட்பாளராக நிறுத்தியதற்கு பொதுஜன முன்னணி நன்றி சொல்ல வேண்டும்.

ரணில் போட்டியில் குதித்திருந்தால் கடுமையான போட்டியொன்றுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கும்.

12 இலட்சம் பெரும்பான்மை வாக்குகளை பெறுவது என்பதே பொதுஜன முன்னணியின் இலக்கு.

பாலத்துறை குண்டுவெடிப்புக்கு முன்னர் குறிக்கப்பட்ட இலக்கு அது.

குண்டு வெடிப்பின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலவரப்படி அந்த இலக்கு மிகத் தூரத்திற்கு சென்றுவிட்டது. வெற்றி வாய்ப்பு அந்தளவு தூரத்தில் இல்லை என்பது மட்டுமே பொ.ஜ.முன்னணிக்கு ஆறுதலான விசயம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கொடுமையான 17 வருட வன்முறைகள்
# எச்சரிக்கையுடன் நோக்கப்படவேண்டிய எதிர்காலம்

அலசுவது – இராஜதந்திரி

எதிர்கட்சித் தலைவரும், ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்பில் பலியாகியுள்ளார்.

இலங்கை அரசியலில் ஒரு பிரபலம்மிக்க அரசியல்வாதியாக இருந்த திரு.காமினி திசாநாயக்கா கோரமான முறையில் கொல்லப்பட்டமை, தென்னிலங்கை அரசியல் வாதிகள் மத்தியில் அதிர்ச்சியையும் அச்சத்தையும் கொடுத்திருக்கக் காணப்படுகின்றது.

இலங்கையில் அரசியல் வன்முறைகள் தொடர்ந்து நிலவி வருவதனையும், எந்தவொரு அரசியல்வாதியும் எத்தகைய பாதுகாப்பின் மத்தியிலும் கொலைப் பயமுறுத்தல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதென்பதனையுமே காமினியைப் பலியெடுத்த குண்டு வெடிப்புச் சம்பவம் புலப்படுத்துவதாக இருக்கின்றது.

மிக இளவயதிலேயே அரசியலில் பிரவேசித்த காலஞ்சென்ற காமினி திசாநாயக்கா இறக்கும்போது இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகவும் இருந்தார்.

அரசியலை ஆரம்பித்த நாள்முதற் கொண்டு இறக்கும்வரை மேடைப் பேச்சு, நடை-உடை, பாவனை என்பன அனைத்திலுமே அவர் ஒரு கவர்ச்சிகரமான அரசியலாளராக விளங்கினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் நன்கு தட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை நாளடைவில் ஏற்கக்கூடிய ஓர் அரசியல் பிரமுகராகவே ஐ.தே.க. வட்டாரத்தில் காமினி கருதப்பட்டு வந்தார்.

ஆயினும் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சியில் திரு.காமினி திசாநாயக்காவின் முக்கியத்துவம் பெரிதும் மங்கிப் போயிருக்கக் காணப்பட்டது.

கடந்தகால ஆட்சியில் பிரேமதாசா–காமினி திசாநாயக்கா ஆகியோரது உறவு பெரிதும் பாதிப்படைந்திருந்தது. மற்றுமொரு முக்கிய அரசியல்வாதியாக இருந்து மறைந்த லலித் அத்துலத் முதலியும் காமினி திசாநாயக்காவின் தரப்பைச் சேர்ந்தவராக, மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பெரிதும் பகைமை பாராட்டியிருந்தார்.

ஆயினும் இன்று சுமார் ஒன்றரை வருட காலப் பகுதியில் இந்த மூன்று அரசியல் முக்கியஸ்தர்களும் வெவ்வேறான சந்தர்ப்பங்களில் கோரமாகக் கொலையுண்டிருக்கக் காணப்படுகின்றனர்.

அரசியல் கொலைகள் என்பது இன்று உலகளாவிய ரீதியில் சர்வ சாதாரணமானவையாகவே விளங்குகின்றன. இந்நிலையில் இலங்கையில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்று வரும் அரசியல் வன்முறைகளின் தொடர்ச்சியாகவே தற்போது காமினி திசாநாயக்காவின் கொலைச் சம்பவமும் காணப்படுகின்றது.

கடந்த ஆகஸ்டில் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், இன்றைய இலங்கை அரசியல் நடைமுறைகளில் விரிவான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டுமென்பதில் தீவிர ஆர்வங்காட்டி வருகின்றது.

தற்போது இருந்துவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை மையமாகக் கொண்ட அரசியல் அமைப்பு முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டு மீண்டும் பாராளுமன்ற ஆட்சிக்கு முக்கியத்துவமளிக்கும் புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டுமென்பதில் பிரதமர் சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முனைப்பாக இருக்கின்றது.

அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில்கூட நீதியமைச்சரும், அரசியல் அமைப்பு விவகாரங்களுக்கு பொறுப்பானவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தற்போதைய அரசியல் அமைப்பு முறையை 'அசுரத்தன'மானதொன்றென வர்ணித்திருந்தார்.

கடந்த 17 வருட காலமாக இலங்கையில் இருந்துவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை, இலங்கையின் புவியியல், சமூக, பொருளாதார அரசியல் விவகாரங்களுக்கு எதிர்மாறான தன்மைகளைக் கொண்டதாகவே இருக்கக் காணப்படுகின்றது.

இலங்கையில் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் விரிவடையவும், அரசியல் வன்முறைகள் பெருகவும்கூட இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையே மூல காரணியாக இருந்துள்ளதென்பதே அரசியல் அவதானிகளின் கணிப்பாக இருக்கின்றது.

எது எப்படியிருந்த போதிலும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோர் எச்சரிக்கையுடன் நாட்டு மக்களின் நலனையும், ஏகோபித்த பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் அரசியலுக்கே முதன்மையளிக்க வேண்டுமென்பதனையே காமினி குண்டு வெடிப்பு விவகாரம் இடித்துரைப்பதாக இருக்கின்றது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகவே இருந்து வருகின்றது. பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரமடைந்தபின்னர் பிரிட்டனின் 'வெஸ்ட் மின்ஸ்டர்' பாராளுமன்ற முறையைத் தழுவியதாக இலங்கையின் ஆட்சிமுறை விளங்கியிருந்தது.

ஆயினும் சுதந்திர இலங்கையின் அரசியலமைப்பு 1970ம் ஆண்டிலும் பின்னர் 1978ம் ஆண்டிலும் மாற்றப்பட்டிருந்தது.

இந்த மாற்றங்களே இலங்கையின் இன்றைய அரசியலைக் கெடுபிடிகள் நிறைந்ததாக மாற்றிவிட்டுள்ளன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த 17 வருடகாலப் பகுதியே இனவன்முறைகள், யுத்தக் கெடுபிடிகள், மனித உரிமை மீறல்கள், என்பவற்றினால் நிறைந்திருக்கக் காணப்பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியல் கொலைகள் தொடர்பாக மட்டுமல்ல, யுத்தங்களின் போது ஏற்பட்ட மரணங்கள் குறித்துக்கூட சந்தேகங்களும் முரண்பட்ட தகவல்களும் வெளியாகியிருந்தன.

வடக்கே யுத்தப் பிரதேசத்தில் வட பிராந்திய இராணுவத் தளபதியாகவிருந்த லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் அவரோடு சேர்த்து மேலும் எட்டு சிரேஷ்ட இராணுவ, மற்றும் கடற்படை அதிகாரிகள் 1992ம் ஆண்டு கண்ணிவெடியில் சிக்குண்டு உயிரிழந்தனர்.

டென்ஸில் கொப்பேகடுவையையும், அவரது சகாக்களையும் பலியெடுத்த கண்ணி வெடியைத் தாமே வெடிக்க வைத்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியிருந்தனர்.

அனால் அன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் (டி.யு.என்.எஃப்) கட்சியிலிருந்த காமினி திசாநாயக்கா, லலித் அத்துலத் முதலி ஆகியோர் டென்ஸில் கொப்பேகடுவவின் மரணத்தில் மர்மம் இருப்பதாகத் தெரிவித்தனர்.

கூடவே பிரிட்டனில் வெடிகுண்டுகள் சம்பந்தப்பட்ட நிபுணர் ஒருவரின் உதவியையும் நாடி, அவர் மூலமாக டென்ஸில் கொப்பேகடுவவைப் பலியெடுத்த குண்டு வெடிப்பு ஒரு நாசகார வேலை என்பதை நிரூபிப்பதில் காமினி, லலித் ஆகியோர் தீவிரமாக இருந்தனர்.

> டென்சில் கொப்பேகடுவ விவகாரத்தில் புலிகள் உரிமை கோரினார்கள். ஆனால் காமினியோ சுதந்திரமான விசாரணை கோரியிருந்தார்.

நாளடைவில் டென்ஸில் கொப்பேகடுவ மரணம் சம்பந்தப்பட்ட விவகாரம் பெரிதுபடுத்தப்படவே அன்றைய பிரேமதாசா அரசாங்கம் வெளிநாட்டவர்களை உள்ளடக்கிய விசாரணைக் கமிஷன் ஒன்றையும் நியமித்திருந்தது.

ஆயினும் இந்த விசாரணைக் கமிஷன் தனது முடிவுகளை வெளியிடவிருந்த தறுவாயில் டி.யு.என்.எஃப். தலைவர் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டிருந்தார். இக்கொலை குறித்தும் பல்வேறு சந்தேகங்களும், தகவல்களும் வெளியாகியிருந்த நிலையிலேயே ஜனாதிபதி பிரேமதாசாவும் படு மோசமான முறையில் குண்டுவெடிப்பொன்றில் கொலையுண்டிருந்தார்.

இந்த அரசியல் கொலைகளின் தொடர்ச்சியாக காமினி திசாநாயக்காவும், வேறு முக்கிய ஐ.தே.க. பிரமுகர்களும் தற்போது கொலையுண்டிருக்கக் காணப்படுகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட இருந்தவருமான காமினி திசாநாயக்காவின் மறைவு குறித்து பிரதமர் திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிட்டிருந்த செய்தியில், இலங்கை அரசியலில் வன்முறைகளை ஒழித்துக்கட்டுவதற்கான நடவடிக்கைகளைத் தமது அரசு ஆரம்பித்திருந்த தருணத்திலேயே காட்டு மிராண்டித்தனமாக திரு.காமினி திசாநாயக்கா கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்திருந்தார்.

சந்திரிகா மேலும் தமது செய்தியில், தனது தந்தையாரையும், பின்னர் தனது கணவரையும் இழந்தவர் என்ற முறையில் கொலையுண்டவர்களின் குடும்பத்தினர் கொண்டுள்ள மனநிலையைத் தம்மால் நன்கு புரிந்துகொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

பிரதமர் சந்திரிகா கூறியவற்றில் நிறைய அர்த்தம் இருக்கவே செய்கின்றது.

தென்னிலங்கையில் அரசியல் ரீதியான படுகொலைகள் மற்றும் அடாவடித்தனமான அடக்குமுறைகள், காடைத்தனங்கள் என்பவற்றினால் ஆயிரக்கணக்கானோர் அநாதைகளாகவும், அபலைகளாகவும் மாறியுள்ளனர்.

இதே வேளை வடக்கு-கிழக்கின் கொடிய யுத்தம் காரணமாக அப்பிரதேசங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் விதவைகள், அநாதைகள், அகதிகளாகியுள்ளனர்.

இலங்கையை அரசியல் சுபீட்சம் மிக்க நாடாகவும், பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட நாடாகவும் மாற்றமடையச் செய்வதற்கு முதலில் பரிபூரண அமைதி நிலையை நாட்டில் எற்படுத்துவது மிகவும் அவசியமானதாகின்றது.

இந்நிலையில் பிரதமர் சந்திரிகா தென்னிலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்களைச் சீர் செய்வதற்கான பணிகளை முன்னெடுத்துள்ள அதே சமயம், வடக்கு-கிழக்கில் யுத்த நிலவரத்துக்கும் முடிவு கட்டும் வகையில் சமாதான முயற்சிகளுக்கும் முன்னுரிமை வழங்கியுள்ளார்.

சந்திரிகாவின் எழுச்சியையும், அவரது முற்போக்கான அரசியல் அணுகுமுறைகளையும் சகிக்க முடியாத பேரினவாத பிற்போக்குச் சக்திகள் பல்வேறு கண்டன விமர்சனங்களையும் காரசாரமாக வெளியிடலாம்.

எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான காமினி திசாநாயக்காவின் மரணத்தையும் சந்திரிகாவுக்கு எதிரான பிரசாரமாக பேரினவாதக் கும்பல்கள் முடுக்கிவிடலாம்.

ஆயினும் காமினி திசாநாயக்காவின் மரணம் முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்று வந்த அரசியல் வன்முறைகள், அடாவடித்தனங்களின் தொடர்ச்சியாகவே இருப்பதைக் காண முடிகின்றது.

காமினியின் கொலைக்கு யார் பொறுப்பாளிகள் என்பதனைக் கண்டறிவதில் புலன் விசாரணையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து விசாரணைகளும் சுதந்திரமாகவும், திறந்த மனத்துடனும் மேற்கொள்ளப்படும் என்று தகவல் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர், மேலும் கருத்து வெளியிடுகையில் முன்னைய அரசாங்கத்தில் இடம்பெற்ற அரசியல் கொலைகள் குறித்து தெளிவான- நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லையென்றும் கூறினார்.

நீதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிடுகையில் முன்னைய அரசாங்கத்தில் அரசியல் கொலைகள் இடம்பெற்றதும் ஸ்தல விசாரணைகள்கூட சரிவர நடத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.

கொலைகள் இடம்பெற்ற இடங்களில் துப்புத் துலக்குவதற்கான வாய்ப்புக்கூட இல்லாமல் அனைத்துமே சுத்தஞ் செய்யப்பட்டிருந்தனவென்றும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.

காமினியைப் பலியெடுத்த குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்று காமினியின் உறவினர்களும், ஐக்கியதேசியக் கட்சியினரும் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமக்கும் இச்சம்பவத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று வடக்கே தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இச்சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம்; அல்லது ஈடுபடாதிருந்திருக்கலாம்.

ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் இராணுவ சக்தியாகவே இயங்கி வருகின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே.

அவர்களது இராணுவ ரீதியான வளர்ச்சி மற்றும் அவர்கள் கடந்த காலங்களில் நிகழ்த்திய தாக்குதல்கள் என்பன இலங்கையில் ஆட்சியிலிருப்போருக்கு மிகுந்த நெருக்கடியையும், சவால்களையும் விடுப்பதாகவே இருந்து வந்துள்ளன.

இருந்தபோதிலும் முன்னைய ஆட்சியாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக அணுகுவதைவிட இராணுவ ரீதியாகவே அணுகி அவர்களின் போர்க்குணத்துக்கு உரமூட்டியிருந்தனர்.

ஆனால் சந்திரிகா அனைத்தையும் புதிதாகவே நோக்குபவராக இருக்கின்றார். புலிகள் ஆயுத பாணிகளாக இருப்பதற்கும் காரணங்கள் உண்டு. அக்காரணங்களில் வடக்கு-கிழக்கு மக்களைப் பெரிதும் புண்படுத்தும் வகையில் இடம்பெற்ற யாழ் பொதுசன நூலக தீவைப்புச் சம்பவம் உட்பட பல்வேறு இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளும் அடங்குகின்றன எனவும் பிரதமர் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்தகால கசப்புணர்வுகள், மற்றும் குரோதங்களில் தொடர்ந்து தோய்ந்திருந்து அரசியலை நடத்துவதைவிட புதிய சிந்தனைகள், அரசியல் அணுகுமுறைகளுடன் நாட்டில் சமாதான-சகவாழ்வை ஏற்படுத்த முயலுவதனையே ஒரு சாதுரியம் மிக்க நடவடிக்கையாகக் கருத முடியும்.

காமினியின் மரணம் இலங்கையில் அரசியல், ஜனநாயக மரபுகள் தூர்ந்து போயுள்ளதன் உச்சக் கட்ட வெளிப்பாடாகவே இருக்கின்றது.

முள்ளின்மேல் விழுந்த சீலையைப் பக்குவமாக அகற்றுவதற்குரிய நிதானம், திறமை என்பனவே இன்று இலங்கையின் துர்ப்பாக்கிய அரசியலைச் சீர்செய்யவும் இன்றியமையாதவையாகின்றன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கண்டிப்பாக இது தாய்மார்கள் கவனிக்க வேண்டியவை



பிறந்த குழந்தைகள் அழும்போது இளம் தாய்மார் தாங்களாகவே அழத் தொடங்கிவிடுவதுமுண்டு.

**A குழந்தைகள் அழுவது சர்வசாதாரணமானது!**

- 24 மணி நேரத்தில் குழந்தைகள் அடிக்கடி அழுது கொண்டிருப்பர்.
- பெரும்பாலான குழந்தைகள் இரவு வேளையில் அதிகம் அழுவார்கள்.
- பல குழந்தைகள் ஒருநாளில் ஒரு தடவையாவது பரபரப்புடன் காணப்படுவர். பிற்பகல் வேளைகளில் குழந்தைகளிடம் இத்தன்மையினை அவதானிக்கலாம்.
- பிறந்து ஒரு சில மாதங்களில் குழந்தைகள் அழும்போது பெற்றார் பெரும் கவலைப்படுவதுமுண்டு.
- இவ்வாறு குழந்தை அழுவதைப் பார்த்து கோபமடைவதுமுண்டு; சிலர் வெறுப் படையவும் கூடும்.

**B அலுப்படைதல்:**

பிறந்த சில நாட்களில் குழந்தைகள் நன்றாகப் பார்க்கவும் கேட்கவும் கூடிய வர்களாக இருப்பார்கள்.

அவர்களுக்கு அலுப்புத் தட்டாமல் இருப்பதற்கு, பார்வைக்குக் கவர்ச்சியாகவும் கேட்பதற்கு இனிமையாகவுமுள்ளவற்றை குழந்தை அனுபவிக்க வகை செய்யவேண்டும். கடுமையான வர்ணங்களையும் தாளத்துடன் அமைந்த இசையையும் குழந்தைகள் இரசிப்பார்கள்.

**C மிதமிஞ்சிய ஊக்கம்:**

தூக்கம் அல்லது ஓய்வு தேவைப் படும்போது குழந்தைகள் அழுவதுண்டு.

குப்புற விழும் குழந்தையானால் அதே நிலையில் குழந்தையைக் கிடத்தி முதுகில் மெதுவாகத் தட்டினால் குழந்தை தூங்கி விடும்.

சில மாதங்களின் பின்னர் ஆடும் நாற் காலியில் குழந்தையை வைத்து ஆட்டலாம். தாயாரும் ஆடும்நாற்காலியில் சாய்ந்த வண்ணம் குழந்தையை அணைத்து ஆடுவது இருவருக்கும் இதமளிக்கும்.

மெதுவாகப் பேசலாம். அல்லது மென்மை யாகப் பாடலாம். தூங்கும்போது குழந்தையைத் தொந்தரவு செய்யாமல் அமைதியாக உறங்க விட்டுவிட வேண்டும்.

**D குழந்தைகள் அழுவது இயல்புதான்- ஆனால்...**

**குழந்தைகள் ஏன் அழுகின்றன?**

முக்கியமான உதவியினைக் கோரித்தான் குழந்தை அழுகிறது. தனது பிரச்சினையை வாயால் கூற முடியாதிருப்பதனால் குழந்தை தன் அழுகையின் மூலமே தனது தேவையை வெளிப்படுத்துகிறது.

**பசி அழுகை**

தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள்தான் பெரும்பாலும் அடிக்கடி அழுகின்றன. ஏனைய புட்டிப்பால்களைவிட தாய்ப்பால் சீக்கிரமே சீரணித்துவிடுவதனால் குழந்தை களுக்கு விரைவில் பசி ஏற்படுகிறது.

வழமையாகக் கொடுக்கப்படும் பாலின் அளவு- கால இடைவெளி எல்லாம் சரியாக இருந்தும் குழந்தை அழுமானால்...அதற்கு வேறு காரணம் உண்டு என்று அறிந்து கொள்ளலாம்.

**அசௌகரியம்**

குழந்தைகளை ஏதாவது துன்புறுத்து கிறதா? என்பதை முதலில் அறியவேண்டும்.

குழந்தையின் படுக்கை விரிப்புகள் அதன் மென்மையான உடலை உறுத்துகிறதா அல்லது அதனை வைத்திருப்பவர் உரிய முறையில் குழந்தையை வைத்திருக்க வில்லையா என்பதனை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

**வாயுக் கோளாறு**

வாயுக் கோளாறும் குழந்தைகளை அசௌகரியத்துக்குள்ளாக்கக் கூடும். அவசர மாக-அளவுக்கு மீறி பால் கொடுத்தல் வயிற்றில் சிக்கலை ஏற்படுத்தக்கூடும். குழந்தைக்கு ஏப்பம் வருவதற்கு வகை உண்டா என்பதனையும் அறியவேண்டும். தாய்மார் குழந்தையைத் தங்கள் உடலுடன் அணைத்த வண்ணம் முதுகில் லேசாகத் தட்டலாம்.

**E அறையின் தட்ப வெப்பம்**

குழந்தை இருக்குமிடம் அதிக சூடாக இருந்தாலும் அதிக குளிராக இருந்தாலும் குழந்தைக்கு அது அசௌகரியமாக இருக்கும்.

குழந்தைகள் எப்போதும் ஓரளவு வெப்ப நிலையிலேயே வைத்திருக்கப்பட வேண்டும். மென்மையான கம்பளி அல்லது போர்வை குழந்தைக்கு இருக்க வேண்டியது அவசியம்.

**தாகம்:**

குழந்தைகளுக்கு அடிக்கடி தண்ணீர் பருக்கப்படவேண்டும். நன்றாகக் கொதிக்க வைத்து அறிய நீர் ஒரு தடவைக்கு ஓர் அவுன்ஸ் மட்டும் கொடுக்கலாம். அதுவும் சூப்பி மூலம் கொடுப்பதே நல்லது. தண்ணீருக்கு இனிமை சேர்க்கலாகாது.

**உறிஞ்சிக்குடித்தல்:**

குழந்தைகள் நீர்ப் பதார்த்தங்களை எப்போதும் உறிஞ்சிக் குடிப்பதையே விரும்புவர்.

உறிஞ்சி (சூப்பி)க் குடித்த வண்ணமே அவர்கள் அமைதியுடன் தூங்கிவிடுவார்கள்.

சில மாதங்கள்வரை உறிஞ்சும் முறையை செயற்படுத்தவேண்டும். சூப் பியை வெறுமனே உறிஞ்சக்கொடுப்பதன் மூலம் குழந்தைகளை அமைதியடையச் செய்யலாம்.

**தங்களை பிறர் தாங்குவதை விரும்புவர்**

கருவறையிலிருந்து வெளிவந்த குழந்தை சில காலம் அந்தக் கருவறைச் சுகத்தையும் சூழலையும் நாடுவது இயல்பு. இதற்காகவே தங்களை எப்போதும் எவரா வது அணைத்து வைத்திருப்பதை எதிர் பார்க்கின்றனர். இதனால் குழந்தைகள் இப்பழக்கத்துக்கு அடிமையாகிவிடக்கூடும் என்று கருதலாகாது.

குழந்தைப் பருவத்தில் நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு தூக்கி அணைத்து வைத்திருக்கிறீர்களோ அந்தளவுக்கு வளர வளர அவர்கள் அப்பழக்கத்தை மிக வேகமாக விட்டுவிட எத்தனிப்பார்கள்.

# அட.... எத்தனை அழகு கொட்டிக்கிடக்குது!

- □ பெண்களைப் பொறுத்தளவில் கூந்தல் தான் அழகானது. கூந்தல் பராமரிப் பைப் பொறுத்தவரை கூடுமானவரை ஒரே ஷம்புவை உபயோகப்படுத்தி வருவது நல்லது. அடிக்கடி அவற்றை மாற்றக்கூடாது. வாரத்தில் ஒருமுறை அல்லது இரண்டுமுறை ஷம்புபோட்டுக் குளிக்க வேண்டும்.
- □ முகத்தின் மொத்தப் பொலிவையும் பிரதிபலிப்பவை கண்கள்தான். இரவில் தூக்கமின்மை, பகலில் வெய்யிலில் நெடுந்தூர அலைச்சல் காரணமாகக் கண்களைச் சுற்றி கருவளையம் ஏற்படலாம். இது நம் அழகையே கெடுத்து விடும். இதைத் தவிர்ப்பதற்கு தினமும் குறைந்த பட்சம் 6மணி நேரம் ஆழ்ந்த தூக்கம் அவசியமானது. இரவு எவ்வளவு தாமதமாக உறங்கச் சென்றாலும், 6 மணி நேரம் முழுமையாகத் தூங்கி எழ வேண்டும்.



- □ வெள்ளரிக்காய்களை வட்டமாக சீவி மேல்புறத்தில் 5 முதல் 10 நிமிடம்வரை ஒற்றி எடுக்கலாம்.
- □ அசைவ உணவு வகைகளைக் குறை வாகச் சேர்த்து, பச்சைக் காய்கறிகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும். இதனால் உடலின் எடை கூடுவதைத் தவிர்க்கலாம்.
- □ காலையில் எழுந்ததும் நாம் இருக்கு மிடத்திலேயே ஒரு 1/2 மணி நேரம் உடற்பயிற்சி செய்துவிட்டு அன்றாட வேலைகளைக் கவனித்தால் நாள் முழுவதும் ஒரு புத்துணர்ச்சி நிலவும்.
- □ நொறுக்குத் தீனிகளைக் குறைத்து, ஜூஸ், பழவகைகளைச் சேர்த்தால் உடல் நிலையைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.
- □ அழகுசாதனப் பொருட்களைப் பொறுத்த மட்டில் அதிகம் உபயோகிப் பதைத் தவிர்ப்பது நல்லது. ஏனென் றால், அவற்றில் உள்ள இரசாயனப் பொருட்கள் சிலரின் இயற்கை அழகைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவிடும்.

# வீட்டுக் குறிப்புகள்



உங்கள் கைகள் 'மெத் மெத்'என்று பஞ்சுபோல் இருக்க வேண்டுமா? ஒரு மேசைக்கரண்டி 'ஒலிவ்' எண்ணை எடுத்துக்கொண்டு அதில் ஒரு தேக்கரண்டி சீனியைப் போட்டு, ஒரு மூன்று நிமிடத்திற்கு கீழிருந்து மேல்நோக்கி மெதுவாக கைகளில் 'மசாஜ்' செய்யுங்கள். பிறகு கைகளை கழுவி விடுங்கள். நாளடைவில் கைகள் மிருதுவாக மாறிவிடும்.



இட்லி குக்கர், பால்குக்கர் போன்ற அலுமினிய பாத்திரங்கள் புதுப்பொலிவை இழந்து இருக்கிறதா? கவலையை விடுங்கள். சிறிது எழுமிச்சை சாறு பிழிந்து, அதில் சிறிது தண்ணீர் ஊற்றி கொதிக்க வையுங்கள். இப்போது இக்கலவையை பயன்படுத்தி பாத்திரத்தை துடைத்துப் பாருங்கள். 'என்னது குக்கர் புதுசா வாங்கினியா'? என்று பக்கத்து வீட்டுக்காரி கேட்கிறார்களா?

---

விருந்தினருக்கு கப்பில் காபி கொண்டு போகும்போது, கப்பில் ஒரு ஸ்பூனை போட்டு எடுத்துச் செல்லவும். அப்போதுதான், காபி சிந்தாமல் இருக்கும். சிறு குழந்தைகள்கூட எடுத்துச் செல்லலாம். கப்பில் காபி குறைவாக இருந்தால் கவலையே இல்லை.



விருந்தினரை அசத்த வேண்டுமா? 'சூப்பர் ஆப்பிள் ஷேக்' கொடுத்தால் போச்சு! எப்படி தயாரிப்பது.. தெரியுமா? துண்டு, துண்டாக நறுக்கிய ஆப்பிளை 'சைடர்' (அப்பிள் பழச்சாற்றில் செய்யப்படும் ஒருவகை பானம்- கடைகளில் கிடைக்கும்) பானத்தில் துண்டுகளை வேகவைக்கவும். வெந்தவுடன் சிறிது எலுமிச்சை சாறு பிழிந்து தேவையான அளவு சர்க்கரை சேர்க்கவும். இப்போ கலவையை இறக்கி சிறிது தயிர் ஊற்றி, நன்கு கலக்குங்கள். இது தான் 'சூப்பர் ஆப்பிள் ஷேக்' என்பது! சூப்பரா இருக்கா?

# லேடீஸ் ஸ்பெசல்



கோப்பைகளில் கறை படிந்துள்ளதா? போரக்ஸ் பவுடர் (மருந்து கடைகளில் கிடைக்கும்) ஒரு ஸ்பூனை கோப்பையில் போட்டு, கோப்பை முழுக்க வெந்நீரை ஊற்றி மூடி வைத்து விடுங்கள். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு பிறகு, நன்றாக பிரஷ் போட்டு தேய்த்துக்கழுவி விடுங்கள். கறை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

# கைவேலைப் பகுதி- நீங்களும் செய்து பாருங்கள்

## எஸ்—எஸ்

**தேவையான பொருட்கள்:**

றெஜிபோம் 12×12 நீள அகலம்
பேப்பர் றிபன் நீலக்கலர்
பேப்பர் றிபன் றோஸ் கலர்
செலோரேப் (ஒட்டுவதற்கு)
குண்டூசி 50
இரு நிற முத்துக்கள்–50

**செய்முறை:**

12 அங்குல அகலமும் 12 அங்குல நீளமுமான (சதுர வடிவம்) றெஜிபோமை எடுத்து படம் 1ல் காட்டப்பட்ட மாதிரி பென்சிலால் வரைந்து வெட்டவும். (உங்கள் விருப்பத்திற்கேற்ப வேறு அமைப்புக்களையும் வெட்டலாம்) வெட்டிய அப்பகுதிக்கு 1/2 அங்குல அகலமான பேப்பர் றிபன் இரண்டு கலரில் எடுத்து மாறி மாறி பரவிக் கொள்ளவும். அவ்வாறு பரவிய பின்னர் அடுத்த நீளப் பகுதியான பகுதிக்கு ஒன்று விட்ட ஒரு பேப்பர் றிபனை கீழ் எடுத்து பாய் இழைக்கும் முறையினைப்போன்று அமைத்துக்கொள்ள வும். இவ்வாறு அமைக்கும்போது கிளம்பி நிற்கும் நுனிகளை அவ்விடத்திலேயே குண்டூசியினால் குத்தவும். அவ்வாறு மேற் பக்கம் பாய் வடிவமாக இழைத்தது போன்று மறுபக்கமும் புரட்டி இதேபோன்று இழைக்கவும்.

இவ்வாறு அமைத்த பின்னர் குத்தப்பட்ட குண்டூ சியினை ஒவ்வொன்றாக கழற்றி செலோரேப்பால் அமரும்படி ஒட்டவும். இதன்பின்னர் ஒவ்வொரு குண்டூசிக்கும் ஒவ்வொரு முத்துப்போட்டு படம் 2ல் காட்டியவாறு விளிம்புகளுக்கு மெதுவாக குத்தவும். இவ்வாறு அமைப்பு ஏற்பட்ட பின்னர் சிறிய பிளாஸ்டிக் பூ, இலையுடன் 1/2 யார் பேபி றிபன் இணைத்து அழகாக அமைத்து வரவேற்பறையின் சுவரில் தொங்கவிடலாம். பிளாஸ்டிக் பூ இலை பயன்படுத்த விரும்பா தோர் ஸ்றொக்கிநெற்றால் ஆக்கப்பட்ட பூவோ, அல்லது முத்துகளினால் எழுத்துக்களை அமைத்தோ அல்லது பேப்பர் றிபனால் சிறிய பூக்களை அமைத்தோ அலங்கரித்துக் கொள்ளலாம்.



படம்.1



படம்.2

**குறிப்பு:**

1. 1/2 அங்குல கனமான றெஜிபோம் போதுமானது.
2. படம் 1ல் காட்டியுள்ள மாதிரி பூ அமைப்பது பாய் வடிவத்தில் பேப்பர் றிபனால் இழைக்கப்பட்ட பின்னர் என்பது கவனத்திற் கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

## மசாலா உப்புமா

**தேவையான பொருட்கள்:**

ரவை-1/4 கிலோ
வெங்காயம்-100 கிராம்
வெண்டைக்காய் அல்லது போஞ்சி- 100 கிராம்
எண்ணெய்- 75 மில்லிலீட்டர்
நெய்-50 மி.லீட்டர்
கடுகு, உழுத்தம்பருப்பு-சிறிதளவு
பச்சை மிளகாய்-6
இஞ்சி-ஒரு துண்டு
முந்திரிப்பருப்பு- 10 கிராம்
மசாலா தூள்-சிறிதளவு
உப்பு-அளவாக
கறிவேப்பிலை-கொத்தமல்லி இலை-சிறிது
மஞ்சள், கறுவாப்பட்டை.

**செய்முறை:**

வெண்டைக்காய் அல்லது போஞ்சி, வெங்காயம், பச்சை மிளகாய் இஞ்சி ஆகியவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ளவேண்டும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு நறுக்கிய வெண்டைக்காய் அல்லது போஞ்சியை நன்றாக வதக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். வேறொரு பாத்திரத்தில் நெய் விட்டு ரவையைப் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுக்க வேண்டும். அத்துடன் முந்திரிப்பருப்பை யும் நெய்யில் வறுத்துக்கொள்ளவேண்டும்.

பின்பு வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை போட்டுத் தாளித்து, நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சியைப் போட்டு வதக்கியவுடன் மூன்றரை கோப்பை தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவேண்டும். கொதித்து வரும்போது ரவையைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறவேண்டும். கசகசா, மஞ்சள், கறுவாப்பட்டை, மசாலா பொடியை இத்துடன் தூவி கிளற வேண்டும். பொல பொலவென்று உப்புமா பதம் வந்ததும் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து அத்துடன் கொத்தமல்லி இலை, வறுத்த முந்திரிப்பருப் பைத் தூவி, கிளறி சிறிது நேரம் மூடி வைத்து இதமான சூட்டுடன் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

# முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 14
உண்மை—நேர்மை—
வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி



## காத்திரு–விடாதே பிடி!

தேவையானது ஒரு தரமான கமரா. பொழுதும் போகும்-புதிய தகவல்களும் கிடைக்கும். அசத்தலான காட்சி கிடைத்துவிட்டால் அதனை விலைக்கு கொடுத்தால் பொருளும் சேரும். இங்கிலாந்தில் உள்ள கமராக்காரர்கள் பிறநாட்டு பறவைகள் வரும் சீசனுக்கு காட்டுக்குள் புகுந்துவிடுவார்கள். நொறுக்குத் தீனி கொறித்துக்கொண்டு காத்திருப்பார்கள். சில சமயம் எதுவும் ஆச்சரியமானவை கிடைத்துவிட்டால் காய்ந்தமாடு கம்பில் விழுந்த கதைதான். படத்தில் அதிசயமான அமெரிக்க சிறியவகை 'குரொஸ்பீக்' பறவை ஒன்றை பல கமராக்கள் குறி வைக்கும் காட்சி.

# போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்

## சமாதான சவாரி



சமாதானம் உதட்டிலிருந்து வருவதல்ல. உள்ளத்திலிருந்து வரவேண்டும். வந்தால் அதிசயங்களும் நேரும். தூரத்தும் பூனை சென்று தொட்டுச் சுகம் விசாரிக்கிறது. அடடே இது எப்படிச் சாத்தியம்? உண்மைதானா என்று விழிகள் விரியவைக்கும் இந்தக் காட்சி அமெரிக்க மிருகக் காட்சிச் சாலையொன்றில் 'கிளிக்' செய்யப்பட்டது. கடும் பயிற்சியளித்து- கொடும் நோக்கமில்லாத உறவை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதேபோல் சிறுத்தைமீது சவாரி செய்கிறார் பாருங்கள் குரங்கார்! இதுவும் நீண்டகால பயிற்சியின் வெற்றிதான்.

மிருகங்களையும், பிராணிகளையும் நன்கு பழக்கப்படுத்தி ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுபோல, மனிதர் மனங்களை பண்படுத்தினால் அமைதி ஏற்படுமன்றோ!

## காட்டுக்குள் சமாதானம்



## இந்த புன்னகை என்ன விலை?!



அட்டகாசமாக சிரிப்பதற்கு மனிதரால் மட்டும்தான் முடியுமா என்ன? நாயார் மெய் மறந்து சிரிக்கும்போது கமராவால் சுட்டவர் தோமஸ் பீற்றர்ஸன். கலிபோர்னியாவில் தனது குடும்பத்தவர்களை புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தவர் கண்களில் இந்தக் காட்சி பட்டவுடன் கமராவால் சுட்டுவிட்டார்.

www.padippakam.com நன்றி - நூலகம்

# சினி விசிட்



### விஜயாவுக்கு வந்த கோபம்

கே.ஆர்.விஜயா. அதுதான் நமது புன்னகை அரசி. அவரைப் பேட்டி காண முன்னறிவிப்பு இல்லாமல் போய் மாட்டிக்கொண்டாராம் ஒரு பத்திரிகை நிருபர். "ஒரு போன்கூட செய்யாமல் வந்து குதித்திருக்கிறீர்களே? சுகன்யா-குஷ்பு-ரோஜா போன்றோரிடம் இப்படிப் போய் பேட்டி எடுப்பீர்களா? இப்போது பேட்டி தர முடியாது. பின்னர் பார்த்துக்கொள்ளலாம்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டாராம். விஜயா செய்தது சரிதான்.

### என்ன விசேஷமுங்க?

வீட்ல விசேஷங்க படத்தில் அறிமுகமானவர் மோகனா. இப்போது பிஸியாக இருக்கிறார். ஆனால் அதே படத்தில் கதாநாயகியாக நடித்த பிரகதி அந்தளவுக்கு பிஸியாகவில்லை. காரணம் யாதெனில் மோகனாவின் தாராளம்தான். மணி-ரத்னம் படத்தில் அந்த தாராளத்தை காணலாம். உதாரணத்திற்கு இன்றைய 'சினி விசிட்டில்' ஒரு படம் இருக்கிறது. பார்த்துக்கொள்ளலாம். என்ன, பொய்யா சொல்லுகிறோம்!



நெப்போலியன்-குஷ்பூ-மோகினி-ராமகி
படம்-வனஜா-கிரிஜா

### சில்க்ஸ்மிதாவுக்கு பிடித்தவர்கள்

இளம் ஹீரோக்களுடன் நடிப்பதைவிட வயதான ஹீரோக்களுடன் நடிப்பதுதான் உடலுக்கும் மனதுக்கும் உகந்த விசயம் என்று தெலுங்கு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்துள்ளார் சில்க்ஸ்மிதா. இளம் ஹீரோக்களுக்கு அனுபவம் போதாது. வயதானவர்களுக்கு அனுபவம் நிறைய என்று காரணம் சொல்லிவிட்டு குலுங்கி குலுங்கி சிரித்தாராம். குலுங்காதது பழக்க தோசத்தால்.

நிலாப்பெண் படத்தில் நடித்துவரும் காவேரிக்கு நல்ல முகவெட்டு இருந்தாலும் வாய்ப்புகள் மட்டும் கைக்கெட்டாத நிலையில் இருக்கின்றன. நிலாப்பெண் படம் மட்டும் நன்றாக ஓடினால்போதும் நிலாவாக தமிழ் திரையுலகில் வலம்வரத் தொடங்கிவிடுவார் காவேரி.



### அங்கே பிடிக்கத் திட்டம்

ரேவதியின் கணவர் சுரேஷ் மேனன் இயக்கிய படம் 'பாசமலர்கள்'. அரவிந்தசாமியும், ரேவதியும் நடித்த அந்தப் படம் எதிர்பார்த்த வசூலை அறுவடை செய்யவில்லை. விட்டதை இருபது முப்பது இலட்சம் நஷ்டம். அரவிந்தசாமி நடித்த 'ரோஜா' இந்தியில் சூப்பர் ஹிட். பார்த்தார் சுரேஷ்மேனன் பாசமலர்களை இந்தியில் மொழிமாற்றி வெளியிட்டு இங்கே விட்ட லாபத்தை அங்கே பிடிக்கப் போகிறார்.

### பொய்-பொய்

கொழு கொழு உடம்பைத்தான் மலையாள ரசிகர்களுக்கு பிடிக்கிறது என்று சொல்லும் அஞ்சு 15 மலையாளப் படங்களில் நடிப்பதாக சொல்வது பொய்! இரண்டோ மூன்று படங்கள் என்பதே உண்மை.

### கிசு-கிசு நியூஸ்

### இனிப் போதும்

மகளோடு ஒத்துப்போகாத இந்து கடவுளின் பெயர் வைத்திருக்கும் பழம் பெரும் நடிகை அவர். இப்போதும் நான் இளமைதான் என்று சொல்லி நடித்து வருபவர். அவருக்கும் இயக்குநர் கணவருக்கும் இடையே கும்கும். "உன்னால்தான் என் சொத்து கரைஞ்சுபோச்சு இனி படம் எடுக்கும் ஐடியாவை விட்டுத் தொலை" என்றுவிட்டாராம் நடிகை.

### சாமியாரினி நடிகை

பெயரில் தீபத்தை வைத்திருக்கும் அந்த நடிகையை ஏறக்குறைய மறந்திருப்பீர்கள். கமல், ரஜனி என்று பலரோடும் ஒரு காலத்தில் ஜோடியாக கலக்கியவர். பின்னர் உடல் பருத்து கட்சியொன்றில் சேர்ந்து அரசியல்வாதினியாகியவர். இப்போது கட்சியும் கைவிட்டதால் சாமியாராகியிருக்கிறார். என்னிடம் வரும் பக்தர்களுக்கு நல்வழி காட்டுவேன் என்பது மாதிரியெல்லாம் புலம்பிக்கொண்டிருக்கிறாராம்.

### பரிசாக பங்களா!

பம்பாய் இறக்குமதி காதலன் நடிகை தற்போது சூப்பர் நடிகரோடு நடித்து வருகிறார். தமிழில் அவர் கேட்கும் தொகையைக் கொடுக்க முடியாததால் அதிக படங்களில் நடிக்கவில்லை. தெலுங்கில் நடிக்க அவருக்கு தேவைப்படுவது சொற்ப துணியின் மட்டுமே. தெலுங்கின் பிரபல தயாரிப்பாளர் ஒருவர் சொந்தமாக பெரிய பங்களா ஒன்றையே வாங்கிக்கொடுத்திருக்கிறாராம். காரணம் சேவை நோக்கமல்ல என்பது மட்டும் உண்மை.

### போனில் குழையும் சுகன்யா

தமிழில் 'நம்பர் வன்' இடத்தை பிடிக்க முழு மூச்சாய் இறங்கியவர் சுகன்யா. மகாநதி படத்தில் கமலிடம் வாங்கிய ஆழமான முத்தமும் அதில் அடக்கம்.

என்னதான் முயன்றும் படிப்படியாய் ஏறியும் திடீர் தோல்வியால் ஒரே சறுக்கல்.

'வண்டிச்சோலை சின்ராசு' 'சீமான்' என்னும் இரு படங்களும் தோல்வியடைந்து விட்டதால் சுகன்யாவை தயாரிப்பாளர்கள் திரும்பிப்பார்க்கிறார்கள் இல்லை. பெரிய நடிகர்கள் சிலருக்கு போன்போட்டு "உங்கள் அடுத்த படத்தில் நான்தான் ஹீரோயின்" என்று நைஸ் பண்ணுகிறாராம். அவர்கள் இனி ஏன் கவனிக்கப்போகிறார்கள்?

### உயரம் 6 1/2 அடி

மகாபிரபு படத்தில் வில்லனாக நடிப்பவர் மகராஜ். புதுமுகமான மகராஜ் நல்ல உயரம். 6 1/2 அடி. வயது 33. படத்தில் 58 வயது அரசியல்வாதியாக நடிக்கிறார்.

## வடிவேலு

படத்திற்குப் படம் வித்தியாச 'மேக்-அப்'பில் வந்து கலகல பண்ணும் வடிவேலுதான் இன்றைய தேதியில் 'மார்க்கெட்' உள்ள நகைச்சுவை நடிகர்.

எந்தவித கிசு-கிசுவிலும் மாட்டக்கூடாது என்பதில் கவனம். அதனால் நடிகைகள் விசயத்தில் விரதம் இருக்கிறார்.

"எதிர்பார்க்கவேயில்லை. அப்பாவுக்கு மருந்து வாங்கக்கூட முடியாத கஷ்டமான நிலையில் இருந்தவன் நான். இப்போது கைநிறைய பணம். அப்பாதான் உயிரோடு இல்லை. என் முதல் படத்தைக்கூட பார்க்காமல் கண்மூடிவிட்டார்" என்று கண்கலங்குகிறார்.

இப்போது போட்டி கவுண்டமணிக்கும் வடிவேலுவுக்கும்தான். போட்டியில் வடிவேலு தொடர்ந்து முதலிடத்தில் நின்றுபிடித்தால் செந்தில் வடிவேலுவிடமும் உதைவாங்கவேண்டியிருக்கும். உதை வாங்கி சம்பாதிக்கும் விசயத்தில் செந்திலைவிட்டால் வேறு யாருக்கும் அப்படி ஒரு ராசி வாய்ப்பது கஷ்டம்தான்.



வடிவேலு-ராதிகா-மணிகண்டன
படம்-உதவும் கரங்கள்

### மீனா 16?

அன்புள்ள ரஜனிகாந்த் படத்தில் நடிக்கும்போது மீனாவுக்கு வயது 9. படம் வெளியானபோது பத்து வயதாகியது. அந்தப் படம் வெளியாகி பத்து வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் சமீபத்தில்தான் தனது பதினாறாவது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார் மீனா! கணக்கு உதைக்கிறதல்லவா? நடிகைகளின் வயதில் கணக்கே தனிதான்.

வலையில் சிக்காத மீன்
காளை கரத்தில் வீழ்ந்தது பார்!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அப்படியும் திருப்தியில்லை

பாரதிராஜாவின் கருத்தம்மா எப்போதோ திரைக்கு வந்திருக்க வேண்டியது. தாமதமாகிவிட்டது. காரணம் பாரதிராஜாவேதான். நான்குமுறை கதையை மாற்றி மாற்றி எடுத்தும் திருப்தி வரவில்லையாம். ஐந்தாவது முறையாக எடுத்திருக்கிறார்.

கிழக்குச் சீமையிலே படத்தின் வெற்றி பாரதிராஜாவை பயப்படுத்திவிட்டது. அடுத்த படமும் வெற்றியாக வரவேண்டுமே என்ற பதட்டம்தான் லேசில் திருப்தியாகாததற்குக் காரணமாம்.

# திருமூர்த்தி-எப்போது?

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்க பவித்ரன் பிரமாண்ட செலவில் இயக்கப்போகும் படம் திருமூர்த்தி. நட்சத்திர ஹோட்டலில் ரூம் போட்டு பல கதைகளை தயார் செய்த பவித்ரன் அனைத்தையும் விஜயகாந்திடம் காட்டி அபிப்பிராயம் கேட்டிருக்கிறார். விஜயகாந்த் உதட்டை பிதுக்கிவிட்டார். "சரி நீங்களே நல்ல ஒரு கதையை சொல்லுங்க என்று கேட்க விஜய் ஒரு 'அவுட் லைன்' கொடுத்தாராம். 'திருமூர்த்தி'ரெடி.

## மாறிய முடிவு

'தாமரை' படத்தில் நெப்போலியனின் ஜோடியாக நடிக்க மறுத்தவர் கஸ்தூரி. இப்போது நெப்போலியன் ஜோடியாக 'சின்னமணி' படத்தில் நடித்துவருகிறார். புதிய பட வாய்ப்புகள் குறைவானதால் முடிவை மாற்றிக்கொண்டார் கஸ்தூரி. பக்கா போஸ்!





மோகினி
படம்-புதிய மன்னர்கள்

## இன்றைய சீசன்

தமிழ் படவுலகில் அடிக்கடி சீசன் மாறும். இப்போது இரண்டு பெண்டாட்டி சீசன். 'வீரா' படத்தில் ரஜினிக்கு இருவர். படம் வெற்றி. உடனே 'சின்ன வீடு பெரிய வீடு' என்று ஒரு டப்பிங் படம். பாக்கியராஜ் அடுத்ததாக தயாரிக்கும் படத்திற்கும் 'ரெண்டாம் தாரம்' என்று பெயர் வைத்துள்ளார்.

## பிஞ்சு கரக்கா வெட்டு

தாமரை படத்தில் நெப்போலியன் ரஞ்சிதா நெருங்கிப் பாடும் பாடல் காட்சிமீது சென்சார் பாய்ந்திருக்கிறார்கள்.

முக்கா முக்கா மரக்கா தொங்குதல்வா பிஞ்சு கரக்கா என்ற பாடலில் தொங்குதல்வா பிஞ்சு கரக்கா என்ற வரிகளில் ஒரே வெட்டு. அத்தோடு 'எங்கே தேன் துளி' என்று தொடங்கும் பாடல் காட்சியும் பூரண கட்.



# நிலா

## குஷ்புவின் ராகம்

மலையாளத்தில் பிரபல இயக்குநரான ஐ.வி.சசி இயக்கும் தமிழ் படம் 'ராகம்' குஷ்பு-ஜெயராம் ஜோடியாக நடிக்கிறார்கள். குஷ்புவுக்கு அபலைப் பெண் வேடம். ஜெயராம் போலீஸ் அதிகாரி. இசை-இளையராஜா. பாடல்கள்-வாலி.

ரகுவரன், விக்ரம், சரத்பாபு ஆர்.சுந்தர்ராஜன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

'குரு', 'காளி' போன்ற வெற்றிப் படங்களை தமிழில் தந்தவர் ஐ.வி.சசி.

## டும்-டும்

தங்கை வேடங்களில் நடித்துவரும் கீர்த்தனா இயக்குநர் ஒருவரை வாழ்க்கைத்துணைவராகக் கொண்டார்.

...னி

...கதாநாயகி ...பின்னணி ...மனிரத்தினத் ...கதாநாயகி ...கொஞ்சராயா ...சியுள்ளார்.

...'ராஜபாண்டி' ...மனோஜ்குமார் ...த்திற்கு 'தர்மா' ...ர். இந்தப் படத்தின் கதாநாயகனாக முன்னணிக் ...ளார்.

...ந்திப்படமொன்றில், ஒரே ஒரு பாடல் காட்சியில் ...னார் சங்கவி.

...வில் கிட்டார் வாசித்துக்கொண்டிருந்த கீர்த்தி ...ாத்தாச்சு' படத்தின் மூலம் இசையமைப்பாளராக

...வியாளராக இருந்த ஜே.பி.என்னும் ஜெயபிரகாஷ் ...ன்றை இயக்கவுள்ளார். ஜெயராம் கதாநாயகனாக ...ற்கு பாக்கியராஜ் கதை, வசனம் எழுதுகிறார்.

...கில் முதன் முதலாகத் தயாரித்து நடிக்கும் ...ரவில் ஒரு பாடல் பாடுகிறார்.

...கட்டுமரக்காரன்' படத்தை இயக்கி வரும் பி.வாசு, ...வின் சகோதரர் அப்துல்லா கதாநாயகனாக ...ான்றை இயக்கவுள்ளார்.

... சிரஞ்சீவி தற்போது 'பிக்பாஸ்' என்ற படத்தில் ...ந்தப் படத்தில் இவருக்கு ஜோடிகளாக ரோஜா, ...ஆகியோர் நடிக்கின்றனர்.

...'சின்ன புள்ள' ஆகிய படங்களில் கதாநாயகியாக ... புதிய பட வாய்ப்புகளை மறுத்து வருகிறார். ...லைக்காட்சித் தொடரொன்றை இயக்கவிருப்பதே

... மன்னர்கள் படத்தில் பத்திரிகை நிருபராக ...டிக்கிறார் மோகனா. இந்தப் படத்தில் மோகனாவின் ... நடிக்கிறார்.

... முதலாக இயக்கும் படத்தில் சத்தியராஜிற்கு ...ப்பார் என்று தெரிகிறது.

# நல்லமனிதர்...

இஞ்சி இடுப்பழகி
என்று பாடலாம்
தென்னமர உரலழகா
என்று பாடக்கூடாதோ
இருக்கேன்
முகத்தை மடிச்சுக்கிறே"



சத்யராஜ்-ராதிகா
படம்-வீரப்பதக்கம்

நடிகர் சத்தியராஜிற்கு திரையுலகில் நல்ல பெயர்

ஆம்பத்தில் வில்லனாக ஓரிரு காட்சிகளில் நடிக்கவந்தபோது எப்படிப் பழகினாரோ அப்படியே இப்போதும் பந்தா இல்லாமல் பழகிவருகிறார் என்கிறார்கள்.

'அமைதிப்படையில்' வில்லன் நடிப்பில் வெளுத்து வாங்கிய சத்யராஜ் இயக்குநராகும் செய்தி 'சினிவிசிட்' வாசகர்கள் அறிந்ததுதான்.

அவர் இயக்கப்போகும் படத்திற்கு 'வில்லாதிவில்லன்' என்று பெயரிட தீர்மானித்துள்ளார்களாம். அசத்திலால் சரி.

## தாங்க முடியாத விசித்ரா

சென்சார் கண்டிப்பாக கத்தரிக் கோலை தூக்கியதால் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள் கவர்ச்சி நடிகைகள்.

மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர் விசித்ராதான். இடையில் தெளிவு சுழியோடு மடிப்பு அம்சமாக அறிமுகமான விசித்ரா சில்க் சுமிதாவின் இடத்தைப் பிடிக்க வெகு வேகமாக முன்னேறியவர். முன்னே றும் அவசரத்தில் அவர் ஆடைகளை குறைத்துக்கொண்டாலும் இனி கத்தரிக்கோல் மறக்காமல் வெட்டி விடுமே. அதுதான் விசித்ராவின் இன்றைய கவலை.

## கனகா கவனிக்கப்படுகிறார்

முன்னாள் நடிகை தேவிகாவின் மகள்தான் கனகா என்பது தெரிந்த செய்திதானே. கனகாவோடு படப்பிடிப்புகளுக்கு சென்று வந்த தேவிகா இப்போது அதனை நிறுத்திக்கொண்டார். 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் தயாரிப்பாளர்கள். ஆனால் நிம்மதி நிலைக்கவில்லை. தேவிகாவா கொக்கா? கனகாவை கண்காணிக்க தனியாக ஒரு ஆளை நியமித்திருக்கிறார். கனகா வசனம் பேசி, கண்ணைக் கசக்கி, ஹீரோவோடு மரத்தை சுற்றி ஓடியாடி நெருங்கி நொறுங்கி வரும்வரை கண்கொத்திப் பாம்பாக இருப்பாராம் கண்காணிப்பாளர்.

## பாரதிராஜா பாடினார்

நடிகர் நடிகைகள் சொந்தக்குரலில் பாடத்துவங்கிவிட்டார்கள். இப்போது இயக்குநர் பாரதிராஜாவும் பாடியிருக்கிறார். ஏ.ஆர்.ரகுமான் இசையில் 'கருத்தம்மா' படத்தில் வரும் ஒரு பாடலுக்கு 'ஹம்மிங்' கொடுத்திருக்கிறார். பாடலை எழுதியது வைரமுத்து.



## கே.ஏ.தங்கவேலுவின் கடைசிபடம் பெரிய மருது

மறைந்த நகைச்சுவை நடிகர் தங்கவேலு கடைசியாக நடித்த படம் 'பெரிய மருது'.

'பெரிய மருது' படத்தில் தலையில் 'விக்' வைத்து நடித்தார் தங்கவேலு.

படத்தில் உங்களுக்கு வயதான வேடம்தானே வழுக்கைத் தலையுடன் நடித்தால் இயல்பாக இருக்குமே என்று சொன்னாராம் இயக்குநர்.

தங்கவேலு உடன்படவில்லை. "ஒரிஜினல் தலையோட நடிச்சா என் 'இமேஜ்' போய்விடும். நடித்தால் இந்த 'விக்'குடன்தான் நடிப்பேன்" என்று பிடிவாதம் பிடித்தாராம். அவர் விருப்பப்படியே விட்டுக்கொடுத்தாராம் இயக்குநர்.







## தாயை மதிப்போம்

தாய்மை என்னும் சொல்லுக்கு
தாரணி எங்கும் ஈடுண்டோ?
வாய்மை கொண்ட தாயன்பை
வாரி வழங்கிட யாருண்டோ?
தூய்மை கொண்ட தாயாலே
தூணாய் வளர்ந்து நின்றோமே
சேய்கள் நாங்கள் தாயவளை
சேர்த்துப் போற்றிக் காப்போமே.

கருவில் எம்மைச் சுமந்து
கனிவாய் வளர்த்தெடுத்தாளே
உருவில் உயிரைத் தந்தே
உலகில் ஆளாய் வளர்த்தாளே.
அருமை அன்னை தன்னை
அடைந்தது பாக்கியமே! அவள்
பெருமை தன்னை விளக்கி
பெரிதாய்த் தாயை மதிப்போமே.

நோயினைத் தீர்த்திடும் மருந்தாய்
நோக்கி எம்மைக் காத்தாளே
தாயின் பாதத்தில் சுவர்க்கம்
தங்கியிருப்பதை அறிவோமே
ஆயிரம் மகிமைகள் தாயிடம்
ஆகா! இருக்குதே அறிவோமே
சேய்கள் நாங்கள் அவளைச்
சேவைகள் செய்து காப்போமே

கிண்ணிக் கன்னி [illegible]
கிண்ணியா-[illegible]

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லைத்
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்"
-சுப்பிரமணிய பாரதியார்-

பாப்பா முரசு சிறுகதை

# மான் கற்ற பாடம்



சுந்தரவனம் என்று ஓர் அழகிய காடு இருந்தது. அங்கே ஏராளமான மிருகங்கள், பறவைகள் வசித்தன. மான்கள் கூட்டம் கூட்டமாய் அருவிக் கரையோரம் வசித்து வந்தன.

கஸ்தூரி என்னும் பெண்மான் அந்தக் கூட்டத்திலேயே அதி அற்புத அழகியாய்த் திகழ்ந்தது. அதன் மை தடவியது போன்ற அழகிய கண்களும், உடலில் வரையப்பட்ட புள்ளிகளும், அந்த மானைப் பேரழகியாகக் காட்டின.

ஒரு நாள் அந்தக் காட்டில் மழைத் தூறல்கள் விழுந்தன. ஆனந்தமாய் நனைந்து கொண்டே கஸ்தூரி ஆடிப்பாடியபடி ஓடியது. சந்தோசத்தில் தலைகால் புரியாமல் அது, எந்தத் திசையில் போகிறோம் என்று உணர்ந்து கொள்ளாமல் துள்ளி ஓடியபடி இருந்தது.

திடீரென்று ஒரு ஒளி அதன் முகத்தில் பட்டு விழிகளைத் தாக்கவே, அது கூசுகின்ற கண்களைச் சுருக்கிக்கொண்டு ஒளிவந்த திசையைப் பார்த்தது.

ஒரு கண்ணாடி!

யாரோ ஒருவர் வேட்டைக்கு வந்து தவற விட்டுச் சென்றிருந்தார். முகம் பார்க்கும் அந்தக் கண்ணாடி பளபளப்புடன் தரையில் கிடந்தது. கஸ்தூரி ஆச்சரியத்துடன் அருகே போய் நின்றது.

அழகிய அதன் முகமும், உடலும் அந்தக் கண்ணாடியில் துப்புரவாகத் தெரிந்தது. குளம், குட்டைகளில் இருக்கும் கலங்கிய நீர் பிரதிபலிக்கும் தெளிவற்ற பிம்பத்தைத்தான் அது இத்தனை நாள் பார்த்து வந்திருக்கிறது. தான் இப்படி அழகாக இருப்பேன் என்று கொஞ்சம்கூட எதிர் பார்க்கவில்லை.

சந்தேகத்திற்கு இடமே இல்லாமல் தெட்டத் தெளிவாக தன் உருவத்தை வெளிப்படுத்திய கண்ணாடியையே அது இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்து.

எத்தனை அழகிய விழிகள்
எத்தனை அழகிய உடல்
எத்தனை அழகிய புள்ளிகள்.

அட! இதென்ன இத்தனை எழில் கொஞ்சும் கொம்புகள்? இவ்வளவு அருமையான கொம்புகளா எனக்கு? ஆகா! இறைவன் எவ்வளவு கருணை உள்ளவர். எப்பேர்பட்ட அழகுமிகு கொம்புகளை எனக்காகப் படைத்திருக்கிறார். வளைந்து, நெளிந்து, கிரீடம் போன்ற வளைவுகளுடன், என்ன அழகு இது?

கண்ணாடியைப் பெருமிதத்துடன் பார்த்துக்கொண்டே வந்த கஸ்தூரி, தன் கால்களைக் கண்ணாடியில் பார்த்ததும் துடித்துப்போய்விட்டது.

'சேச்சே என் கால்களா இவை? அழகிய உடலுக்குச் சற்றும் பொருத்தமேயில்லாமல்... குச்சி குச்சியாய்... அய்யோ! அசிங்கம் பிடித்த கால்கள். கோல்களை நட்டு வைத்தது மாதிரி அழகற்ற கால்கள். இறைவா! இப்படி துரோகம் செய்து விட்டாயே! அழகிய கொம்பைக் கொடுத்து என்னை எழில் ராணியாக்கிய நீயே, அவலட்சணமான கால்களைக் கொடுத்து ஏமாற்றி விட்டாயே! என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டது.

அப்போது, புதர் மறைவிலிருந்து 'கர்...கர்' என்று உறுமல் சத்தம் கேட்டது. அது சிங்கத்தின் கர்ஜனை. அவ்வளவுதான். மான் ஓடத் தொடங்கியது.

தாள முடியாத பசியுடன் சிங்கம் துரத்திற்று. கொழு கொழுவென்று உடலுடன், பருத்து செழித்திருந்த மான் அதன்பசியை இன்னும் தூண்ட வெறியுடன் துரத்தியது.

உயிரைக் காப்பாற்றிக்கொள்ள மான் கண்டபடி ஓடியது.

காட்டு மரங்களின் அசுரத்தனமான வளர்ச்சியில் கிளைகள் எல்லாத் திசைகளிலும் பரவியிருக்க, ஒரு விநாடியில் கஸ்தூரியின் அழகிய கொம்புகள் கிளைகளில் மாட்டிக் கொண்டு விட்டன. சிங்கம் வந்துவிடப் போகிறதே என்று பயந்து நடுங்கியது மான்.

எப்படியோ கஷ்டப்பட்டு முயற்சித்து, உடலை அப்படியும், இப்படியும் அசைத்து கொம்புகளை விடுவித்துக்கொண்டு தலை தெறிக்க ஓடத் தொடங்கியது.

வெகுதூரம் துரத்திக்கொண்டு வந்தாலும் சிங்கத்தால் மானைப் போல ஓட முடியவில்லை. களைத்துப்போய் சிங்கம் திரும்பிப் போய் விட்டது.

அப்பாடா என்று மான் பெருமூச்சு விட்டது. உள்ளம் நிதானத்திற்கு வந்ததும், உணர்ச்சிகள் உயிர்பெற்றன. மூளை வேலை செய்யத் தொடங்கிற்று.

அழகின் பிறப்பிடம் என்று கொம்புகளை நினைத்துப் பெருமைப்பட்டோம். அசிங்கத்தின் உதாரணம் என்று கால்களை எண்ணிக் கவலைப்பட்டோம்.

ஆனால்... உயிர்போய் விடக் காரணமாய் இருந்தவை கொம்புகள். உயிர் காப்பாற்றப்பட உறுதுணையாய் இருந்தவை கால்கள்.

'இதை நான் உணராமல் இருந்து விட்டேனே' என்று கால்களைப் பெருமையுடன் பார்த்தது மான்.

## அறிவோம் மனதில் பதிவோம்



உலகில் மிகப் பெரிய மூக்கு உள்ள மனிதர் [illegible] தோமஸ் வெட்டர்ஸ் [illegible] வாழ்ந்தார். இவரது மூக்கின் நீளம் ஏழரை அங்குலம்.



ஆங்கில விஞ்ஞானி மைக்கல் பரடே தன் முகத்தில் ஆங்கில நாளிதழை வைத்து மூடியபடியே இறந்து விட்டார். அவர் ஆழ்ந்து தூங்குவதாக நினைத்தவர்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகே அவர் இறந்ததை அறிந்தனர்.



இருமுறை நோபல் பரிசு பெற்ற ஒரே விஞ்ஞானி மேரி கியூரி அம்மையார். இவர் முதல் உலகப் போர் சமயத்தில் அம்புலன்ஸ் ஓட்டுநராகப் பணிபுரிந்தார்.



பிலிப்பைன்சில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி ஜெசிகா சப்காஜான் என்ற பெண், ஒரு பெண் குழந்தையைப் பெற்றார். அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு மே 30ம் திகதி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றார். இப்படி அடுத்தடுத்த மாதங்களில் குழந்தை பிறந்தது இதுவே முதல் முறை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.11.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 64
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 62

பரிசுக்குரியவர்:
எம்.ஆர்.எம்.அர்ஷாத்
அல்-இர்ஷாத் முஸ்லிம் மகாவித்தியாலயம், ஹாலி-எல.

பாராட்டுக்குரியவர்கள்:

ஏ.கொட்வின் பெனார்ந்து
புனித பேதுரு கல்லூரி-கொழும்பு-13.

பி.ராஜீவ்சங்கர், இந்துகல்லூரி-கொழும்பு-04.

வை.சுகந்தி
விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்-திருகோணமலை.

ஜான்சி ஒலிவர் டேவிட், புனித பீட்டர் ஆலயம்-லுணுகல.

கா.சத்தியப்பிரியா
கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம், வாழைச்சேனை.

## செய்து பாருங்கள்

பிளாஸ்டிக் சீப்பு ஒன்றை எடுத்து அதை ஒரு கம்பளித் துணியில் வைத்து நன்கு தேய்க்கவும். அப்படித் தேய்த்தால் சீப்பிலிருந்து மின்சார அலைகள் ஏற்படும். இதை எப்படி அறியலாம்?

அப்படித் தேய்க்கப்பட்ட சீப்பை, குழாயில் நீரை லேசாக வழிய விட்டு அதன் அருகே கொண்டு சென்றால் நீர் சீப்பை நோக்கி இழுபடும். சீப்பிலிருந்து எழும் மின்சார அலை நீரை இழுப்பதே இதற்குக் காரணம்.

இதைப்போன்று மின்சார அலை ஏற்படுத்தப்பட்ட சீப்பை ரென்னிஸ் பந்தின் அருகே கொண்டு சென்றால் அந்தப் பந்து சீப்பை நோக்கி நகரும்.



## விடுகதைளும் விடைகளும்

01. பழமையானவள் என்றாலும் இனிமையானவள். இளமையானவள் என்றாலும் வளமையானவள். எண்ணத்தில் நடனமிடும் ஏந்திழை. அவள் யார்?
02. தரையில் வளராத மரம். தலைமேலே வளரும் மரம். கிளை உண்டு. இலை இல்லை. அது என்ன?
03. ஏரியில் இல்லாத நீர். தாகத்திற்கு உதவாத நீர். தண்ணீரல்ல! வேறென்ன நீர்?
04. உடல் உண்டு. தலை இல்லை. கை உண்டு. கால் இல்லை. தானாக ஆடும். தயங்காமல் ஓடும். அது என்ன?
05. சின்னச் சதுரப் பெட்டி. சிங்கார வர்ணப் பெட்டி. கற்றோர்க்குக் கைப்பெட்டி. விற்றோர்க்குப் பணப்பெட்டி. அது என்ன?
06. பார்த்தவர் இரண்டு பேர். எடுத்தவர் ஐந்துபேர். சாப்பிட்டவரோ ஒரே ஒருவர். யார் அவர்?
07. மரமென்றால் அடுப்பெரிக்கும் விறகுமாகாது. சீப்புண்டு. தலை கோதி வார முடியாது. பூவுண்டு- கொண்டையிலே சூட முடியாது. அது என்ன?
08. ஈராறு சேர்ந்தால் ஒன்றாகும். முப்பதைக் கூட்டினால் ஒன்றாகும். ஏழைக் கூட்டினால் ஒன்றாகும் அறுபதைக் கூட்டவும் ஒன்றாகும். இவை என்ன?
09. காட்டுமான் அல்ல, வீட்டு மான் அல்ல, கடல் நடவே இருக்கும் மான். என்ன மான் தம்பி?
10. கண்ணுக்கு விருந்தாய் கையில் இருக்கும். கருத்துக்கு விருந்தாய் மனத்தில் ஒலிக்கும். ஞானத்தை சுமந்து நமக்குத் தந்தே நல்லபடி வாழ்வதற்கு உதவியும் செய்யும். இது என்ன?

### விடைகள்

01. தமிழ் மொழி 02. மான் கொம்பு 03. கண்ணீர்
04. கடிகாரம் 05. புத்தகம் 06. கண், கை, வாய்
07. வாழை 08. வருடம், மாதம், வாரம், ஒரு மணி
09. அந்தமான் 10. புத்தகம்

எ.எல்.சித்தி ஷர்மிலா-அல்.ஹிலால் வித்தியாலயம், சாய்ந்தமருது-கல்முனை.

01. மனிதர் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்கும் பூ. அது என்ன?
02. ஒருவனை கூப்பிட்டால் ஊரையே அழைப்பான். அவன் யார்?
03. உடம்பில்லா மனிதன். ஊர்முழுவதும் சுற்றுவான். அவன் யார்?
04. மண்ணில் இருந்து வந்தவர். பம்பரம் போன்று சுழன்றவர். எரியும் தீயில் வெந்தவர். எல்லோர் வீட்டிலும் நுழைந்தவர். அவர் யார்?
05. கால் உண்டு, விரல் இல்லை. முதுகு உண்டு, தலை இல்லை. கை உண்டு, விரல் இல்லை. அது என்ன?

### விடைகள்

01. நட்சத்திரம் 02. காகம்
03. புகை 04. பானை
05. நாற்காலி.

என்.எம்.இம்ரான்
அக்குறணை மத்திய கல்லூரி.

## அன்றே சொன்னார் நன்றே சொன்னார்

* கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூல வேர். -பிளேட்டோ-
* எந்த உதவியுமின்றி தனியே நிற்கக் கூடியது உண்மை மட்டுமே. -ஜெபர்சன்-
* நீங்கள் பணக்காரர்களாக இருக்க வேண்டுமானால் சம்பாதிப்பதைப் பற்றி மட்டும் சிந்திக்காதீர்கள். சேமிப்பதைப் பற்றியும் சிந்தியுங்கள். -பிராங்க்கிளின்-
* புத்தகங்கள் இல்லாத வீடு ஆத்மா இல்லாத உடலைப் போன்றது. -சிசெரோ-
* அறிவற்ற சிநேகிதனுடன் சேர்வதைவிட, புத்திசாலியான விரோதியை அடைவதே மேல். -ஷேக்ஸ்பியர்-
* பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் தாழ்ந்து வளையும். நீ பெருமை அடைய வேண்டுமானால் அடக்கத்தோடும் பணிவோடும் இரு. -இராமகிருஷ்ணர்-
* அறிவு என்பது நதியைப் போன்றது. அது எவ்வளவு ஆழமானதாக உள்ளதோ அவ்வளவு அமைதியாக இருக்கும். - பைரன்-

# தேன்கிண்ணம்

### பிரிந்து விடாதே...

உன்னை நினைத்தால்
உணர்வுகள் துடிக்கும்
உண்மை தெரிந்தால்
உறவுகள் வெடிக்கும்

வேதனைக் காம்புகளில்
வேங்கையாய் பாய்கின்றேன்
சோதனை தாங்காமல்
சோர்ந்தே..விழுகின்றேன்

காதலித்த பாவத்திற்காய்...
கனவுகள் காண்கின்றேன்
காகிதத் தாளில்–
கவிதனை வடிக்கின்றேன்

பிரிவுத் துயரால் பித்தனானேன்
பிரியமான காதலியே...!
புரிந்துகொள் என் நிலையை
பிரிந்து விடாதே....என் உயிரே....

**தமிழ்க்கண்ணன்–பாரிஸ்.**

### நான் விஷமானதேன்!

நீயும் நானும்
நேசித்தோம்.
இப்போது–அது
நினைவுகளாய் மட்டுமே!

நேசித்தபோது–உனக்கு
நிஜமாய் தெரிந்தது
இப்போது நிழலாய் போனதோ?

காதலித்தபோது–உனக்கு
காவியமாய் தெரிந்தது
இப்போது–வெறும்
காகிதமாய் தெரிகிறதோ?

கட்டுண்டு கிடந்தபோது
கடலை விட உனக்கு
ஆழமாய் தெரிந்தது
இப்போது
கானல் நீராய் தெரிகின்றதோ?

என்னிடம்தான்
ஆடவன் நீ
நாடகம் ஆடினாய்

அடுத்ததாக தேடியுள்ள
அணங்கவளிடமாவது
ஆண்மகனாய் நடந்துகொள்.

**எஸ்.யாதவி–கலஹா.**



### கடைசியாய்

அன்பே...!
பத்திரப்படுத்திவை
அந்த சிகப்பு ரோஜாவின்
சின்ன இதழ்களையும்,
கண்ணீர்
உப்புக்கரித்த
கடைசி
முத்த நினைவுகளையும்,
நீ
மெல்ல மெல்ல
அபகரித்த
என்
காதல்
இதயத்தையும்..

மௌனமாய்ப்போன
என்
இதயக் கூண்டினை
நான்
நிரப்பிக்கொள்கிறேன்.
காத்திருப்புகளாலும்
கவிதைகளாலும்...!

**கற்பிட்டி முனாஸ்.**



### [illegible]

நீதிக்கு
நியமனமும்,
உண்மைக்கு
உயர்விடமும்
இல்லாமல் போனது.

அகதி எனும்
நாமம் பெற்று
முகாம்களுக்குள்
அவதியுறும்
மனிதப் புனிதம்.

சந்தோஷங்களைத்
தொலைத்துவிட்டு
சோகத்தில்
சோர்ந்துபோன
நம் தேசம்.

ஊதியமில்லாமலும்
ஓயாது
ஊழியம் புரியும்
துப்பாக்கி
ஊழியர்கள்

மரக்கட்டைகள்போல்
ரோடுகளிலும்,
காடுகளிலும்
ஏலமிடப்படும்
மனித உயிர்கள்

இத்தனையும் நிகழ்வது
நகர்ந்து செல்லும்
இந்த
இருபதாம் நூற்றாண்டில்தான்

**காவத்தமுனை ஹாறூன்.**





### விடியல்

இரவு துப்பிய
உமிழ் நீர்

### கனவு

நினைவுச் சுருள்
சேமித்த
இலவசக் காட்சி.

### அமாவாசை

ஒரு நாள் மட்டும்
பூமியோடு
நிலாப் பெண்
ஊடல்

### மௌனம்

அவளை
ர்விவர்மன் ஓவியம்
என்றேன் அதற்காக
சிரிப்போடு நின்றுவிட்டாள்

### திருமணம்

வாழ்க்கை சிறைக்குள்
வசமாய் மாட்டிக்கொண்ட
கைதிகள்

**எஸ். கலாதாசன்–நானுஓயா.**

### மயானத்துச் சேதிகள்

இரவு
அழுது வடியும்

••

உயிரை
எங்கோ
உரித்துவைத்துவிட்டு
உருக்கொண்ட
வெறும்
பிரேதத்துடன்
வெற்றுப் பிரபஞ்சமெங்கும்
ஊர்வலம் போகிறேன்.

••

எதிர்ப்படும்
மண் திட்டுகளில்
எரிவுற்ற
மரண சோகைகள்
முழந்தாழிட்டு
மகுடமிடும்.

••

குருதி உறைந்து
குண்டு விழுந்த
குழியில்
பாறையாய் இறுகி
படுத்துக்கிடக்க
அலகுடைந்த
காக்கைகளும்
பிணந்தின்னிகளும்
தாகம் தீர்க்க
அதன் மேல்
ஆவலாய்
காத்துக்கிடக்கும்.

••

ஊளையிடும்
நரிகள்
ஊர்ந்து ஊர்ந்து
மண்ணை
நக்கித் திரியும்.
சிதறி விழுந்த
சின்னச்சின்ன
மனித சதைத்துண்டுகளை
பற்களின்
இடைகளுக்குள்
இரகசியமாய்
நாய்கள்
பதுக்கிக்கொள்ளும்.

••

எங்கோ
காற்றில் மோதி
உடைந்த
அவலத்து எதிரொலிகள்
காதுகளில்
ஆராரோ பாட
கண்ணை மூடி(த்)
தூங்கும் "
காட்டுப் பட்சிகள்
பலமிழந்த
காட்டுமிராண்டிகள்
மனித மிராண்டிகளை
பார்த்து
அதீத
மருட்சிகொள்ளும்.

••

ஓடிவந்து களைத்து
நின்ற ஒரு காட்டெலி
முன்னங்கால்களால்
பிராண்டி
கல்லறை
செய்ய நான்
பறந்துபோய்
எட்டிப்பார்த்தேன்....!
அங்கே
முனகலோடு
படுத்துக்கிடந்தது
என்
பரிதாபப்பட்ட
உடல்.

••

**கிண்ணியா சபருள்ளா.**

## அட..... அதுவும் அப்படியா?



படத்தில் இருப்பது சார்ள்ஸ்-டயானா தம்பதி என்று உடனே சொல்லிவிட்டால் உங்கள் ஊகம் மகா தப்பு. சார்ள்ஸ்-டயானா விவகாரம் மணமுறிவில் முடிந்தபோது அதைவைத்தே சம்பாதிக்கத் திட்டமிட்டுவிட்டார்கள் ஹொலிவூட் சினிமாக்காரர்கள்.

டயானா போலவே உள்ள கதரின் எக்ஸின்பார்க், சார்ள்ஸ் போல் இருந்த ரோஜர் ரீஸ் ஆகியோரைவைத்து 'சார்ள்ஸ்-டயானா அன்ட் ஹாப்பிலி எவர் ஆஃப்டர்' என்ற பெயரில் திரைப்படமாக்கிவிட்டார்கள். டயானாவாக நடித்தவரைவிட சார்ள்ஸ் வேடத்தில் நடித்தவர்தான் ரொம்ப பொருத்தம். வித்தியாசமே தெரியவில்லை.



## கத்தரித்த கடி ஜோக்ஸ்

காதலி: உங்க வீட்ல நம்ம கல்யாணத்தைப் பற்றிக் கேட்டீங்களே...என்ன சொன்னாங்க?

காதலன்: என் மகளும், மகனும் சித்தி வேண்டாம்னு புத்தி சொன்னாங்க.

□□

அவர்: என்னங்க இப்பிடி துரும்பா இளைச்சுப் போயிட்டீங்க?

இவர்: ஒரு வாரமா ஒவ்வீசுக்கு போகாததால சரியான தூக்கம் இல்லை அதான்.

□□

பாபு: உங்க அப்பா சொத்தை எல்லாம் குடிச்சே அழிச்சிட்டாராமே? உனக்கு எதுமே வைக்கலியா?

கோபு: ஒரு சொட்டுகூட வைக்கலடா.

□□

சோதிடர்: உங்க ராசிக்கு அடுத்தவாரம் சனி பகவான் இடம் பெயரப் போகிறார்...

வந்தவர்: ஆமாங்க...அடுத்த வாரம் எனக்குக் கல்யாணம் நடக்கப் போகுது.

□□

தாதி1: அந்த நோயாளி எப்படியாவது என் உயிரைக் காப்பாத்திடுங்க டாக்டர்னு கெஞ்சி அழுதது, டாக்டரை உருக்கிடுச்சு.

தாதி 2: பிறகு..?

தாதி 1: ஒரு வழியா ஒப்பரேசனை கான்சல் பண்ணிவிட்டார்.

□□



யோவ் ஸ்விட்சை ஓவ் பண்ணிவிட்டுப் போய்யா. இல்ல நான் ராத்திரி முழுக்க இப்படியே இருக்கணுமா?

## இந்த வாரம் உங்கள் பலன்

(06.11.94 முதல் 12.11.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் - சூரியன், புதன், வெள்ளி, இராகு
விருட்சிகம் - வியாழன்
கும்பம் - சனி
மேடம் - கேது
கர்க்கடகம் - செவ்வாய்

சந்திரன்-விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி வெற்றி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | கௌரவம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | மனத் தைரியம், உறவினர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- | கடன் சுமை நீங்கும், பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| சனி- | தெய்வானுகூலம், மகிழ்ச்சி நிலை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### மேஷம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | திடீர் சுகயீனம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | பி.ப. 3 மணி |
| சனி- | கடன்படல், காரியத்தடை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, பிள்ளைகளால் சுகம். | காலை 8 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, சௌகரியக் குறைவு. | காலை 6 மணி |
| வியாழன்- | பணத்தட்டுப்பாடு, எதிர்பார்த்த காரியத்தடை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| சனி- | சுபகாரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- | தெய்வானுகூலம், பலவித நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனத் தைரியம், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |
| புதன்- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | செலவு மிகுதி, பிள்ளைகளால் கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, செய்தொழில் நட்டம். | பி.ப. 1 மணி |
| சனி- | புதிய முயற்சி, செலவு அதிகம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் உயர்வு, பணக்கஷ்டம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | வீண் குறைகேட்டல், மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் கஷ்டம், கௌரவ நிலை. | காலை 6 மணி |
| புதன்- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், கடன் பயம். | காலை 10 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி | காலை 9 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துன்பம் மிகுதி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், வீண் குறைகேட்டல். | காலை 8 மணி |
| வியாழன்- | தனலாபம், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் பழி, வீண் மனஸ்தாபம். | காலை 8 மணி |
| சனி- | செல்வாக்கு நிலை, எதிர்பார்த்த நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பநிலை நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, முயற்சிகளில் வெற்றி. | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் குறைகேட்டல், கடன் படல். | காலை 7 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | காலை 8 மணி |
| சனி- | செலவு மிகுதி, பொருள் நஷ்டம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சிகளில் வெற்றி. | காலை 8 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | கடன்படல், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனக்குறை நீக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், வாக்குவாதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- | தனலாபம், குடும்ப சுகம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக்கஷ்டம், தொழில் பிரச்சினை. | காலை 9 மணி |
| திங்கள்- | உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனுள்ள செயல், மனத்தைரியம். | பி.ப. 2 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வியாழன்- | கௌரவம், தேகசுக நன்மை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தனலாபம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| சனி- | பொருள் பேறு, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | குடும்பசுகம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | உயர்ந்த நட்பு, பலவித நன்மை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | எதிர்பார்த்த நன்மை, தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தெய்வ நம்பிக்கை, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| திங்கள்- | பொருள் நட்டம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, காரியானுகூலம். | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | குடும்ப சுகம், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், மனக்குறைநீக்கம். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் படல். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருளாதார மேன்மை, பலவித நன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | குடும்ப சுகம், பெரியோர் நட்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 3 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உள்ளே 'எயிட்ஸ்' வில்லன்!

## மருத்துவ மனைக்குள் விபரீதம்!!



நமது நாடுகளைவிட பலதரப்பட்ட விடயங்களிலும் முன்னேறி விட்ட நாடுகளாக மேற்குலக நாடுகள் கணிக்கப்படுகின்றன. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் முன்னேற்றம் கண்ட நாடுகள்- மருத்துவத்துறையிலும் பெரு வளர்ச்சி கண்டவை என்று கருதப்படுகின்றன. ஆனால் அங்கும் கவலையீனமான பெருந் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் பெரும் சிக்கல்களும் உருவாகி விடுகின்றன.

பல துறைகளிலும் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ள கனடாவில் மருத்துவமனைகளில் நேர்ந்த தவறுகளினால் அங்கு 'எய்ட்ஸ்'நோய் எனும் பயங்கர நோய் மிக வேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அந்நாட்டிலுள்ள நோவோ ஸ்கொட்டியாவிலுள்ள பல மருத்துவமனைகளே இதற்குக் காரணம் என்பதனை கனடா அரசாங்கமே கண்டு பிடித்துள்ளது.

1980ம் ஆண்டு நடைபெற்ற இந்த அசம்பாவிதத்தினால் இன்று பல்லாயிரக் கணக்கானோர் 'எய்ட்ஸ்' நோய் பரவுவதற்குக் காரணமான எச்ஐவி கிருமிகளை தங்கள் உடலில் கொண்டு திரிகின்றனர்-மேலும் பலருக்குத் தொற்றுவதற்குக் காரணிகளாகவும் இவர்கள் உள்ளனர் என்று தெரிய வருகிறது. இவர்களை இன்றுள்ள நிலையில் கண்டு பிடிப்பது முடியாத காரியமாகும்.

ஹலிஃபாக்கைச் சேர்ந்த றாண்டி கொன்னர்ஸ் என்பவர் ஒரு பரம்பரை நோயினால் பாதிக்கப்பட்டவர். 'ஹீமோஃபீலியா என்றழைக்கப்படும் இந்நோயாளிக்கு ஒரு சிறு காயம் ஏற்பட்டாலும் அதிலிருந்து இரத்தப் பெருக்கு அதிகமாகிவிடும். மேலதிகமாக இரத்தம் பாய்ச்சுவதன் மூலம் இவர்களைக் குணப்படுத்தலாம்.

நொவோ ஸ்கொட்டியாவிலுள்ள மருத்துவமனை ஒன்றில் றாண்டி 1980ம் ஆண்டுகளில் சில தடவைகள் மேலதிக இரத்தம் பெற்றார். கடந்த பல ஆண்டுகளாக நோய்வாய்ப் பட்டிருந்த இவர் உண்மையில் எய்ட்ஸ் வைரசால் தாக்குண்டார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதே நோய் முற்றிய நிலையில் மரணமானார்.

றாண்டியின் 38 வயதான மனைவி ஜேனற் கொன்னர்ஸ் இன்று தனது நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார். இத்தனை வருடகாலமும் தனது கணவர் ஒரு எய்ட்ஸ் நோயாளி என்ற உண்மை தெரியாமல் அவருடன் வாழ்ந்தமையினால் தன் உடலிலும் எச்ஐவி வைரஸ் பரவியிருக்கும் என்று பூரணமாக நம்புகிறார்.

எந்த வேளையிலும்-எத்தகைய தடுப்பு நடவடிக்கை எடுத்த போதிலும்-தான் எய்ட்ஸ் நோய்த் தாக்குதலால் மரணமடைய நேரிடும் என்று அஞ்சுகிறார்.

நொவோ ஸ்கொட்டியா மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கிகளில் 'எய்ட்ஸ்' வைரஸ் பரவியிருந்த உண்மையினை 1986ம் ஆண்டுதான் மருத்துவ அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இருப்பினும் அதற்கு முன்னர் உள்ள ஆறு ஆண்டுகளில் இந்த இரத்த வங்கிகளிலிருந்து இரத்தம் பெற்றோரின் முழு விபரத்தையும் திரட்ட முடியவில்லை. எச்ஐவி வைரஸ் தொற்றுள்ள இரத்தம் பெற்றோரில் 65 பேரை எப்படியோ கண்டு பிடித்துவிட்டனர்.

ஆனால் எஞ்சிய 23 பேருடைய விபரங்களைக் கண்டுபிடிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1986ம் ஆண்டு உண்மை தெரிந்தவுடன் ஆக 600 டொலர் செலவுடன் ஒரு தனி அலுவலரை இம்மருத்துவ அதிகாரிகள் நியமித்து விபரங்களைத் திரட்டியிருந்தால் நோய் வேறு பலருக்குத் தொற்றாமல் பாதுகாத்திருக்க முடியும். அதிகாரிகளின் அசிரத்தையினால், கண்டுபிடிக்கப்படாத அந்த 23 நபர்களும் தாங்கள் தொடர்பு கொண்டவர்கள் மூலம் எச்ஐவி வைரஸ் கடத்திகளாகச் செயற்பட்டிருப்பர். இத்தனைக்கும் இவர்கள் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் என்ற உண்மை இவர்களுக்கோ இவர்களுடைய குடும்பத்தவர்களுக்கோ, இவர்களுடன் தொடர்பு கொண்டவர்களுக்கோ தெரியாது.

"மருத்துவத்துறையில் இதுவரை கண்டும் கேட்டுமிராத அசிரத்தையுள்ள அதிகாரிகளை உரிய முறையில் தண்டித்தாக வேண்டும்" என்று நொவோ ஸ்கொட்டியா மருத்துவத்துறை அதிகாரியான திருமதி கிறிஸ் ஹான்சன் கூறியுள்ளார். தங்கள் பிரிவு இதற்கான விமர்சனக் கணைகளை எவ்வாறு தாங்குமோ என்றும் விசனப்படுகிறார் அவர்.

## மார்பும் புற்றுநோய் பயிற்சி போதும் தடுக்க





இருதய புற்றுநோய், எலும்பு புற்று நோய் போன்றவற்றிலிருந்து தப்புவதற்கு உடற்பயிற்சி உறுதுணை புரிந்து வருகிறது என்ற செய்தி சில வருடங்களுக்கு முன்பே பலருக்கு பரிச்சயமான சமாச்சாரமாகும். ஆனால் இப்போது மார்பு புற்று நோயையும் தவிர்த்துக்கொள்வதற்கு உடற் பயிற்சியே சிறந்த முறையென புதிய ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இது குறித்து சமீபத்தில் தென் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் தொற்றுநோய்த் தடுப்பு நிபுணரான திரு.லெஸ்லி பேர்ணஸ்ட்டின் தலைமையில் பல வைத்திய நிபுணர்கள் நடத்திய வைத்திய பரிசோதனையின் போதே மேற்கூறிய கருத்தை திரு பேர்ணஸ்ட்டின் வெளியிட்டுள்ளார்.

பலதரப்பட்ட பெண்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆராய்ச்சியில் உடற் பயிற்சியை மேற்கொள்ளும் பெண்கள் மத்தியில் மாத்திரமே மார்புப் புற்றுநோய் தாக்கத்தின் அறிகுறிகள் குறைந்து காணப்பட்டதாக குறித்துக் காட்டியுள்ள திரு பேர்ணஸ்ட்டின், பெண்களின் மார்பு புற்றுநோய்க்கு காரணியாக கருதப்படும் புரொஸ்டரொன், எஸ்ட்ராடியோல் எனப்படும் இரசாயன சுரப்பிகளின் தொழிற்பாடு உடற் பயிற்சியில் ஈடுபடும் பெண்களுக்கு குறைவாக செயற்படுவதன் மூலமே பெண்களை மார்பு புற்றுநோய் குறைவாக பாதித்துவருவதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆண்கள் கவனிக்க!

ஆண்மையின் அபிவிருத்திக்கு விட்டமின் 'ஈ' ஜீவ பதார்த்தம் அத்தியாவசியமாக அமையப்பெற்றுள்ளது. குறிப்பாக இப்பதார்த்தம் ஆண்களுக்கு மாத்திரமன்றி பெண்களுக்கும் மிக அத்தியாவசிய பதார்த்தமாக கருதப்படுகிறது. இந்த ஜீவ பதார்த்தம் அமைந்திருக்கும் அடிப்படையிலேதான் அவர்களின் குழந்தைப்பேறு நிச்சயப்படுத்தப்படுவதோடு இருதய நோய் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கான காரணிகளையும் எதிர்க்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

விட்டமின் 'ஈ' ஜீவ பதார்த்தம் கீரை வகைகள் புதிய காய்கறி வகைகளில் சரளமாக அடங்கப் பெற்றுள்ளது.

# டயானாவின் அந்தரங்கக் காதல் கதை ♥♥♥♥




சூடான புத்தக முகப்பு

## தூள் கிளப்பும் புத்தக விற்பனை

பிரிட்டிஷ் இளவரசி டயானாவை துரத்தி துரத்தி செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள் இனிப் போதும் என்று ஓய்ந்துபோகும் நேரத்தில் மீண்டும் சூடான செய்திகள்!

இந்தத் தடவை சூடு கிளப்பியது பத்திரிகையாளர்களல்ல. டயானாவின் காதலர் என்று தனது கொலரைத் தூக்கிவிட்டுக்கொள்ளும் ஜேம்ஸ் ஹெவிற். அவர்தான் வஞ்சகமில்லாமல் உண்மைகளையெல்லாம் சொல்லுவதாகக் கூறிக் கொண்டு புதிய தகவல்களை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

ஜேம்ஸ் ஹொவிற் தனக்கும் டயானாவுக்கும் உள்ள அந்தரங்க சமாச்சாரங்கள் பற்றி அன்னா பாஸ்டர்னாக் என்னும் பெண் நிருபரிடம் ஒப்புதல் வாக்குமூலம் போல சொல்லியிருக்கிறார்.

கதையைக் கேட்ட அன்னா பாஸ்டர்னாக்கின் மூளை லாபகரமான கணக்குப் போட்டது.

அதன் விளைவாக, ஜேம்ஸ் ஹெவிற் சொன்ன கதையை எல்லாம் விறுவிறுவென எழுதி அச்சேற்றி ஒரு புத்தகமாக வெளியிட்டுவிட்டார். **"காதல் வசப்பட்ட இளவரசி"** என்ற அழகான தலைப்போடு அமெரிக்காவில் வெளியாகிய புத்தகத்திற்கு படு கிராக்கி.

அச்சிடப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் சுடச்சுட தோசை போல் உடனடியாகவே விற்றுத் தீர்ந்துவிட்டன. அடுத்த பதிப்பு எப்போது வரும் என்று அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் ஆயிரக்கணக்கானோர் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜேம்ஸ் ஹெவிற் டயானாவுக்கு குதிரை ஏற்றப் பயிற்சி யளிக்க வந்தவர். குதிரையில் ஏறிய டயானா கூடவே ஜேம்ஸை தன் இதயத்தில் ஏற்றிக்கொண்டார்.

குதிரை ஏற்றப் பயிற்சி வகுப்பு டயானாவையும் ஜேம்ஸையும் நெருக்கமாக்கி டயானாவின் தனியறைவரை கொண்டு சென்றது தான் சூடான திருப்பம்.



டயானாவோடு நெருக்கமாக ஹெவிற்



ஜேம்ஸ் ஹெவிற் வளைகுடாப் போரில் பங்குகொண்டவர். போர்முனைக்கும் டயானாவின் கடிதம் தினம் வந்தது என்கிறார் ஹெவிற்.

இளவரசர் சார்ள்ஸ் டயானாவை விட்டு பிரிந்து வாழ்கிறார்.

உலகமே பிரமிக்கும் அழகி டயானாவை ஏனோ தெரியாது சார்ள்சுக்குப் பிடிக்கவில்லை. டயானாவை விட்டுவிட்டு காமிலா என்னும் பெண்ணை சார்ள்ஸ் நாடிப் போய்விட்டார்.

இளமை-தனிமை-சூழல் தந்த நெருக்கம் எல்லாம் சேர்ந்து டயானா-ஜேம்ஸ் ஹெவிற் காதல் உறவுக்கு நெய் வார்த்துவிட்டன.

முதல் நாள் உறவுக்குப் பின்னர் டயானா கண்ணீர்விட்டு அழுதார். "உண்மையான காதல் உறவு இதுதான் என்பதைப் புரிந்துகொண்டேன்." என்று கூறினார் என்றெல்லாம் கூறியிருக்கிறார் ஜேம்ஸ் ஹெவிற்.

ஜேம்ஸ் ஹெவிற், டயானாவை சந்தித்தது 1986ம் ஆண்டு ஒரு விருந்து வைபவத்தில்.

அப்போதே ஜேம்ஸ்மீது டயானாவுக்கு ஒரு கண். அதனால்தான் குதிரை ஏற்றத்தை பழக்கிவிடுமாறு அழைத்தாராம்.

ஜேம்ஸை 'விங்கி' என்று செல்லமாக அழைப்பார் டயானா. ஜேம்ஸ் டயானாவை 'டிப்ஸ்' என்று படு செல்லமாய் அழைப்பாராம்.

இதுவெல்லாம் உண்மையா- அல்லது வழக்கமான கப்ஸாவா என்று கேட்டால் டயானா முதலில் மௌனம் சாதித்தார்.

இதேவேளை, அமெரிக்க பத்திரிகை ஒன்று டயானா தனது அந்தரங்க காதலை ஏற்றுக்கொண்டுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது.

"என் எண்ணக் கோட்டையெல்லாம் இடிந்து வீழ்ந்தது. சார்ள்ஸ் வேறு பெண்ணை நாடிப் போய்விட்டார். எனக்கு ஒரு துணை தேவைப்பட்டது." என்று டயானா சொல்லியிருப்பதாக கூறுகிறது அந்தப் பத்திரிகை.

ஆனால், விசயம் உண்மையோ பொய்யோ- புத்தகத்தை எழுதிய அன்னா பாஸ்டர்னாக் அதிஷ்டசாலி. பல இலட்சங்கள் கிடைத்திருக்கிறது அவருக்கு.

அந்தரங்கத்தை கொட்டிய ஜேம்ஸ் ஹெவிற் மட்டும் சும்மாவா வாயைத் திறந்திருப்பார்? 47 இலட்சம் பவுண்களையாகக் கிடைத்திருக்கிறது.

ஜேம்ஸ் ஹெவிற் செய்தது சுத்தமான அயோக்கியத்தனம்.

ஆனால் ஜேம்ஸ் ஹெவிற் அதைப்பற்றி கவலைப்படாமல் சொல்லும் புதுமொழி "அழகான எந்தவொரு காதலுக்குப் பின்னும் மறைவான இரகசியம் இருக்கும்!"

"ஹெவிற் நீ சம்பாதிச்சுட்டே! டயானாவை மாட்டி வைச்சிட்டியேடா பாவி" என்று டயானாவின் தோழிகள் திட்டுவதை ஹெவிற் காதில் வாங்குவதாகத் தெரியவில்லை. ♥

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

## அங்கம் 38




> "ஆற்றுக்குள் நாணல் இட்டால்
> காட்டுக்குள் ஆட்டை விட்டால்
> என்னென்னு முடிவாகும்?
> ஆசையை முன்னே வைத்து
> தர்மத்தை பின்னால் வைத்தால்
> என்னென்ன விளைவாகும்?"
>
> -கவியரசு கண்ணதாசன்-

அறையின் வலது கோடியை நோக்கி ஓடிய இந்திரா ரீ.வியை நிறுத்திவிட்டு, டெக்கின் வயிற்றில் இருந்து வீடியோ 'கசட்'டை எடுக்க முயன்ற படுவேக நிமிஷங்களில்,

'ரோமர்' அவள்மீது பாய்ந்தது.

முன்புறமாய் டெக்கின்மீது மடங்கிச் சரிந்தாள் இந்திரா.

முதுகுப்புறமாக சட்டையை பிடித்திழுத்தது ரோமர்.

அதன் கோரப் பற்களிடையே சிக்கியதில் சட்டை கிழிந்துவிட வெற்று முதுகுப் பிரதேசத்தை இரசித்துக்கொண்டே,

"ரோமர் நிறுத்து" என்று ஆங்கிலத்தில் உத்தரவிட்டான் ஹரிகரன்.

நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டே எஜமானின் உத்தரவுக்கு கட்டுப்பட்டது ரோமர்.

'டெக்'மீது சரிந்து பயத்தில் உறைந்து போயிருந்த இந்திரா அருகே வந்து, வெற்று முதுகில் முத்தமிட்டான் ஹரிகரன்.

மடங்கியிருந்தவள் சட்டென்று நிமிர்ந்து,

"சீ...நீயும் ஒரு மனுசனா?" எச்சில் திரட்டி முகத்தில் துப்பினாள்.

அருவருப்பாய் முகம் சுளித்து வெறித்தனம் விழிகளில் தெரிய, கைக்குட்டை எடுத்து முகம் துடைத்துவிட்டு, இந்திராவை முறைத்து சட்டென்று முறைப்பை அகற்றி வாய்விட்டுச் சிரித்தார்.

"இது பிடிக்கும்....... எது?"

கேட்டு நிறுத்தி சிரிப்பின் ஊடே "துணிச்சல்! முரட்டுத்தனம்!! இரண்டையும் இரசிக்கவும் பிடிக்கும். இரண்டும் உள்ள பெண்களை சுகிக்கவும் பிடிக்கும். இப்போது உன்னை எனக்கு ரொம்ப ரொம்ப பிடித்துவிட்டது."

இந்திரா பயத்தோடு பின்னால் நகர ரோமர் எழுந்தது.

"நில்! ரோமர் பொல்லாதது. எனக்கு பிடித்தது எதையும் என் கைவிட்டுப் போவதை ரோமர் அனுமதிக்காது. என்றாலும் ரோமர் சார்பில் நான் மன்னிப்புக் கேட்கவேண்டும். அவசரப்பட்டு உன் சட்டையை கிழித்துவிட்டது பார்."

சட்டை கிழிந்துவிட்டதால் பிராவை மீறுவதுபோல் தத்தளித்த மார்புகளை சிவந்த விழிகளால் மேய,

இந்திரா அப்போதுதான் நினைவு வந்தவளாய் தன் மார்புக்கு குறுக்கே கைகளை கட்டிக்கொண்டாள். கூசிக் குறுகிப்போனாள்.

"மறைக்கத்தான் மனதில் ஆசை வரும். மறைத்தும் தடுத்தும் பந்தா காட்டும் பெண்கள்தானம்மா இந்தா இந்தா என்று எங்களுக்குள் ஆசைத்தீயை விசிறிவிடுகிறீர்கள். எப்படி என் அபிப்பிராயம். நல்லாயிருக்கல்லோ?"

சிரித்தான் அல்ல, இழித்தான். இந்திராவை நெருங்கினான்.

இந்திரா இப்போது பின்னால் நகரவில்லை.

முன்நோக்கி வந்தாள். மார்புக்கு குறுக்காக கட்டியிருந்த கரங்கள் விலகி நீண்டு,

அசுரத்தனமான பலம் திரட்டி ரீ.வி.டெக்கை தூக்கி இழுத்த வேகத்தில் வயர்கள் அறுந்தன. ரீ.வி.சரிந்து விழுந்தது.

'டெக்'கை ரோமரின் முகத்தில் வேகமாய் ஓங்கியடித்தாள்.

வேகமான அடி. ரோமர் அபாயமாய் அலறிய நொடியே முகம் சிதறி அசிங்கமாகி தரையில் புரண்டது.

ஹரிகரன் எதிர்பார்க்கவில்லை. நிதானித்துக்கொள்வதற்கிடையில் அசுர வேகமாய் ரீ.வியை தூக்கி ஹரிகரனின் முகத்தை நோக்கி வீச,

ஹரிகரன் தனது இரு கரம் உயர்த்தி தாக்குதல் தடுத்தார். தடுத்தபடியே பின்புறமாய் சரிந்து விழுந்தார்.

அதே நேரம் அருகே 'ரோமர்' படு நிச்சயமாய் செத்துப்போயிருந்தது.

கீழே விழுந்துவிட்ட ஹரிகரனை தாக்குவதற்கு வேறு ஆயுதம் தேடி, திடீரென்று அந்த நினைப்பை கைவிட்டு, அறைக்கதவை நோக்கி ஓடினாள் இந்திரா.

"ஓடாதே...ஓடாதே.."

என்றபடி ஹரிகரன் எழுந்துகொள்ள-

இந்திரா கதவை உள் தாழ்விலக்கி திறந்துகொண்டாள்.

கதவு திறந்தது. மூச்சிரைத்தது. 'எப்படியாவது தப்பிக்கவேண்டும். அ... அண்ணாவிடம் சொல்லி இந்தச் சண்டாளர்களை...' ஹோலின் மத்தியில் இருந்து கேட்ட சிரிப்பொலி ஓடியபடி யோசித்தவளை நிறுத்தியது.

'ஓடு... மாட்டிக்கொள்ளாதே!' மனம் உத்தரவிட்டது.

ஓடினாள். "அவளை விடாதே" ஹரிகரன் கத்துவது காதில் விழுந்தது.

ஒரே பாய்ச்சலாகச் சென்று முன் ஹோலின் கதவைத் திறக்க கைப்பிடி திருகினாள்.

அது ஒத்துழைக்க மறுத்தது. பூட்டியிருக்கிறார்கள். சாவி எடுத்துவிட்டார்கள். மூளையில் உறுத்தியது.

'அய்யய்யோ... இப்போது என்ன செய்வது...?' மனம் ஓலமிட்டது.

மீண்டும் அதே சிரிப்பொலி! காலடி ஓசைகள்!!

இறுதி முயற்சியாக கைப்பிடியை பலம்கொண்ட மட்டும் திருகிப் பார்த்தாள்.

இப்போதும் அது உடன்பட மறுத்தது. 'மாட்டேன் போ' என்றது.

எல்லாம் முடிந்தது. இனி சிதைக்கப் போகிறார்கள். சேதமாக்கப் போகிறார்கள்...அய்யய்யோ....., இந்திராவுக்கு நினைப்பே பாதி உயிரைப் பறித்தது.



சிரிப்பொலி கேட்டபோதும். திரும்பிப் பார்க்க அச்சமாக இருந்தது.

ஒரு கரம் இந்திராவின் தோளில் தொட்டது.

"இந்திரா நீ கெட்டிக்காரி. படு சுட்டி. ஆனால் உன்னைவிட எங்களுக்கு மூளை படு கெட்டி."

இந்திரா சொன்னவனின் குரலை மட்டும் கேட்டாள்.

முகம் பார்க்க அச்சமாக இருந்தது.

பரிச்சயமே இல்லாத குரல். மனோகர் இங்கே இருக்கலாம். அவனிடம் மன்றாடிப் பார்க்கலாம். நினைப்பு வந்தவுடன் இந்திரா திரும்பிப் பார்த்தாள்.

ஹோலின் மத்தியில் அவளையே பார்த்துக்கொண்டிருந்தவர்கள் ஐந்துபேரோ ஆறுபேரோ இருந்தார்கள்.

அவர்களுக்குள் மனோகரின் முகம் மட்டும் தெரியவில்லை.

'போய்விட்டான் துரோகி. என்னை இரையாக கொடுக்கும்வரைதான் காதலன் வேஷம். தொழிலை சுத்தமாகச் செய்ய அபாரமாக நடித்துவிட்டு, என் காதலை வாங்கி நல்லதொரு விலைக்கு விற்றுவிட்டு... துரோகி மகா துரோகி...'

"என்னம்மா யாரைத் தேடுகிறாய்? நான்தான் ஜவாஹர். மிக மிக நன்றாக இருப்பேன். பரிசீலித்துப்பார்க்கலாம் நீ."

அசிங்கமாகச் சிரித்தான்.

"பாவமடா அந்தப் பெண். நீ முரடன்! நீ இங்கே வாம்மா!"

"போ! அவர்தான் மிஸ்டர் பசுபதி. கோடிஸ்வரர். சாதாரணமாக ஒரு கோடி இரண்டு கோடியல்ல, எண்ணவே முடியாத கோடிகள்."

ஜவாஹர் அறிமுகப்படுத்திச் சிரித்தான்.

"ஜவாஹர் சொன்னதை நான் ஆமோதிக்கிறேன். நான் என்றால் யார் என்று நீ நினைக்கலாம்? ஐ ஆம் பிரசாத். உள்ளே உன்னைத் தொட விரும்பினானே ஹரிகரன், அவன் எனக்கு அன்புத் தம்பி."

"எம்மைப் போன்ற பெரிய மனிதர்களுக்கு இதைவிட்டால் வேறு பொழுது போக்கு கிடையாது டியர். பொழுதை பொன்னாக் கினாய் என்று வைத்துக்கொள். உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ கேள். உடனடியாக தரப்படும்."

பசுபதி சொல்ல மற்றவர்கள் சிரித்தார்கள்.

"எல்லாமே புது நோட்டாக இருக்கும். கள்ள நோட்டுக்கள் அல்ல."

பிரசாத் சொல்ல மற்றவர்கள் சிரிப்பதா விடுவதா என்று யோசித்து, பிரசாத் சிரிக்கத் தொடங்க, சரி போனால் போகிறது என்பது போல் ஒப்புக்காகச் சிரித்தார்கள்.

"நீ சிரிக்கவே மாட்டாயா?"

ஜவாஹர் கேட்டான்.

"ஜவாஹர் நீ சுத்த முட்டாள். புகையிலையும் பொம்பளையும் ஒரே மாதிரி."

ஜவாஹர் தலையாட்ட "என்ன மாதிரி? எங்கே சொல் பார்க்கலாம்."

என்றார் பசுபதி. ஜவாஹருக்கு யோசிக்கப் பொறுமையில்லை. தலையைச் சொறிந்தான்.

"அது விரிச்சா போச்சு. இது சிரிச்சாப் போச்சு. அதை விரிச்சா வாசம் போகும். தரம் குணம் எல்லாம் போகும். இவ சிரிச்சா என்று வை, வாய்விட்டு சிரிக்காமல் வெட்கப்படும்போது இருக்கின்ற மவுசு போய்விடும்."

சொல்லிவிட்டு மற்றவர்களைப் பார்த்தார். இதுவரை சிரிக்காமல் இருந்தவர்கள் ஒரே நேரத்தில் வலுக்கட்டாயமாக முயன்று சிரித்தார்கள்.

அதே நேரம் ஜவாஹர் இந்திராவை தனது கரங்களுக்குள் வாங்கி ஒரு குழந்தையைப் போல் ஏந்திக்கொண்டான்.

இந்திரா கால்களை வீசிக்கொண்டு அவன் பிடியில் இருந்து விடுபட எத்தனித்தாள்.

ஆவேசம் வந்தவளாய் ஜவாஹரின் முகத்தில் அறைந்துவிட்டு அவன் கண்களை நோக்கி விரல்களை குவித்து பிறாண்டினாள்.

ஜவாஹர் தன் முகத்தை பின்னோக்கி சரிக்க இடது புற கன்னத்தில் பிறாண்டப்பட்டான்.

எரிச்சலாகி இந்திராவை பிடியில் இருந்து விடுவித்தான். கன்னத்தை தடவிக்கொடுத்தபடி இந்திராவை எட்டி உதைத்தான்.

வயிற்றின் மையத்தில் உதைவாங்கி 'அம்மா' என்று முனகியபடி அவள் மடங்கி தரையில் அமர்ந்தாள்.

ரீ.வி.யால் இந்திரா தாக்கியதில் ஏற்பட்ட சிராய்ப்புக் காயங்களுக்கு 'டெட்டோல்' போட்டுக்கொள்ள உள்ளே போயிருந்த ஹரிகரன், ஜவாஹர் கன்னத்தில் பட்ட காயம் பார்த்தான்.

தனது பிரிய நாய்- செல்ல நாய் ரோமர் முகம் சிதறி செத்துப் போனதை நினைத்தார்.

'ஓ.....ரோமர். மைடியர் ரோமர். நீ இப்போது இல்லை! ஏன்? இவள்... இவள்தான் காரணம். விடமாட்டேன்.' ஹரிகரன் மனதில் வக்கிரம் எழுந்தது.

"இவள் பெண்ணேயல்ல இராட்சசி."

என்றார் உரத்த குரலில். அவர் குரலில் இருந்த கோபமும், தீவிரமும் எல்லோரையும் திடுக்குறுத்தியது.

ஹரிகரன் நிதானமாக நடந்து இந்திராவை நெருங்கினார்.

மடங்கி அமர்ந்து முனகியபடி இருந்தவளின் தாடையில் கைவைத்து நிமிர்த்தினார்.

இந்திரா இறைஞ்சுவதுபோலப் பார்த்தாள்.

இரண்டு நிமிஷம் அவன் முகத்தையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்துவிட்டு,

திடீரென்று புறங்கையால் பலமாக அறைந்தார். இந்திரா பின்புறமாய் சரிந்தாள்.

ஜவாஹரைப் பார்த்து, "போ... உடனே எடுத்துவா..."

ஜவாஹர் தயங்க, "போடா...இரக்கம் வருகிறதாக்கும்." ஜவாஹர் உள்ளே ஓடினான்.

"நீங்கள் மனம் விட்டு இரசிக்கும் ஒரு காரியம் செய்யப் போகிறேன். இதை நீங்கள் மட்டுமல்ல இவளும் மறக்கமாட்டாள்- வாழ்க்கை பூராவும்"

என்றார். என்றபோது அவர் முகத்தில் தெரிந்த கொரூரம் அங்கிருந்தவர்களையே அச்சுறுத்தியது.

(தொடர்ந்து வரும்)

---

## பேனா நண்பர் அரங்கம்



* த.முத்துவேல்
* 22
* மட்டகெலை மகாவலி பிரிவு தலவாக்கலை.
* பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.



* ஐ.அமீர்
* 21
* 184, என்.சி.றோட் திருகோணமலை.
* புத்தகம் வாசித்தல், பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல்.



* என்.யோகேஸ்வரி
* 21
* 34/ஏ, குவாறி வீதி, கல்முனை-02.
* பத்திரிகை, தொலைக்காட்சி, கதைப்புத்தகம்.



* சித்தி ஜெஸீமா ஜெகீம்
* 19
* 103, மஸ்ஜிதுல் ஜாமியா வீதி-கொழும்பு-02.
* பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.



* செ.சிவதாசன்
* 28
* M/T.LACONIA GREEK TANKER SHIPPING CO. 38, AKTIPOSSIDONOS PIRAEUS GREECE.
* ரீ.வி.பார்த்தல், தொலைபேசி காட் சேகரித்தல்.



* ஆர்.முகமட் அலி
* 25
* MAKTAB BANDAR ANUWAR COMMERCIAL CENTER. AL NUZZAH, HOLY MACCAH-K.S.A
* ரீ.வி.பார்த்தல், புத்தகம் வாசித்தல்.

## வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க.உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

ஆறுதல் பரிசுபெறும் நூறு அதிஷ்டசாலிகளில் மேலும் 25 பேரின் விபரம் கீழே. ஏனையோரின் பெயர் விபரங்களும் அடுத்து வரும் முரசுகளில் இடம்பெறும்.

26. சி.சதீஸ் பொஸ்கோ, மட்டக்களப்பு.
27. நல்லையா சுரேஷ்குமார், வாழைச்சேனை
28. தங்கராசா காண்டீபன், நீர்கொழும்பு.
29. பி.சி. அன்ரன் மட்டக்களப்பு.
30. ந.நல்லசிவம், லிந்துல.
31. ஏ.அகுஸ்தாஸ் வசந்தாட்ணம், கொழும்பு-01
32. பிதேனியா மொஹிதீன், உக்குவளை.
33. திருமதி,என்.பவானிதேவி,மட்டக்களப்பு.
34. எஸ்.எச்.அரபாத்,ஒட்டமாவடி.
35. க.நலினி, திருகோணமலை.
36. கே.வைரமுத்து,வாழைச்சேனை.
37. செல்வி.ஈஸ்வரகௌரி, ஆலங்கேணி.
38. எம்.கிருஷ்ணராசா, ஹட்டன்.
39. செல்வி.என்.பாக்கியரத்தினம், கொழும்பு-06
40. மூபாகின் ஹக், அனுதாரபுரம்.
41. ஏ.மொஹமட் ரில்வி,வாழைச்சேனை.
42. செல்வி.நிமாலினி பிலிப்,பதுளை.
43. திருமதி.ஜோதி சதாசிவம், புவக்பிட்டிய.
44. வி.துரைராசா,வவுனியா.
45. அ.பஞ்சவர்ணம்,திருகோணமலை.
46. க.கேதீஸ்வரன்,காத்தான்குடி.
47. அ.ஆறுமுகம், கொட்டகலை.
48. சுபத்திரையம்மா சின்னப்பிள்ளை, தம்பிலுவில்-02.
49. கே.முருகமூர்த்தி, மட்டக்களப்பு.
50. ரிஸ்வான் எம்.உஸ்மான், கண்டி.

—அன்புடன்—

ஐக்கியத்தை விரும்புவோர் -சுவிஸ்-

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஒரு காதல் குற்றம்

“யெஸ்! பைத்தியம்தாண்டி... உன்னால பைத்தியமானவண்டி நீயில்லேன்னா உலகமேயில்லை...”



சாருலதாவின் கட்டிலறை இருட்டில் அமிழ்ந்துபோயிருக்க... அறைக்குள் நுழைந்து மின்சுவிட்சைத் தட்டி டியுப் லைட்டை எரியவிட்டவள் திக்கென்று அதிர்ந்தாள். அங்கே...

எந்தவித சலனமுமில்லாமல் யதார்த்தமாய் நின்றுகொண்டிருந்தான் அவன். அவனைக் கண்டதும் அலறவும் வாய் எழாமல் ஸ்தம்பித்துப்போய் நின்றிருந்தவள், நிலமையின் விபரீதம் உணர்ந்து சுதாகரித்துக்கொண்டு ஓட முற்பட, லபக்கென்று அவனால் பொத்திப் பிடிக்கப் பட்டாள். தன் காலால் உதைத்துக் கதவை அறைந்து சாத்தின அவனது வேகத்தில் வெறியிருந்தது.

சாருலதா பயமாய் மிரண்டாள். புரியாமல் பார்த்தாள்.

“நீ....நீ.....எப்படி வந்தே அம்ரீஸ்..?”

அவன் விரக்தியாய் புன்னகைத்தான். சொன்னான்,

“சாரு....என் காதலைத்தவிர என்னையும் என் பெயரையும் நீ இன்னமும் ஞாபகத்தில் வைச்சிருக்கே. அந்தமட்டில் சந்தோஷம். ஆனா.... எப்படி நான் இங்கே வந்தேன்னு கேட்காம எதற்காக வந்தேன்னு கேளு. ஏன்னா...நீ இந்த உலகத்துல எந்தக் கோடியில இருந்தாலும் நான் எப்படியோ உன்னைத் தேடிட்டு வந்திருப்பேன்.”

அவன் மேலும் விரக்தியாய்ச் சிரித்தான்.

சாருலதாவின் விழிகளில் மீண்டும் பயம் தொற்றிக்கொண்டது.

“கொலைகாரன் கொள்ளைக்காரன் மாதிரி இந்த இரவு நேரத்துல எதற்காக இங்கே வந்தே அம்ரீஸ்?”

அவன் மவுனமாயிருந்தான்.

“விடிந்தால் எனக்குக் கல்யாணம். இப்போ நீ இங்கே வந்ததே தவறு தெரியுமா? உனக்கு என்ன வேணும்? பணம் வேணுமா? சொல்லு அம்ரீஸ்...”

சாருலதா கொஞ்சம் தெளிவாய்ப் பேசினாள்.

“சொல்லு அம்ரீஸ்...உனக்கு என்ன வேணும்..?”

அவன் அவளை நோக்கித் தன் ஆட்காட்டி விரலை நீட்டிச் சொன்னான்,

“நீ....நீ...வேணும்.”

“வாட்?”

“யெஸ்! எனக்கு நீ வேணும். என்னுடைய சாரு எனக்கு வேணும். என்னுடைய காதல்....உன்னிடமிருக்கிற என்னுடைய இதயம் எல்லாம் எனக்கு வேணும். அதையெல்லாம் திருப்பித் தரமுடியுமா உன்னால்? சொல்லு...”

சாருலதா நெற்றிப் பொட்டில் வியர்த்தாள்.

“என்ன சுத்தப் பைத்தியக்காரத்தனமாப் பேசுறே...?”

“யெஸ்! பைத்தியம்தாண்டி.....உன்னால பைத்தியமானவண்டி.. நீயில்லேன்னா உலகமேயில்ல. ஏன் வாழ்க்கையே இல்லேன்னு பைத்தியமானவண்டி நான். காதல் பைத்தியம். தெளிந்த நீரோட்டம் மாதிரி இயல்பாகப் போயிட்டிருந்த என் வாழ்க்கையில நீதானே காதலைக் கலந்தே...? நீதானே என் மனதில காதல் ஆசையை ஊட்டினே...? பின்னே.... என்னை ஏன் மறந்தே சாரு...? ஏன் என் காதலை மறந்தே?”

சாருலதா தலை குனிந்து கொள்ள-

அவன் அவளைப் பிடித்து உலுக்கினான்.

“சொல்லு.... ஏன் என்னையும் என் காதலையும் ஏமாற்றினே...ஏன்?”

அவன் வெறியோடு கத்தினான்.

“சொல்லு ஏன்?”

“காலேஜில இதெல்லாம் சகஜம் அம்ரீஸ்... தட்ஸ் த ரொமாண்டிக் லவ்...

“எனக்கு உன்னைப் பிடிச்சிருந்தது. காதலிச்சேன். சினிமா, பீச்சுன்னு அலைஞ்சேன். நாம ரெண்டு பேரும் ஒண்ணா ஐஸ்கிறீம் சாப்பிட்டோம்... சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி ஜாடை மாடையை தொட்டுக் கிட்டோம். சில்லறைத்தனமான சிலுமிஷம் பண்ணினோம்....அதெல்லாம் வெறும் டைம் பாஸிங் அம்ரீஸ்...

“காதலிச்ச உன்னையே கல்யாணம் பண்ணிக்கணும்னா...என்னைக் கல்யாணம் பண்ணி வாழ வைக்கிற அளவுக்கு உனக்கு வசதி போதாது அம்ரீஸ். நடைமுறையில நடக்காத எதையும் நான் யோசிக்கமாட்டேன்.”

அவன் பொடிப்பொடியாய் உதிர்ந்து போனான்.

“இதையெல்லாம் நீ என்னைக் காதலிக்க முன்னாடி.... ஐ லவ்...யூ சொல்ல முன்னாடி... என் உதட்டுல முத்தம் கொடுக்க முன்னாடி யோசிச்சிருக்கணும் சாரு... இப்போ தலைக்குமேல வெள்ளம் போயாச்சு. நீ என்னைக் காதலிச்சது வெறும் வேஷமாயிருக்கலாம் சாரு.... காதல் உனக்கு வெறும் டைம் பாஸிங்காக இருக்கலாம். ஆனால்...நான் உன்னைக் காதலிச்சது, நேசிச்சது எல்லாம் நெஜம். சத்தியம். நீ என்னை மறந்தது மாதிரி இலேசில எனக்கு உன்னை மறக்கத் தெரியாது. ஏன்னா... மறக்க நெனச்சாலும் என் காதல் உன்னை நினைக்கத்தான் தூண்டுறது. ஸோ...”

அவன் குரல் கரகரப்பாகி...கண்கள் கலங்க ஆரம்பித்தன.

-கல்லுக்குள் ஈரமாய் அவன் உள்ளுக்குள் உடைந்தான். பாவமாய்..

சாருலதா பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

“இந்த உலகத்திலேயே எனக்குப் பெறுமதியான-விருப்பமான ஒண்ணுன்னா அது நீதான் சாரு... அப்படிப்பட்ட நீ என் கண்முன்னாலேயே அடுத்தவனுக்கு மனைவியாகிறதுன்னா... அதை என்னால தாங்க முடியாது. ஸோ....நான் உயிரோடு இருக்கிற வரைக்கும் உன்னுடைய கல்யாணம் நடக்காது. நடக்கவும் விடமாட்டேன். ஏன்னா... என் பொக்கிஷம் அடுத்தவன் கைக்குப் போகிறதில் எனக்கு உடன்பாடில்ல. தவிர, காதலுக்கும் எனக்கும் நடக்கிற போராட்டம் இது. காதல் என்னை ஏமாற்றிடுச்சி. அதனால காதலை நான் பழிவாங்கப் போகிறேன் சாரு...”

சொல்லிக்கொண்டு போனவன்-

சாருலதா சிறிதும் எதிர்பார்க்காத அந்த வினாடிக்குள் விசுக்கென்று கைத்துப்பாக்கியை எடுக்க, சாருலதா சர்வநாடியும் அடங்கிப்போய்...எச்சில் விழுங்க மறந்து...பதறினாள்.

“து.....துப்...துப்பாக்கி...வே...வேணாம் அம்ரீஸ்..”

அவன் கடகடவெனச் சிரித்தான்.

-அவளோ விடுவிடுவென நடுங்கினாள்.

“உயிருக்கு இவ்வளவு பயமா சாரு...? இவ்வளவு கோழையாயிருந்துகிட்டு ஏன் என்னைக் காதலிச்ச....? ஏன் காதலிக்கிற மாதிரி நடிச்சே...? உனக்கு காதல் விளையாட்டாக இருக்கலாம். ஆனால் அது என்னுடைய வாழ்க்கை. காதலால என் வாழ்க்கை பாழாகி நாசமானது மாதிரி, உன் வாழ்க்கையும் ஆகணும். விடிந்தால் கல்யாணம் நடக்கக் கூடாது. கருமாதிதான் நடக்கணும்....”

அவன் அப்படியே கைத்துப்பாக்கியதைத் தூக்கிப்பிடிக்க-

அவள் மென்மேலும் வியர்த்தாள்.

-அவள் அணிந்திருந்த ஆடை தெப்பமாய் நனைய ஆரம்பித்தது.

“சாரு...நீ காதலிச்ச என்னை மறந்துட்டு, அடுத்தவனைக் கல்யாணம் பண்ணிக்க எப்ப முடிவெடுத்தியோ... அப்பவே நானும் தீர்மானம் பண்ணியாச்சு. நாளைக்கு விடிந்தவுடன் யாரும் ‘மாங்கல்யம் தந்துனானே’ சொல்லமாட்டாங்க....கெட்டிமேளச் சத்தமும் கேட்காது. காரணம்.... கல்யாண வீடு எளவு வீடாகிப்போய்.... பிணம்தானிருக்கும். பொலீஸ் வரும். விசாரணை நடக்கும், ஏன்....மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வருவாங்க... உன்னோட காதல் அம்பலமாகி... எல்லோருமே காறித்துப்புவாங்க சாரு. எப்படியோ எனக்கும் உனக்கும் மத்தியில இருந்த காதலை எல்லோருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டாமா...?”

சாருலதா கெஞ்சினாள்.

“வேணாம் அம்ரீஸ்... எ...என்னை மன்னிச்சிடு...”

அவன் அவளை நெருங்கியபடியே சொன்னான்,

“தப்பான காதல் குற்றமாகித்தான் முடியும் சாரு..”

அவன் கைவிரலில் துப்பாக்கியைச் சுழற்றினான்.

“என்னைக் கொல்லாதே. வேணாம். விட்டுவிடு அம்ரீஸ்.”

அவன் துப்பாக்கியை சுழற்றுவதை நிறுத்தி-

அவளைப் பார்த்துக்கொண்டே....

ட்ரிகரில் விரலைப் பதிக்க,

சாருலதா வீறிட்டாள்.

“என்னைக் கொல்லாதே. விட்டுவிடு... ப்ளீஸ் வேணாம்.”

அவன் மென்மையாய்- சோகமாய்- வெறுமையாய்ப் புன்னகைத்தான்.

“என்னை மன்னிச்சிடு சாரு. உண்மையாக நேசித்த என்னைப்போன்ற எந்தக் காதலனுமே தன்னுடைய காதலியைக் கொல்லமாட்டான்மா. ஆனாலும்; நான் ரொம்பவும் வித்தியாசமானவன். என் காதலை-உன்னை மறக்க எனக்கு வேறு வழி தெரியல....”

சொன்னவன் ட்ரிகரைச் சுண்டி விழுக்க...

சாருலதா கண்மூடித் திறப்பதற்குள்...

‘டுமீல்!’

கைத்துப்பாக்கி வெடித்து புகை கக்கியபடி அவன் கையிலிருந்து நழுவிப் போக...தடால் என பிணமாய்க் கீழே சரிந்த அவனது-அம்ரீஸினது மூளை சிதறிப்போய் இரத்தம் பீய்ச்சப்பட்டு... பாவம். அவன் உயிர்-ஆத்மா அவனை விட்டுப் பிரிந்து...

சாருலதா எதையுமே உணராத நிலையில் திக்பிரமையோடு....

தன் கண்முன்னாலேயே தற்கொலை செய்துகொண்ட அவனை-அவளது காதலன் அம்ரீஸை-அவனது பிணத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க...அந்த அறைக்குள்,

ஒரு காதல் குற்றம் நடந்து முடிந்தது;

வெளியே...

மாடிப்படிகளில் ‘தடதட’வெனப் பலர் ஓடிவரும் சத்தம் கேட்டது.

கூடவே....

எப்போதோ நின்று போயிருந்த மழை மீண்டும்தூறலாய்ப் பெய்ய ஆரம்பிக்க, அந்த இரவு மெல்லமாய் விடிந்து கொண்டிருந்தது.

-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-

# என் அக்காவுக்கு கல்யாணம்

திருமலை சுந்தா

லிசாவின் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. வாய் முழுதும் பல்லாய் சிரித்துப் பார்த்தாள். வயிறு நொந்ததுதான் மிச்சம்.

காரணம் வேறு ஏதும் இல்லை. அக்காவுக்கு வரன் தேடி... மாப்பிள்ளையின் படத்தைப் பார்த்தபோதுதான்... லிசாவுக்கு அந்த பொல்லாத சிரிப்பும் பொத்துக் கொண்டு வந்தது.

“என்னடி இப்படி சிரிக்கிறாய்..?” லிசாவின் தாய் கேட்டபோது.... “இல்லை அம்மா....என்னை குண்டு.... குண்டு... தடிமாடு... தடிமாடு என்பீர்கள்.... இப்ப அக்காவுக்கு வாரவரைப் பார்க்கும் போதுதான்...” லிசா மீண்டும் தன் அழகான சிரிப்பை உதிர்த்தாள்.

தாய்க்கும் சிரிப்புதான் வந்தது. கஷ்டப்பட்டு அடக்க லிசாவின் அம்மா முற்பட.. “பிறகென்ன...அம்மாவை இனி எங்க பிடிக்கிறது. மூத்த மகளோட கொஞ்சி குலவ கனடா போய் விடுவா... நாங்கதான்.. இஞ்ச இருந்து...” லிசா வார்த்தைகளை உதிர்த்தபோது... தபால்காரனின் மணியோசை கேட்கவும் சரியாக இருந்தது.

துள்ளிப் பாய்ந்து தெருவுக்கு ஓடிய லிசா கடிதத்துடன் திரும்பி வந்தாள்.



“அம்மா அக்காவின் கடிதம்....” கடிதத்தை பிரித்தாள்.

ஒரு பக்கத்தில் அழகான, முத்து முத்து எழுத்துக்களில் கடிதம் எழுதப் பட்டிருந்தது. “என்னவாம்...?” தாயின் குரலுக்கு ஏதும் சொல்லாதவளாய் லிசாவின் கண்கள் அந்த கடித வரிகளுடன் மொய்த்துக் கொண்டிருந்தன.

“என்னடி கடிதத்தில எழுதி இருக்கு?.. கொண்டுவா அதை..” லிசாவின் தாய் கதிரையில் இருந்து எழ முற்பட்டபோது....

“அம்மா...அக்காவுக்கு வாற மாதம் லீவாம். இன்னும் இரண்டு வருடத்துக்குப் பிறகு படிப்பு முடிந்த பின்பே... கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கலாமாம்..” கடிதத்தை தாயிடம் கொடுத்துவிட்டு வானத்தைப் பார்த்தாள். முன் முற்றத்தில் கதலி வாழை பெரிய குலையொன்று போட்டிருந்தது. நல்ல குண்டு குண்டான வாழைக் காய்கள்.... பார்ப்பதற்கு அழகாக மட்டுமல்ல... ஆனந்தமாகவும் இருந்தது லிசாவுக்கு. ஆனால்... ஆனால்.. அவள் முகத்தில் ஐந்து நிமிடங்களுக்கு முன்பிருந்த அந்த ஆனந்தம்..பெருமிதம்...அளவற்ற மகிழ்ச்சியின் சாயல்...எல்லாமே இப்போது அந்த முற்றத்து கதலி வாழையுடன் ஒட்டியாகி விட்டது?

அக்காவின் கல்யாணத்தை நினைத்து அந்தரத்தில் பறந்த அவளுக்கு...அக்காவின் கடித வரிகள்.. அவளது கற்பனை நினைவுகளை கட்டியா விட்டன?

“ஏனம்மா.... - அக்காவுக்கு இந்த சம்பந்தம்...? நல்ல இடம் அல்லவா? தேடிப் போனாலும் இப்படி வருமா? கலியாணத்தைச் செய்துபோட்டும் படிப்பை முடிக்கலாம் தானே. அதுக்கும் அவையள் ஓமென்று சொல்லுகினம்தானே..? அக்கா ஸ்கூல் பிள்ளைகளிட்ட அக்காவுக்கு கலியாணம்... அக்காவுக்கு கலியாணம் என்று எத்தனை தடவைகள் சொல்லிப்போட்டன். இனி எப்படி அவையள் முகத்தில முழிக்கிறது? அம்மா! எங்கட பிரின்சிபல் அடிக்கடி சொல்லுவா. ‘பிள்ளைகள் வாழ்க்கைதான் முக்கியம். படிப்பல்ல. இந்த படிப்பு அந்த வாழ்க்கையை செப்பனிட உதவ வேண்டும்’ என்று..

“அக்காவும் முதலில வாற நல்ல ஏன் இப்படி எழுத வேணும்?” லிசா ஆத்திரத்தோடுதான் தாயிடம் கேட்டாள்.

ஆனால் அந்த ஆத்திர உணர்வின் சாயல் லிசாவின் தாய் தங்கரத்தினத்தின் முகத்தில் எள்ளளவும் இல்லை. கலவரம்தான் புகுந்து விட்டிருந்தது. சிந்தனைக் கோடுகள் முகத்தில் மாறி... மாறி... அழ....அழகான வண்ணப் படங்களை கீறி... கீறி.... அழித்துக் கொண்டிருந்தன.

உச்சி வெய்யில் அந்த தகர வீட்டை மட்டுமல்ல... அவர்கள் இருவரினதும் தலைகளையும் சூடாக்கியே கொண்டிருந்தது.

“எப்ப பார்த்தாலும் இந்த அக்கா இப்படித்தான். எதைச் செய்யப் போனாலும் அதுக்கு ஒரு எதிர்ப்பு. அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த கல்யாண சம்பந்தத்தைப் பேசி முடித்தார். பாவம் அவர். இவ இரண்டு வரியில தப்பப் பார்க்கிறா... வாசிற்றியில படிச்சா என்ன பெரிய மனிசியான நினைப்போ! இல்லாட்டி கொஞ்சம் ‘பஸ்’ படிச்சுதான் எங்களுக்கு பெரிய மனிசாகக் காட்டுற நினைப்போ... சே...”

லிசா தன் வார்த்தைகளை எண்ணைச் சட்டியில் போட்டு பொரிக்கத் தொடங்கினாள்.

“லிசா...சும்மா இரு. கதைக்காத...”

“என்னண்டு கதைக்காமல் இருக்க..என்ர வாழ்க்கையை தான் நேசிக்க வேண்டுமே ஒழிய படிப்பு..படிப்பு... என்று வாழ்க்கையையே பாழாக்கக்கூடாது. படித்திருக்கிறாவாம்... படிப்பு..கண்டறியாத படிப்பு..”

“லிசா சும்மா இரு..கதைக்காத..”

“உங்களுக்கு மூத்த மகள் என்றா போதும் அவ என்ன செய்தாலும் சரிதான்.. நான்..”

“லிசா சத்தம் போடாதை.. கொஞ்சம் யோசித்துப் பார். நாங்க இருக்கிறது திருகோணமலையில... அவ இருக்கிறது யாழ்ப்பாணத்தில. நாங்க யுத்தமில்லாத ரவுண் பகுதியில புளிச்சல் வாழ்க்கை வாழ்கிறம். அவ யுத்தம் நடைபெறும் பயங்கர பூமியில் வாழுகிறா. எங்களுக்கும் அவவுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கு. இதில கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

“அவவின் முடிவை ஒட்டித்தான் நாங்களும் முடிவு எடுக்கவேண்டும். அவதிப்படக்கூடாது..”

தாய் தங்கரத்தினம் மெதுவாக சொன்னது லிசாவின் காதுகளில் வேகமாக நுழைந்துகொண்டது.

“அப்ப அக்காவின் கலியாணம்..... அப்ப அக்காவின் கலிணாம்..”

சுருதி இல்லாத வார்த்தைகள் லிசாவின் வாயில் இருந்து வந்துபோது...

“லிசா... அப்பாவை ஒருக்கா யாழ்ப்பாணம் அனுப்பி என்னண்டு பார்ப்பம்.”

அம்மாவின் வார்த்தைகள்...

லிசாவின் காதுகளில்...

வானின் உச்சத்தில் பறந்த அந்த போர்விமானம்- சுப்பர் சொனிக்...தன் உச்சமான குண்டுகளை பொழிந்துவிட்டு மின்வெட்டில் மறைந்தது போலிருந்தது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# பாபர் சலூன்

வெளிநாடுகளில் புகலிடம் தேடியுள்ள நம்மவர்கள் இலக்கியம் படைப்பதை மறக்கவில்லை. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களால் பாரிசிலிருந்து வெளியிடப்பட்டுள்ள கதைத் தொகுப்பிலிருந்து இக்கதை பெறப்படுகிறது.




அவுஸ்திரேலியாவிலிருந்து: -மாவை நித்தியானந்தன்-

வெளிநாட்டுச் சலூனில் முதன் முதலாகத் தலைமயிர் வெட்டிக்கொண்டு வெளியே வந்த சந்திரசேகரம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'தலை மயிர் வெட்டுவிக்கிறதிலையே இவ்வளவு சிக்கல்' என அலுத்துக் கொண்டான்.

ஊரிலென்றால் சலூன் அவனுக்கு ஒரு இனிமையான பொழுதுபோக்குச் சாதனம். வீட்டுக்குப் பக்கத்திலேயே கதிரமலையின் சலூன். பத்திரிகைகள் படிக்கும் வாசிகசாலையாகவும் அது தொழிற்பட்டது. பத்திரிகை படித்து முடித்தபின், பத்திரிகையில் வராத உள்ளூர்ப் புதினங்களும் அலசப்படும். தலைமயிர் வெட்டக் காத்திருப்பவர்களுடன் அரசியல் விவகாரங்களை விவாதித்ததன் மூலம் சந்திரசேகரத்தின் அரசியல் அறிவு கணிசமான அளவு வளர்ச்சியடைந்ததும் உண்மை.

வெளிநாட்டுக்குக் குடி பெயர்ந்ததால் அவன் இழந்துபோன சந்தோஷங்களில் கதிரமலையின் சலூனும் முக்கியமான ஒன்று.

வெளிநாட்டுக்கு வந்த பின்னர் சந்திரசேகரம் செய்த விலை ஆராய்ச்சிகளின் போது, தலைமயிர் வெட்ட ஊரைவிட இங்கே நாற்பத்தி மூன்று மடங்கு கூடுதலான செலவு என்று கண்டுபிடித்தான். உடனேயே போய் ஒரு கத்திரிக்கோலும், தேடிப்பிடித்து ஒரு பல்லுக் கத்திரிக்கோலும் வாங்கி வந்தான். மனைவி அவன்மீது தலைமயிர் வெட்டிப் பழகலானாள். வெட்டி ஒரு கிழமை முடியும்வரை தலைமயிரைப் படிய வைப்பதென்பதோ பகீரதப் பிரயத்தன மாயிருக்கும். பிறகு படிப்படியாகச் சரியாகி விடும். இதைவிட, இந்தக் கடமையைச் செய்ய மனைவி பெரும் 'நடப்படிப்பது' அவனுக்குத் துப்பரவாகப் பிடிக்கவில்லை. அவளைப் 'ப்ளீஸ்' பண்ணித்தான் அவ்வப்போது இதைச் செய்விக்க வேண்டியிருந்தது. இதனால், மயிர் வளர்ந்து கழுத்தையும் காதுகளையும் மூடத் தொடங்கிய பிறகுதான் அதை வெட்டுவது பற்றி யோசிக்கப்படும்.

பத்துப் பதினைந்து இன்ரவியூக் களுக்குப் போயும் ஒன்றும் சரிவராமற் போன பிறகு நடந்த ஆராய்ச்சியின்போது, 'ஒழுங்காகத் தலைமயிர் வெட்டாததால தான் உனக்கு வேலை தாறாங்களில்லை' என்று இந்த ஊரில் கடந்த பத்து வருடங்களாக வாழ்ந்து வரும் மணியண்ணர் சொல்லி விட்டுப் போனார்.

அடுத்த நாள் சனிக்கிழமை. முற்பகல் பதினொரு மணிபோல் பாபர் சலூனைத் தேடிச் சந்திரசேகரம் நடக்கலானான்.

'ஷொப்பிங் சென்ரர்' வட்டாரத்தில் ஐந்து சலூன்களுக்கு மேல் இருந்தன. போகும்போதும் வரும்போதும் கண்ணாடிச் சுவர்களுக்கூடாக மேலோட்டமாகத்தான் அவற்றை இதுவரையில் அவன் நோட்டம் விட்டிருக்கிறான். அவற்றின் தோற்றம் அவனுக்கு ஒருநாளும் பிடித்ததில்லை. சிலவற்றுக்கு 'ஸ்ரூடியோ' என்றும் பெயர் வைத்திருந்தது சிரிப்பாகவும் இருந்தது. ஊரிலே படம் எடுக்கும் இடம்தான் 'ஸ்ரூடியோ.'

எதிர்ப்பட்ட முதலாவது சலூனுக்குள் கண்களைக் கூர்மையாகச் செலுத்திக் கொண்டு ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்கு நடந்தான் சந்திரசேகரம். நின்று நோட்டம் விட்டால், மற்றவர்கள் கவனித்து விடுவார்கள் என்று பயம். 'ரேடியோக் கடையெண்டாலும் நிண்டு பார்க்கலாம்.'

ஊர்ச் சலூனைப் போலல்லாது, இங்கே எல்லாம் பளபளப்பாக மினுமினுப்பாக இருந்தன. உள்ளே எல்லோரும் பெண்கள். ஒரு ஆணாவது கண்ணுக்குத் தட்டுப்பட வில்லை.

ஒரு பெட்டையிட்டைப் போய் மயிர் வெட்டக் 'கேக்கிறதே? அவனால் இதை நினைத்தும் பார்க்க முடியவில்லை. அத்துடன் கறுப்பர்களுக்கு தலைமயிர் வெட்டச் சம்மதிப்பார்களோ என்ற சந்தேகமும் வந்து வெருட்டியது. கூடப்பிறந்த கூச்சமும் பதட்டமும் சந்திரசேகரத்தை ஆட்கொண்டன.

தான் நின்ற பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்கு நடந்து உள்ளே நடப்பவற்றை மீண்டும் நோட்டம் விட்டான். இப்படியே ஐந்தாறு தடவைகள் குறுக்கும் மறுக்குமாக நடந்தும் உள்ளே போக முடியவில்லை.

எல்லோரும் வெள்ளையர்கள். எல்லோரும் பெண்கள். நின்று கொஞ்ச நேரம் யோசித்தான். பெண்கள் சலூனோ என்று 'போட்'டைப் பார்த்தபோது 'லேடீஸ் அன்ட் ஜென்ற்ஸ் என்றுதான் இருந்தது.

இந்த சலூனுக்குள் பிரவேசிப்பதை நினைக்கவே இருதயம் நின்றுவிடும் போலிருந்தது. எதற்கும் அடுத்ததற்குப் போவதென்று தீர்மானித்தான்.

இப்படியே நான்கு சலூன்கள் பரிசோதனை செய்து முடிந்தபோது நேரம் பன்னிரெண்டு மணியையும் கடந்திருந்தது. எல்லாம் ஒரே ரகம்தான்.

'பிள்ளையாரே' என்றபடி ஐந்தாவதுக்கு நடந்தான். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. உள்ளே ஒரு கறுப்பனைக் கண்டபோது, யோசிக்க இடமில்லை. கண்களை மூடிக்கொண்டு நுழைந்தான். கறுப்பனுக்கு அருகே ஒரு ஆசனத்தில் அமர்ந்து மற்றவர்களைப்போல் அவனும் காத்திருந்தான்.

சிகையலங்காரம் செய்து கொண்டிருந்தா ஐவரில் ஒருவர் ஆணாக இருந்தது தனக்காகத்தான் என்று சொல்லிக்கொண்டான். 'பிள்ளையார் என்னை ஒருநாளும் கைவிடார்.'

ஆனால்- வரிசைக் கிரமத்தின்படி மற்றக் கறுப்பனுக்கே அந்தப் பாக்கியம் கிடைத்த பிறகு, தன்மீதே அவனுக்கு வெறுப்பாயிருந்தது. அதிட்டம் கெட்டவன்.

வெளியே ஓடிப்போய் விட்டுக் கொஞ்சம் பொறுத்து வரலாமா என்று யோசித்த வேளையில் ஒருத்தி வந்து அழைத்தாள்.

"உள்ளே வருகிறீர்களா?"

சந்திரசேகரம் எழுந்து கொலைக் களத்துக்குப் போகிறவன்போல அவள் பின்னால் நடந்தான். அவள் காட்டிய கதிரையில் மென்மையாக அமர்ந்து கொண்டான்.

மனம் 'திக் திக்'கென அடித்தது. முன்பின் தெரியாத ஒரு பெண் தன்னைத் தொட்டு முடி வெட்டப் போகிறாள்.... ஆங்கிலத்தில் ஏதாவது கேட்டுவிடுவாளோ என்ற பயம் வேறு. ஆங்கிலம் தெரிந்தாலும், இவர்களின் ஆங்கில உச்சரிப்புகளுக்கும் அவனுக்கும் வெகு தூரம். பத்தில் ஒன்றைக் கூட விளங்கிக்கொள்ள முடிவதில்லை.

எதையோ சொல்லிவிட்டு அவள் சிரித்தாள். விளங்காமலே அவனும் சேர்ந்து சிரித்தான். 'ஒயில்' என்ற சொல் மட்டும் தெளிவாகக் கேட்டதை வைத்து, தனது தலையில் தாராளமாகத் தேய்க்கப்பட்டிருந்த ஈழத்து நல்லெண்ணையைப் பற்றிய கதை என்பதை ஊகிக்க முடிந்தது. மீண்டும் அவள் எதையோ கேட்டதும், சந்திரசேகரம் விளங்காமலே தலை அசைத்ததும், அவள் இன்னொரு கதிரையைக் காட்டியதும், அவன் அதிலே போய் அமர்ந்து கொண்டதும், முன்னால் இருந்த 'வோஷ் பேசி'னில் தலையை நீட்டச் சொன்னதும் எல்லாம் மின்னல் வேகத்தில் சில கணங்களுக்குள் நடந்து முடிந்துவிட்டன.

தலையிலே அவள் தண்ணீரைப் பாய்ச்சியபோதுதான் சந்திரசேகரத்துக்கு என்ன நடக்கிறதென்று விளங்கியது.

கதிரமலையின் சலூனில் முடி வெட்டினால், ஆட்டிறைச்சியும் ரசமும் 'அடித்து' விட்டுத்தான் முழுக்கு நடக்கும்.

அவள் 'ஷாம்பு' தேய்த்து, தண்ணீரால் கழுவி, 'டிரையர்' பிடித்தாள். தன் தலைவிதி தனது கைகளில் இல்லையென நொந்து கொண்டு 'பிள்ளையாரே' என்றான். 'இதுக்கெல்லாம் எவ்வளவு காசு எடுக்கப் போகிறாளோ!'

மீண்டும் கதிரை மாறி, பழைய கதிரைக்குப் போய்ச் சேர்ந்ததும் முடிவெட்டும் படலம் ஆரம்பமாயிற்று. "இப்போ அருமையாக இல்லையா?" என்றாள்.

"எப்படி அமைய வேண்டும்?" இந்த ஆங்கிலச் சொற்கள் போதியளவு தெளிவாகவே கேட்டன. ஆனால் என்னத்தைக் கேட்கிறாள் என்றுதான் விளங்கவில்லை.

தயக்கத்தை அவதானித்தவள், மீண்டும் கேட்டாள். "குட்டையாக வெட்டவா?" 'குட்டை' அதாவது (ஷோட்) என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே, அதை இறுகப் பற்றிக் கொண்டு "யேஸ் யேஸ்" என்று தலையைப் பலமாக ஆட்டினான் சந்திரசேகரம். அடிக்கடி இந்தப் பக்கம் வராமல் இருக்கவும் 'ஷோட்' தான் மருந்தென்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

பிடரியைக் காட்டி எதையோ கேட்டாள். "சொறி" சொல்லி அவளை மூன்று தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்ல வைத்ததும், 'சதுர வெட்டு, ரவுண்ட் வெட்டு' என்று உதிரியாகச் சில சொற்கள் விளங்கின வேயன்றி, அர்த்தம் புரிந்தபாடில்லை. மீண்டும் கேட்க வெட்கப்பட்டு சும்மா "யேஸ்" என்றான். 'இதுகளையெல்லாம் சலூனில் ஒழுங்காக முடிவெட்டுவிக்கிற மணியண்ணர் முன்கூட்டியே சொல்லித் தந்திருக்கலாம் தானே?' என்று மணியண்ணர் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

கொஞ்ச நேரம் அமைதியாக வேலை நடந்தது. இப்படியே இருந்துவிட்டால் பரவாயில்லை என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் அவள் மீண்டும் பேசினாள். இந்த முறை அவள் கேட்டது 'பட்'டென்று விளங்கிவிட்டது. எல்லோரும் கேட்கும் கேள்விதான். இந்த நாட்டுக்கு வந்ததிலிருந்து ஐம்பது, நூறு தடவைகள் பதில் சொல்லிவிட்ட கேள்வி, "சிறிலங்கன்" என்று பதில் கூறினான்.

அடுத்த கேள்விக்கு "ஆறு மாதங்கள்" என்றான்.

தொடர்ந்து இலங்கையில் நடக்கும் சண்டைகளைப் பற்றிய கேள்வி வரப்போகிறதென எதிர்பார்த்துக்கொண்டு 'மள மள' வென்று பதில்களை மனதுக்குள் தயாரிப் பதில் சந்திரசேகரம் தன்னை முழுமூச்சுடன் ஈடுபடுத்திக்கொண்டிருந்த வேளையில்... அவளோ தலைமயிரை மேலே இழுத்துக் காட்டி அதைப் பற்றி ஏதோ வர்ணித்தது போலிருந்தது. 'திக்' என்ற சொல்லைக் கொண்டு, தன்னுடைய தலைமயிர் மொத்தமென்று சொல்லுகிறாள் என அனுமானித்துக் கொண்டான்.

"இன்றிரவு எங்கேனும் வெளியே.....?" அவள் கேட்டாள்.

அன்றிரவு 'இமிகிரேஷன்' விஷயமாக லோயரைச் சந்திக்க இருந்தான்.

"காலநிலை நன்றாக இருக்கிறது. ஏதாவது திட்டம் உண்டா...?"

"சட்ட வல்லுநரிடம் போக வேண்டும்."

"ஓ அப்படியா?" என்று கேட்டுக் கொண்டே, சிரிப்பைப் புன்சிரிப்பாக அவள் வலிந்து அடக்கிக் கொண்டது போலிருந்தது. ஆனால் அருகே வேறு யாரோ சற்றுப் பலமாகவே சிரித்தது அவனுக்குச் 'சுருக்'கெனத் தைத்தது.

அவளது கேள்விகளின் அர்த்தம் திடீரென்று இப்பொழுது முழுமையாக விளங்கிவிட்ட மாதிரி இருந்தது.

வெள்ளைக்காரப் பெண்களைப் பற்றி நண்பன் ஒருவன் சொன்ன பாலுணர்ச்சிக் கதைகளெல்லாம் குரங்குகள்போல் மனதிலே வந்து தாவிக் குதித்தன.

அவர்கள் மிகவும் 'செக்ஸி' என்றும், 'ஃப்ரி' என்றும், விருப்பங்களைப் பச்சையாகக் கதைப்பார்கள் என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட ஆடவர்களுடன் ஊர் சுற்றுவார்கள் என்றும், ஒன்றுக்கும் வெட்கப்படவே மாட்டார்கள் என்றும் அவர்கள் கதைகதையாக வர்ணித்ததையெல்லாம் அப்படியே முழுமையாக நம்பியிருந்தான்.

தொடுத்துப் பார்த்த போது, எல்லாம் ஐயந்திரிபற விளங்கிவிட்டதுபோல்... எதிர்பார்த்த அதிர்ச்சி. இருதயம் வேகமாக அடிக்க ஆரம்பித்தது.

'இவள் ஏன் என்னுடைய இரவுத் திட்டங்களை விசாரிக்கிறாள்? தன்னைக் கூட்டிக்கொண்டு போகச்சொல்லிக் கேட்டிட்டாள் எண்டால்...இதென்ன அபத்தம். பிள்ளையாரே, என்னை ஏன் இதுக்குள்ள கொண்டு வந்து மாட்டினனி. நான் இப்பிடி என்னுடைய மனிசிக்குத் துரோகம் செய்யிற ஆளோ?

அவள் தொடர்ந்து ஏதாவது கேட்டு விடுவாளோ என்ற நினைப்பே உடல் முழுவதிலும் குலை நடுக்கத்தை ஏற்படுத்தியது. 'பிள்ளையாரே பிள்ளையாரே' என்று வாய் திரும்பத் திரும்ப மந்திர உச்சாடனம் செய்தது. 'தம்' பிடித்தபடி இருந்தான். மனைவி வேறு. முன்னால் வந்து வந்து போனாள். ஒரு கணம் ஒட ஒரு மணித்தியாலம் எடுத்தது.

'எப்போ முடியும், எப்போ முடியும்?' என்று அவன் தவித்துக்கொண்டிருக்கையில்.....

அவள் பிடரிக்குப் பிடித்துக்காட்டக் கண்ணாடி எடுத்தாள். கண்ட முதலே சந்திரசேகரம் திருப்தி தெரிவித்துப் பலமாகத் தலையை ஆட்டினான்.

"அளவு குறைப்பு போதுமா?" என்று அவள் கேட்டாள். சந்திரசேகரம் முழுச் சம்மதம் தெரிவித்துத் தலையசைத்தான்.

முன்னாலிருந்த கண்ணாடியில் பார்க்க, தலை உரித்த தேங்காயைப் போன்றிருந்தது. இப்படி மொட்டையடிக்கும் எண்ணத்துடன் அவன் வரவில்லை.

கேட்ட காசைக் கொடுத்துவிட்டு, தப்பினேன் பிழைத்தேன் என்று வெளியே ஓடினான் சந்திரசேகரம். 'கதிரமலை... கதிரமலை..' என்று கதிரமலையை நினைத்து மனம் கதறி அழுதது.

# விதியே கதை எழுது

-ஷர்மிளா இஸ்மாயில், கண்டி-

காலடியில் விழுந்த கடிதமும், முகத்திலறைந்த சிரிப்பலைகளும் ரகுமானில் குழப்பம் உண்டாக்கின. சட்டென குனிந்த நண்பன் அஜீத்தை தடுத்து கடிதத்தை கையிலெடுத்தான். சற்று தள்ளி அந்த பெரிய விருட்சத்தின் கீழ் குழுவாய் நின்று ஆரவாரித்து சிரிக்கும் எதிரிக் குழுவினதும் அதன் தலைவனும், ரகுமானின் பரம விரோதியுமான சிராஜின் முகத்தை நோக்கினான். அவன் படபடவென கையைத் தட்டி சிரித்தான். "ஹோ.... பாவம் ரோமியோ." உடல் இரத்தம் முழுவதும் முகத்தில் பாய்ந்ததான சூடான உணர்வு. காதின் மடல்கள் சிவந்தன. கை முஷ்டிகள் இறுக கடித வரிகளைக் கவனித்தான். அதிர்ந்தான். ஆத்திரப்பட்டு பாயமுற்பட்டவனை அஜீத் விலக்கினான். ஆறுதல் படுத்தி அழைத்துப் போனான்.

"**அன்பின் ரகு,**

உங்கள் கடிதம் கண்டேன். நேசம் நிறைந்த உங்கள் மனம் புரிந்தது. நான் காதலை வெறுப்பவளல்ல. அதே சமயம் கண்மூடித்தனமாய் காதல் நதியில் வீழ்பவளுமல்ல. உங்களைப் போன்ற கெட்டிக்கார மாணவர்கள் முயற்சியால் யுனிவர்சிடி வாசலில் காலடியெடுத்து வைத்து, பின்னாட்களில்– வருகை தந்த நோக்கம் மறந்து– காதல் வலையில் வீழும் பரிதாபம் நிறையவே கண்டு வருந்தும் நெஞ்சம் எனது. முதலில் கற்போம். இலட்சியங்களை எட்டுவோம். பின் நேசமான கனவுகள் பற்றி முடிவெடுப்போம். அதைவிடுத்து நவீன ரோமியோ–



ஜூலியட்டுக்களாக கற்பனை வளர்த்து கைக்கெட்டிய கற்கும் வாய்ப்பினை கலைக்காதிருப்போம். எம் தகுதிகளை வளர்த்துக் கொள்வோம். பின் வாழ்க்கையை ஆரம்பிப்போம்.

உங்களுக்கான என் நேசம் என்றும் நிலைத்து நிற்கும். கற்கை முடிந்து வெளியான தருணங்களில், நம் இலட்சியங்கள் கைப்படும் நேரங்களில் நான் உங்களைத் தேடி வருவேன். என்றும் உங்களுக்காகத்தான் என் நெஞ்சமும் நானும்..."

நண்பன் அஜீத் கண்களால் மேய்ந்து கொண்டிருந்த காகிதத்தை கையில் பறித்து சுக்குநூறாகக் கிழித்தவன் அமைதியாய் ஓடும் மஹாவலியின் நீரோட்டத்தில் அதை சங்கமிக்கச் செய்தான். "இ...இது ஸல்மா எழுதிய லெட்டர்! இது எப்படி சிராஜ் கையில் அகப்பட்டது?" அஜீத் தடுமாறினான்.

மௌனமாய் நண்பனை உறுத்துப் பார்த்த ரகுமானின் கண்களில் வெறி ஆத்திரமானதொரு தீவிரம்.

"ஸல்மா என்னை வேண்டுமென்றே அவமானப்படுத்திட்டா. நான் இதைவிடப் போறதில்ல. தகுதிகளை வளர்த்துக் கொள்வோம்! என்னமாய் எழுதியிருக்கா... நீ ஒரு பிச்சைக்காரன். என் தகுதிக்கு ஒத்து வரமாட்டேங்குறது தானே அர்த்தம். எழுதறது எல்லாத்தையும் எழுதிட்டு எனக்காக வேறு காத்திருக்கப் போறாவாம்! எல்லாத்துக்கும் மேலா அந்தக் கடிதம் என் பரம விரோதியின் கையில சிக்கிடுச்சு. அவன் சிரிப்பு... ஏளனம்....என் இரத்தம் கொதிக்குது. பலி வாங்காம விடமாட்டேன். சத்தியம். இது சத்தியம்." உணர்ச்சிகளின் மேல் மட்டத்தில் உரத்துக் கூறி களைத்துப் போனான் ரகு. என்ன செய்வது என்று புரியவில்லை. அஜீத் தர்ம சங்கடமாய் யோசித்தான்.

ஸல்மாவின் கெட்ட காலம் என்பதா துரதிஷ்டம் என்பதா? அவள் சொல்வதிலும் நியாயம் உண்டு. கடிதம் கை மாறிப் போனதுதான் தப்பு. தவறு, விபரீதம். சிராஜ் பொல்லாதவன். அர்த்தமில்லாது ரகுமானுடன் பகை வளர்த்து வருபவன். ரகுமான் நல்லவன்தான். ஆனால், தீவிர மனப்பாங்கும் செயல்களின் பின் விளைவுகள் பற்றி யோசிக்காத நிலையும் கொண்டவன். என்ன நடக்கும்? நண்பனுக்கு அட்வைஸ் சொல்ல தலை உயர்த்தி பார்த்தவனுக்கு ஏமாற்றமே. அவன் போய்விட்டிருந்தான். மஹாவலி இன்னும் மௌனமாய் ஓடிக் கொண்டிருந்தது.

ரகுமான் மாறியிருந்தான். சிராஜைக் கண்டு கொள்வதில்லை. பகைமை மறந்த நிலை. ஸல்மாவுடன் நேயமுடன் பழகினான். புன்னகை சுமந்த உதடுகளும், நெஞ்சைப் பிளக்கும் கேலிகளும், ஜோக்குகளுமாய் ஆர்ப்பாட்டமாய்த் திரிந்தான். வருடங்கள் ஓடின. இடைக் காலங்களில் அவன் ஸல்மாவின் இதயத்தில் ஆழமாய் நேசம் விதைத்து விட்டிருந்தான்.

இப்போது ரகு ஸ்கொலர்ஷிப் கிடைத்து வெளிநாட்டில் உயர் படிப்பைத் தொடர்ந்தான். ஸல்மாவும் அஜீத்தும் தொழில் புரிந்தனர். ஸல்மாக்கு தொழில் அவசியமில்லை. எனினும் கற்ற கல்வியை சமுதாயத்துக்கு பிரயோகிக்கும் மனம் அவளது.

ரகுமானைப் பற்றிய கனவுகளில் ஸல்மா கடிதங்கள் பல அவனுக்கு அனுப்புகிறாள். "வருவேன் உன்னிடம். காத்திரு." என்று சொல்லிப் போனவனல்லவா? அவனது மௌனங்களே பதிலாகின்றன. ஸல்மா பதறுகிறாள். தவிக்கிறாள். கவலை நிரம்பிய மனதை அஜீத்திடம் பகிர்ந்தாள். முதலில் குழம்பி பின் தெளிகிறான் அஜீத். ரகுமான் அழுத்தமானவன். மஹாவலியின் நீரோட்டம்போல் மேல் மட்டத்தில் தன்னை சீராகக் காட்டி அடி மனதில் பழிவாங்கும் நினைவுச் சுழிகள் கொண்டவன். நினைத்ததை ஸல்மாவிடம் சொல்லாது காத்தான். தேறுதல் கூறி அனுப்பினான். நண்பனைப் பற்றி தரங்குறைத்து எப்படி அவளிடம் சொல்வது? வார்த்தைகள் எங்கே? அவன் தடுமாறி மௌனமானான்.

ரகுமான் கடிதம் அனுப்பியிருந்தான் அஜீத்தின் முகவரிக்கு. தன்னோடு கற்கும் இலங்கை யுவதியை நேசிப்பதாகவும் நாடு திரும்பி மணப்பதாகவும் கூறி, "ஸல்மாவிடம் இதனைக் கூறு. அவளது தகுதிக்கேற்ற ஒருத்தனை தேடச் சொல். காரணம் இப்போது என் தகுதி, தகமை உயர்ந்துவிட்டது. எனக்கேற்றவளை தேடிக்கொண்டுவிட்டேன்." வாசகம் அஜீத்தை சுட்டன. வருந்தினான். ஸல்மாவுக்காகவும், கல் நெஞ்சம் கொண்டவனை நண்பனாகப் பெற்றுவிட்ட நிலமைக்காகவும் வருந்தினான்.

சமாளித்துக்கொண்டவனாக அஜீத் ஸல்மாவிடம் வார்த்தைகளைக் கோர்வையாக்கியபோது அவள் கன்னங்களில் கண்ணீர்த்துளிகள் கோர்வையாயின. மௌனமானாள். "விதி. இல்லையா அஜீத்?" வினவினாள். அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவளது மௌனம் நிரந்தரமானபோது அஜீத் அழுதுகொண்டான்.

ரகுமான் வந்துவிட்டான். கூடவே அவனது இதய நாயகியும். கல்யாணம் நிச்சயமாயிற்று. வந்ததிலிருந்து ஸல்மாவைப் பற்றி எதையுமே கேட்காதவன், திருமண அழைப்பிதழை அஜீத்திடம் நீட்டினான். "அழகாயிருக்கு இல்ல. மறக்காம ஸல்மாக்கு ஒண்ணு போஸ்ட் பண்ணிடு. அட்ரஸெல்லாம் உனக்கு தெரியுமில்ல. ஆமா, அவ இன்னும் மிஸ் தானா? இல்ல மிஸிஸ் ஆகிட்டாங்களா?" அஜீத் மௌனம் சாதித்தான். "என்ன பேச்சைக் காணோம்?" ரகு ஏகத்தாளமாகக் கேட்டான். "மிஸ்தான்.. இனிமே அவ மிஸ்தான்...." அஜீத் தளர்ந்த குரலில் கூற.. "என்ன? இனிமே மிஸ்? நம்ம மதத்துல துறவி ஆக முடியாதே." காதல் தோல்வின்னு இனிமே கல்யாணம் வேண்டாம்னு துறவி ஆயிட்டாளா?" கேலியாக நகைத்தான். அஜீத்தின் உள்ளம் பொங்கியது. ஆவேசமானான்.

தீர்க்கமாக ரகுவைப் பார்த்தான் அஜீத். "அவ மிஸ் ஆனதற்கு காரணம் ஒன்று அவளது பலவீனமான இதயம்! இரண்டு நீ! நீயும் உனது கொடூர மனமும் செயலும்! ஏமாற்றத்த தாங்க முடியாத இதயத்தோட இறைவன் கிட்டப் போய்ச் சேர்ந்துட்டா. உன்ன மாதிரி ஒரு கணவன் கிடைக்காததற்கு அவ மட்டுமல்ல நான்கூட ஆண்டவனுக்கு நன்றி கூறுறேன்." அஜீத் சொல்லச் சொல்ல ரகுமான் அதிர்ந்தான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இலக்கிய நயம்

## குற்றங்கள் மூன்று!

**தருவது—ரசிகன்**

ஒரு கரத்தில் மதுக்கிண்ணம்; மறு கரத்தில் அந்தப்புர சுந்தரியின் பளிங்குக் கன்னம்.

மயங்கிக்கிடந்தான் மன்னன். உதடுகளால் மதுவை ருசித்துக்கொண்டிருந்தான்.

விழிகளால் சுந்தரியின் தேன் கிண்ண இதழ்களை இரசித்துக்கொண்டிருந்தான்.

மது ருசிப்பதை ஒத்திவைத்துவிட்டு மதுவாச உதடுகளால் சுந்தரியின் இதழ் வாசலில் ஏறி கொஞ்ச நேரம் நலம் விசாரித்துக்கொண்டான்.

அவன் வலது கரத்தின் விரல்களோ வெவ்வேறு இடங்களில் 'நலமா நலமறிய ஆவல்' நடத்திக்கொண்டிருந்தன.

"சுந்தரி" என்றான் சொக்கிப்போய் விட்ட மன்னன். வார்த்தைகளில்கூட மதுவின் வாசம்.

வேண்டுமென்றே உதடு சுழித்து, வேண்டுமென்றே குரலில் குழைவை அதிகமாக்கி, வேண்டுமென்றே விழிகளில் கிறக்கத்தை நிரப்பிக்கொண்டு,

"என்ன பிரபு?"

"கிண்ணம் முழுக்க மது! என் எண்ணம் முழுக்க நீ!"

மீண்டும் அவள் வேண்டுமென்றே குழைந்து, மன்னவன் மார்பில் பட்டுக் கரத்தால் தொட்டு வருடி, வருடியதால் மன்னவனுக்குள் நெருப்பு மூட்டிக் கொண்டு,

"அது என் பாக்கியம் பிரபு."

நெருப்பு பற்றி எரிந்தது.

"பாக்யம் இப்போது எனக்குத்தான். இப்போது ஆரம்பிக்கலாம் இன்பக் கணக்குத்தான். இந்தக் கணக்கிலே நிகர லாபம் நம் இருவருக்கும்தான். இந்த சிற்றாடை இடையிலே இருந்தால் தடுக்கும் தான்."

சிற்றாடை தொட மன்னவன் கரம் எடுக்க, அந்தப்புர கதவு தட்டப்பட்டது.

சினம் வந்தது மன்னவனுக்கு. திறந்த கதவின் வழியாக பணிப்பெண் முகம் தெரிந்தது.

"தளபதி வந்திருக்கிறார்."

என்றாள்; தலை வணங்கிய போது உடல் வில்லாக வளைந்து மன்னவன் மனதை அலைபாயவைத்தது.

"வரச்சொல்!"

வந்தான். வணங்கிவிட்டு,

"வாழ்க மன்னவர்"

"என்ன தளபதி இந்த நேரத்தில்?" சினத்தில் பாதி உள்ளே; மீதி குரலில்.

"விடயம் அவசரம்."

"எனக்கும் அவசரம்தான். சொல் விரைவாக!"

மன்னவன் இருந்த நிலையும், அவன் அருகிருந்த அழகோவியத்தின் மெல்லிய துகில் வானில் அலையும் முகில்போல அங்கும் இங்குமாய் சிதறிக்கிடந்த நிலையும் தளபதியை 'வேளை கெட்ட நேரத்தில் வந்து தொலைத்துவிட்டேனே' என்று சங்கடப்படச் செய்தன.

தளபதியின் தயக்கம் மன்னவனின் பொறுமையை சோதித்தது.

"என்ன யோசனை தளபதி? வரும் போதே யோசித்து முடித்துவிட்டு வந்திருக்கலாம் நீ!"

சொல்லிவிட்டு கிண்ணத்தில் இருந்து



சில துளிகள் மது ருசித்தான். மறு கரத்தால் அவளை மறக்காமல் அணைத்துக்கொண்டிருந்தான்.

"அந்நியப் படைகள் எல்லை மீற ஆயத்தம் செய்வதாக வந்திருக்கிறது செய்தி."

சொல்லும்போதே தளபதியின் மீசை துடித்தது. மன்னவன் உதட்டிலே இகழ்ச்சி விரிந்தது.

"செய்தி வந்திருந்தால் தேசத்தின் எல்லைக்கல்லவா சென்றிருக்க வேண்டும் நீ! சமர்க்களம் அங்கிருக்க, நீ அங்கு செல்லாமல், சந்தன மேனியரோடு சல்லாபமாடும் களத்துக்கு வந்திருக்கிறாயே தளபதி!"

மன்னவன் மதுவாசனையோடு நகைத்தான்.

துடித்தெழவேண்டியவன் துடியிடையில் தாளமிட்டுக்கொண்டிருப்பதை நினைத்து தளபதி மனம் ஒடிந்தான்.

"உத்தரவு."

விடைவாங்கி விலகிச் சென்றான்.

"தளபதி நில்!"

மன்னன் குரல் கேட்டு கதவருகே நின்று திரும்பிப்பார்த்தான்.

மன்னவன் கரச் சிறைக்குள் இருந்த சுந்தரி தளபதியைப் பார்த்து கண் சிமிட்டி உதடு குவித்து காட்டினாள்.

எழுந்த கோபம் அடக்கி மன்னவனை நோக்கினான். ஏன் அழைத்தீர்கள் என்பது போல் பார்த்தான்.

ஒரு துளி மதுவை உறிஞ்சிவிட்டு மன்னவன் சொன்னான்:

"போகும்போது கதவை மூடிவிட்டு செல்!"

□□

"இன்னும் தீரவில்லையாக்கும் மோகம்?" கலைந்துகிடந்த ஆடைகளை சேகரித்துக் கொண்டு சிணுங்கினாள் சுந்தரி.

எங்கோ முரசுகள் அதிர்ந்தன. மன்னவன் செவிக்கு அவள் சிணுங்கல் மட்டுமே கேட்டது.

"நீராடி முடித்து கரைவந்த பின்னரும் மீண்டும் நீராடச் சொல்லும் குளிர் அருவி போலிருக்கும் தளிர் மேனி தாளாத தாகத்தை, மாளாத மோகத்தை தருகிறதேயடி சுந்தரி!"

சுந்தரி கடுமையாக முயன்று வெட்கப் பட்டாள். மந்தகாசமாய் புன்னகைத்தாள்.

"சந்தன மயிலே இப்படிச் சிரிக்காதே! என் சிந்தையில் இன்னும் ஆசை விதையை விதைக்காதே!"

சுந்தரி சென்று மதுக்கோப்பை எடுத்து வந்தாள். அதிலிருந்து மன்னவன் கரத்தில் இருந்த கிண்ணத்தில் ஊற்றினாள்.

"ஊற்றிக்கொண்டேயிரு! இன்பத்தை எனக்கு ஊட்டிக்கொண்டேயிரு! சொர்க் கத்தை மேலே வைத்தான். சொர்க்கமாய் பெண்ணை பூமியில் படைத்துவைத்தான்! சொக்கத் தங்கம்தான் உந்தன் மேனி! நீயேதான் எந்தன் ராணி! காணி வேண்டுமா? கண்ணுக்கெட்டா தொலைவு விரிந்திருக்கும் நிலம் வேண்டுமா? இல்லையேல் சொல்லடி இந்த நாடே உனக்கு நான் தரட்டுமா? தேனே சொல்லடி. என்னை உனக்குள் அள்ளிக்கொள்ளடி!"

தடுமாறி எழுந்தான் மன்னன். பலமாக மோதி தட்டப்பட்டது கதவு!

"மீண்டும் தளபதி. வாடா இன்றே முடியும் உன் கதி!"

சினந்து பிதற்றினான்.

கதவு திறந்தது! அல்ல அல்ல உடைந்தது!

வந்தது தளபதியல்ல; வஞ்சினம் கொண்ட பகை நாட்டுப் படைகள்.

வளைக்கப்பட்ட மன்னன் சிறையில் அடைக்கப்பட்டான்.

□□

சிறையில் முன்னாள் மன்னவனை கண்டு அனுதாபம் சொன்னார் அரசவைப் புலவர்.

புலவரிடம் கேட்டான் மன்னன்:

"ஏன் தோற்றுப்போனோம்? எப்படி தோற்றுப் போனோம்? வீரமில்லையா? வெற்றிகொள்ளும் நெஞ்சுரமில்லையா? இயம்புக புலவரே!"

புலவர் தன் வெண்தாடியை தடவி விட்டுக்கொண்டார்.

"வீரம் இருந்தது உன்னிடம்; இப்போதல்ல முன்பு! விவேகம் இருந்தது உன்னிடம் அதுவும் இப்போதல்ல முன்பு தான்!! செங்கோல் இழந்த நீ இன்று சிறையில் வாடக் காரணம் செய்த குற்றங்கள்! மூன்றே மூன்று குற்றங்கள்!!

"என்ன சொல்கிறீர் புலவரே நீர்?"

"சொல்கிறேன் கேள்! செருக்கு, சினம், காமம்! அவையே அந்த மூன்றும்!"

"மூன்றும் மனித இயல்புகள்! அவை எப்படிக் குற்றமாகும்?"

"செருக்கு பிறர்மீது செருகப்படும் வாளாக மாறியது குற்றம்! சினம் காமத்தால் திசைமாறி கடமையில் காட்டவேண்டிய கவனத்தை மறைத்தது குற்றம்! காமத்தால் வனிதையரின் தோளில் சரிந்து கிடந்த நீ



உன் தோளில் இருந்த பொறுப்பை மறந்தது குற்றம்! குருதி கொட்டி உன் படைகள் போராட நீயோ கட்டிலறையில் இன்ப சுருதியறிய போராடிக்கொண்டிருந்தாயே அது குற்றம்! படுகளத்தில் உன் மக்கள் பலியாக நீயோ பாவையரின் பல்லிடுக்கில் ஊறிவந்த பாணம் பருகிக் களித்திருந்தாயே அது கொடும் குற்றம்! செங்களத்தில் சிரசுகள் உருண்டு கொண்டிருக்க, பஞ்சணையில் நீயோ கொஞ்சு மொழி அஞ்சுகங்களோடு புரண்டு கொண்டிருந்தாயே- அது குற்றத்திலும் குற்றம்!!"

"போதும் புலவரே போதும்."

முன்னாள் கோமகன் தலைகுனிந்து கோவென்றழுதான். அப்போது புலவர் ஒரு குறள் சொன்னார்- குத்திக்காட்டும் குறள்.

"செருக்குஞ் சினமும் சிறுமையும்
இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து"

அதிகாரம்–44–குறள்–431

## குறுக்கெழுத்துப் போட்டி இல–74



**இடமிருந்து வலம்**

2. இது அதிகமானால் சோம்பேறி ஆக்கிவிடும்.
3. அலைபாயும் மனதிற்கு இது அவசியம்.
5. இராமன், சீதையை நோக்கியது இங்கு தான்.
8. பந்த பாசம் இவருக்கு இல்லையாம்.
9. இது சூரியன் பணியைத் தொடங்கும் நேரம்.
10. இவரைக் காலன் என்றும் கூறுவார்கள். (குழம்பியுள்ளது)
11. வெப்பத்தின்போதுதான் இதன் அருமை தெரிகிறது.

**மேலிருந்து கீழ்**

1. குருபக்தியால் விரலை இழந்தவன்.
2. பெருமழை ஓய்ந்தாலும் இது விட்டபாடில்லை என்று கூறுவார்கள்.
4. இவர் குடும்பத்தை வழிநடத்துபவர்.
6. நம் முன்னோர்கள் திரைகடல் ஓடி இதனையும் சேர்த்தார்கள்.
7. விற்றமின் 'ஏ'யும் இதில் உள்ளது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 12.11.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-74
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல-72க்கான சரியான விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பு | ல | வ | ர் | ■ | 2 பீ | 3 டா |
| 4 க | ள் | ■ | 5 ச | ரு | ம | ம் |
| லி | ■ | 6 பே | ன் | ■ | ன் | பீ |
| 7 ட | 8 யா | னா | ■ | 9 கா | ■ | க |
| ம் | ச | ■ | 10 பா | த | க | ம் |
| ■ | 11 க | ப் | ப | ல் | ■ | ■ |
| 12 க | ம் | ப | ன் | ■ | 13 சோ | டா |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.72இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி.கு.நிரஞ்சனா வவுனியா.
2. ஏ.நஸீராபானு கொழும்பு–12.
3. சோதி கல்முனை.
4. எம்.ராபிக் மாத்தளை.
5. பி.மூர்த்தி கினிகத்தேனை.
6. அ.துஷ்யந்தி மட்டக்களப்பு.
7. செல்வி.நபீலா காதர் குருநாகல.
8. ச.ஜெயந்தி திருகோணமலை.
9. முபீதா ரஹ்மான் கண்டி.
10. அப்துல் மஜீத் ஏறாவூர்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்

# இலக்கு–விக்கெட்–100

இந்திய கிரிக்கெட் அணியின் சுழல் பந்து மும்மூர்த்திகள் யார் என்று கேட்டால் எல்லோருக்கும் அவர்களது முகம் நினைவுக்கு வந்துவிடும். அந்த மும்மூர்த்திகள் வெங்கடபதி ராஜு, அனில் கும்பிளே, ராஜேஷ் சௌகான்.

இந்த மும்மூர்த்திகளில் வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர் ராஜு. அதன் பிறகு வந்தவர் கும்பிளே. கடைக்குட்டி சௌகான்.

சௌகானின் தந்தை கோபிநாத் சௌகான் சிறந்த ஓஃப்-ஸ்பின்னராக இருந்தவர். அவர் கொடுத்த உற்சாகமும், ஒத்துழைப்பும் ராஜேஷ் சௌகானை கிரிக்கெட் அணியில் இடம்பிடிக்கும் வகையில் உயர்த்தியது.

சுழல்பந்து வீச்சாளர்களில் ராஜேஷ் சௌகானுக்கு ஒரு சிறப்பு உண்டு. இவர் இந்தியாவுக்காக ஆடத் தொடங்கிய முதல் 4 ஆட்டங்களிலும் இந்தியா அபார வெற்றியைப் பெற்றது.

இங்கிலாந்திற்கு எதிராக அவர் முதன் முதலில் ஆடத்தொடங்கிய சமயத்தில் இவரது பந்து வீச்சு ஸ்டைல் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டனர். இந்த ஸ்டைல் அவருக்கு எப்படி



சௌகான்

வந்தது? அவரே கூறினார்:

"நான் மிகத் தீவிரமாகக் கிரிக்கெட் ஆடத் தொடங்கிய சமயத்தில் எங்கள் வீட்டில் டெலிவிஷன் இல்லை. அதனால் பிரசன்னா, வெங்கட்ராகவன் போன்றவர்களின் பந்து வீச்சுக்களைப் பார்த்து இரசிக்க முடியாமல் போய்விட்டது. ஒரு வேளை அவர்களின் ஆட்டத்தைப் பார்த்திருந்தால் அவர்கள் ஸ்டைல் என்னிடம் தொற்றி இருக்கும். பார்க்காததினால் தானோ என்னவோ எனக்கு நானே ஒரு ஸ்டைலை ஏற்படுத்திக் கொண்டேன்," என்றார்.

பந்தை இப்படி வீசினால் இப்படித் தான் அடிப்பார் என்ற கணிப்பும் இவரிடம் அதிகமாக இருக்கிறது. சில சமயம் பந்து இந்தத்திசையில்தான் வரும் பிடிக்கத் தயாராக இருங்கள் என்று சொல்லி விட்டுப் பந்தை வீசுவார். அவர் சொன்னபடியே பந்துவரும். அப்படி பலமுறை சௌகான் விக்கட்டுக்களை வீழ்த்தி இருக்கிறார்.

25 வயதுவரை ஜாலி, 25 வயதிலிருந்து 35 வயதுவரை விளையாட்டு, சம்பாத்தியம், திருமணம், எக்சற்றா...35 வயதிற்குப் பிறகு விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்று குடும்பத்தினருடன் நிம்மதியாக இருக்க வேண்டும். இப்படி இவர் தனது வாழ்க்கையை வரையறுத்துக் கொண்டிருக்கிறார்.

அந்த வாழ்க்கை வரையறைக்குள் ஒரு இலட்சியத்தையும் சௌகான் வைத்திருக்கிறார். வெகு விரைவில்... எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் 100 விக்கெட் வீழ்த்த வேண்டுமாம். அதுதான் தன் வாழ்க்கையின் இலட்சியம் என்று கூறினார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (06.11.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 53

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** மனம் வாக்குக் காயத்தால் மாசற்ற பாண்டவர்கள் சொக்கட்டான் ஆட்டத்தில் சகுனியின் சூதறிந்தும் தோல்விதனை ஏற்றார்கள். வாக்கதனை மீறாமல் வனவாசம் சென்றார்கள். வெறுப்பதனை எருவாக்கி விளைந்த பெரு மரமாம் துரியனவன் பாண்டவரை தொடர்ந்தே பழி தீர்த்து வந்தான். துர்வாச மாமுனியின் கடுங் கோபம் பாண்டவரை கொடுஞ் சாபக் குழி வீழ்த்தத் திட்டமிட்டான் துரியன். சூதறியாப் பாண்டவரும் மாமுனியை வரவேற்று வாஞ்சையுடன் உபசரித்தார்.

-காட்சி துவக்கம்-

வனத்தில் நகுலனும் சகாதேவனும் விறகு வெட்டும்போது யுதிஷ்டிரர் அங்கு வருகிறார்.

**யுதிஷ்:** அன்பு நகுலா! அருந்தம்பி சகாதேவா! இயற்கை வளங்களேதும் வீணடிக்க லாகாது. தேவைக்கு மேலன்றி சிறிதள வேனும் சிதைத்தல் தீதாகிப்போகும்- திரண்ட வளம் பாழாகும்.

**நகுல:** உள்ளத்தில் பொங்கி எழும் கோபத்தீ தனை அணைக்க வேறு வழி தோன்ற வில்லை. துரியோதனன்தனையும் தீயவர் களனைவரையும் தாக்கித் தொலைத் தெறியத் தடை போடுகின்றீர்கள்! சினத்தை அடக்கிடவே சிறந்த வழி ஏதுமில்லை. சிதைக்கிறோம் இவ் வனத்தை!

துர்வாச முனிவரும் குழுவினரும் வருகின்றனர்.

**யுதிஷ்:** துர்வாச மாமுனிவர் வந்துகொண்டி ருக்கின்றார். சினத்தை அடக்கி இப்போ சிரந்தாழ்த்தி வணங்கிடுங்கள்! (முனிவர் களை வணங்குகின்றனர்) தவத்தால் உயர்ந்த மாமுனி சிரேஷ்டர்களே! வாருங்கள் எங்கள் வனக்குடிலில் தங்கி வாழ்த்தினைக் கூறி ஓய்வெடுத்துச் செல்லுங்கள்!

**துர்வா:** அஸ்தினாபுரத்தின் அரண்மனை சென்றிருந்தோம். துரியோதனன் எம்மை விருந்தளித்து உபசரித்தான். சகோதர ரிடம் சென்று கானகத்தில் விருந்துண்டு களிப்புற்று அன்னவரை வாழ்த்திவிட்டுச் செல்லுங்கள் என வாஞ்சையுடன் அனுப்பி வைத்தான்.

**யுதிஷ்:** தங்கள் வரவதனால் எங்கள் உளம் மகிழ்ந்து உவகை பெருகிறது.

**முனிவர்:** நீராடி வருகின்றோம். நிறை உணவு தயாரிப்பீர்.

**யுதிஷ்:** அப்படியே ஆகட்டும்.

முனிவர்கள் செல்கின்றனர்.

**நகுல:** உணவெல்லாம் இப்போ முடிந் திருக்குமே அண்ணா!

**யுதிஷ்:** ஆமாம்! பாஞ்சாலியும் இப்போ பசியாறி முடித்திருப்பாள்.

**நகுல:** நம் நிலமை தானறிந்து துரியனவன் சூழ்ச்சி இது!

**சகா:** உணவளித்து உதவாவிடில் முனிவ ரவர் சினங்கொண்டு சாபமதைக் கொடுப்பாரே!

□□□

முனிவர்கள் நதியில் நீராடுகின்றனர். திரௌபதி பாத்திரங்களைக் கழுவுகிறாள். யுதிஷ்டிரரும் தம்பிமாரும் வருகின்றனர். முனிவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்பதைக் கூறுகின் றனர். ஒரு பாத்திரத்தில் மட்டும் ஒரேயொரு பருக்கை சோறு ஒட்டிக்கொண்டிருக்கிறது.

**திரௌ:** இந்திரப் பிரஸ்தத்தின் மாமன்னர் இன்று அந்தணர் சிலருக்கு உணவ ளிக்கத் தயங்குகிறார். மகாராணியா ருக்கும் மார்க்கம் தெரியவில்லை. பாத்தி ரத்தில் இங்கு பருக்கை ஒன்று தானுண்டு. பரந்தாமா! இதுவும் உன் திருவிளையாடல் தனில் ஒன்றா?

கிருஷ்ணர் தோன்றுகிறார்.

**கிருஷ்:** பெரியண்ணாவை வாட்டும் பெருங் கவலை தான் யாதோ? என் வருகை உங்களுக்கு இன்பம் தர விலையோ?

**யுதிஷ்:** என்ன கண்ணா கூறுகின்றாய்? உன்னை அன்றி எம் வாழ்வில் இன்பம் அளிப்பவர் யார்? சுபத்திரை சுகம்தானா?

**கிருஷ்:** வினாக்களுக்கு விடை கூறும் வேளை இதுவல்ல. பசி என்னை வாட்டுறதே! புசிப்பதற்கு ஏதுமுண்டோ?

**திரௌ:** பாத்திரத்தில் ஒரே பருக்கை பத்திரமாயிருக்கிறது. பாதியை எடுத்துக் கொள்! மறுபாதிதன்னை இந்தப் பாரிலுள்ளோர் அனைவருக்கும் பகிர்ந் தளித்திடு அண்ணா!

**கிருஷ்:** அதுவே போதும் எனக்கு. அன்புடனே பரிமாறு.

□□□

நதியில் குளிக்கும் முனிவர்கள்..

**முனி-1:** முனிவரே! போதும்! மகாராணி இப்போ உணவுடன் காத்திருப்பார்.

**முனி-2:** ஆமாம் மாமுனிவரே! பசி வயிற்றைக் குடைகிறது.

**துர்வா:** போவோம் புறப்படுங்கள்! ஓம் நமசிவாய ஓம் நமசிவாய..!

□□□

கிருஷ்ணன் சோற்றுப் பருக்கையினை எடுத்து உண்கிறார். அதேவேளை நதிக்கரையில் முனிவர்களின் பசியும் மறைகிறது.

**முனி-1:** பெரும் பசிதான் எழுந்ததிப்போ! போன இடம் தெரியவில்லை!

**முனி-2:** இனிமையுள்ள பாயாசம் இயன்ற மட்டும் உண்டதுபோல் என் வயிறு நிரம்பியதே! உண்டபின் வரும் உறக்கம் தருகிறதே தனிக்கிறக்கம்!

**துர்வா:** தூங்குதற்கு ஏற்ற வேளையில்லை யப்பா! வயிறு நிறைந்துள்ளது. விருந்து தனைப் படைக்க வரவழைக்க வருவார் கள். வேறு எங்காவது ஓடிப் போய் விடுவோம் வாருங்கள்!

-காட்சி மாற்றம்-

**கிருஷ்:** நாவுக்கு உரிசியான நல்லுணவுதான் படைத்தாய்! தூக்கம்தான் வருகிறது. தூங்கட்டுமா கொஞ்சம்?

**யுதிஷ்:** தாராளமாக படுத்திருக்கலாம் கண்ணா! தம்பி சகாதேவா! நீராடச் சென்ற முனிவர்களைப் பார்த்து அழைத்துவா இப்போது.

**கிருஷ்:** அழைத்துவர வேண்டும் என்ற அவசியம்தான் என்ன? தாமாக வந்தால் வரட்டும் விட்டுவிடு. பெரிய அண்ணா! பார்த்தன்தான் தபசிருக்கப் போய்விட்டான். பீமனவன் எங்கே? காணவில்லையே இங்கே!

**யுதிஷ்:** பீமனவன் வெளியேறிச் சென்றுள் ளான் சில நாளில் வந்திடுவான். இப்போது திடீரென ஏன் வந்தாய்? தெரியலாமோ கண்ணா?

**கிருஷ்:** ஒன்றுமில்லை பெரியண்ணா! பசிதாங்க முடியாமல் பறந்தோடி வந்தேனிங்கே! பீமனையும் பார்த்தால் நலமென்று தானிருந்தேன். புறப்பட்டுப் போகட்டா...?

**யுதிஷ்:** மாலை மறைந்திப்போ மயக்கும் இருள் சூழ்கிறது. இன்றிங்கே தங்கி விட்டு நாளை புறப்படலாம்!

**திரௌ:** புல்லால் உருவான படுக்கை தனிலா உன் படுக்கை? பொறுக்காது என் மனது. கடுங்கோபம் கொண்டு கடிதேகிப்போன பீமன் வருகைக்காய்க் காத்திருக்க வேண்டாம் கண்ணா நீ போய் வா உன் வழியில்!

-காட்சி மாற்றம்-

பீமன் வனத்தில் செல்லும்போது அனுமான் வழியில் படுத்திருக்கிறார்.

**பீமன்:** வழியை மறித்திருக்கும் வானரமே! உந்தன் வாலை ஒதுக்கி கொஞ்சம் வழிவிடப்பா!

**அனு:** இராமநாமம் கூறப்பா! அமைதி நாடி வந்துள்ளேன்!

**பீமன்:** வாலை எடுத்து வழிவிட நீ மறுத்தால் அந்த வாலை அறுத்திடுவேன்! வீண் வம்பைத் தவிர்த்துவிடு!

**அனு:** அறுத்திடப்பா அந்த அளவறியா வாலதனை! அந்த வாலினை அகற்றும் அரியவனை எதிர்பார்த்தேன். அகற்றிடடா அரும் தம்பி- முயன்றிப்போ அகற்றிடப்பா!

அனுமானின் வாலை அகற்ற பீமனால் முடியவில்லை.

**அனு:** அகற்ற முடியாது அவதியுறுகின்றாய்! உடலில் உறுதியுள்ள வீரன்போல் தோன்றும் உன்னால் இம் முதியவனின் வாலை மடக்க முடியாதோ?

**பீமன்:** முடியாதிருக்கிறது மன்னித்தரு ளுங்கள்!

**அனு:** இராமநாமம் சொல்லு தம்பி! வாலை ஒதுக்கிவிட்டு வழி கண்டு போ தம்பி!

**பீமன்:** மாண்புடைய பெரியீர் நீர் மரம் தாவும் மந்தியல்ல. அடையாளம் கூறுங்கள் ஆசியினைத் தாருங்கள்!

**அனு:** இராம நாமம் கூறு தம்பி!, அந்த இராமபிரான் பக்தன் நான்!

**பீமன்:** இராமபிரான் பக்தனென்றால் வாயு தேவன் புதல்வன் - எந்தன் அண்ணனும் தாங்களன்றோ?

அனுமான் தனது விசுவரூபத்தைக் காட்டுகிறார். பீமன் வணங்குகிறான்.

**அனு:** ஜெய் ஸ்ரீ ராமா! ஜெய் ஸ்ரீ ராமா!

<u>பின்னணிப்பாடல்:</u>

இராம பிரான் அரவணைப்பால்
இணையற்ற பேறு பெற்ற
அனுமனவனணைப்பினிலே
ஆனந்தம் பெருக்கெடுக்கும்
அரிய திருக்காட்சி கண்டோம்!
அகமகிழ்ந் துவகையுற்றோம்!
வாயுதேவன் மைந்தர்களின்
வாழ்த்துக்களைப் பெற்றுய்வோம்!

**பீமன்:** ஏன் அண்ணா என்னை சோதிக்க நினைத்தீர்கள்?

**அனு:** மூத்தவர்கள், முடங்கி வலு விழந்து விட்டவர்கள் மரியாதைக்குரியோர் அவரை வணங்கிடவும் வேண்டும்! அன்புடன் பேணி அவர் ஆசி பெற வேண்டும்! வயதேறிப் போன வானரத் தையே கண்டாய்! உன் வாழ்வில் எத்தனையோ எளியவரை நீ காண்பாய்! அத்தகையோர் எத்தகையோர் என்ப தனை நீ அறிய ஏற்ற வழி புகட் டிடவே பரீட்சை செய்து புகட்டி யுள்ளேன்!

**பீமன்:** மன்னிப்புக் கோருகிறேன்! மறந்திட மாட்டேன் அண்ணா. அம் மாண்புடைய மதியுரையை! அண்ணனும் தம்பியரும் அருந்துணையாம் திரௌபதியும் அருகில்தான் உள்ளார்கள். அங்கு வந்து ஓய்ந்திருந்து ஆசி கூறிச் சென்றிடுங்கள்!

**அனு:** என்னுடைய ஆசிகள் எப்போதும் உண்டவர்க்கு!

**பீமன்:** இராவணேசனின் கர்வம் அழித் தொழித்துச் சிதைத்தவரே! போர் முறைகள் சிலவற்றைப் புகட்டிவிட்டுப் போங்கள் அண்ணா!

**அனு:** அன்றந்த அமர்க்களத்தில் அரியபோர் புரிந்தேன்நான். ஆனாலும் வெற்றி அந்த இராம பிரான் அடியிணைக்கே! உண்மைதான் வெற்றி பெறும்! உண்மை தனை உணர்ந்து உறுதுணைதனைப் பெற்றால் உண்மைக்கு அழிவில்லை. இனிவரும் போரெதிலும் எனக்கு இடமில்லை, எனினும், உங்களனைவ ரோடும் நான் உறுதுணைவனாய் வருவேன்! உங்களது போர்க் கொடியில் எந்தன் உரு உறைந்திருக்கும்!

-காட்சி மாற்றம்-

கானகத்தில் அந்தணர் குடும்பம் ஒன்று செல்கிறது. அஸ்தினாபுரம் சென்று அரிய விருந்துண்டு அதுபற்றி புகழ்ந்து செல்லும் அவரிடையே ஒரு பூதம் தோன்றுகிறது. தனது தாயார் புரியும் சக்தி பூஜைக்கு பலியாக ஒருவரை வரும்படி அப்பூதம் கேட்கிறது. ஒவ்வொருவரும் தங்களையே பலியாக ஏற்கும்படி கூறுகின்ற வேளையிலே பீமன் அங்கே வருகின்றான்.

**பீமன்:** இவர்களைப் பலியாக்கும் எண்ணத்தை விட்டுவிடு! என்னையே ஏற்றுக்கொள்! என் அருமைத் தாயின் இடை நடுமகன் நான்தான். அண்ணனும் எனக்குண்டு. தம்பியரும் தானுண்டு. என் தாய் என்னை என்றும் வஞ்சிக்கவேயில்லை. என் அங்கங்கள் அத்தனையும் இதற்கு அருஞ்சான்று கூறிவிடும். தயங்காதே என்னை உன் அன்னையிடம் அழைத்துச் செல்!

பூதம் வழிகாட்ட பீமன் பின் சென்று குடிசையை அடைகின்றான்.

**பூதம்:** சக்திதாயின் பூசைக்குத் தகுதியான பலி ஒன்றை தேர்ந்தெடுத்து வந்துள்ளேன்!

**இடும்பி:** பலியாகவா இவரை கொண்டு வந்து சேர்த்துள்ளாய்? பலியல்லடா மகனே இவரே என் பதியாவார்! பலியாக நீ கொணர்ந்த இந்தப் பெருந்தகையே உந்தன் பிதா மகனே!

**பீமன்:** பலியாக்க வேண்டுமெனில் உன் பதியையோ மற்றும் உன் புதல் வனையோ தேர்ந்து பலிபீடம் தனில் வைக்க உந்தனுக்கு உரிமை உண்டு. வேறொருத்தி கணவனையோ வேறெவ ரின் புதல்வனையோ பலியாக நீ கொடுக்க உரிமை உனக்கேதுமுண்டோ? அன்னை பராசக்தியவள் அரிய உயிர்ப் பலி கேட்டு ஆணையேது மிட்டாளா? அவ்வாறு கேட்டிருந்தால் என்னையே பலியாக்கி ஏற்றமும் பெற்றிடுக!

**இடும்பி:** பரம்பரைப் பழக்கத்தால் பலி கொடுக்க முன்வந்தேன்! அடியவளை மன்னியுங்கள்! ஆதரித்து ஆண்டருள வேண்டுகிறேன் அன்பரே!

**பீமன்:** உயிர்ப்பலியினை என்றும் உயர் தெய்வம் கேட்பதில்லை! வாழ்க்கை என்பதோ அழகு! வாஞ்சையுடன் அதனைப் போற்றுதலே பெருமை! மதம் கூறும் உண்மைகளின் மாண்பு தனை மறந்தே மாசுவழி செல்லுவதே பலிபீடப் பொய்க் கூற்று! மாசற்ற மதங் கூறும் உண்மைக்கு மாறாக பொய்க் கோலம் தவிர்த்திடுதல் அதுவன்றோ சிறந்த நெறி! அன்னை யினை வேண்டி அவள் ஆசியினைப் பெற்று உய்ய வழிதேடு என்று அன்பே உனைக் கோருகிறேன்! அன்பு மகனே என்னை அணைத்துக்கொள்ளப்பா!

மகன் கடோர்கஜன்தான் - பூத உருவில் வந்தான்!

**கடோ:** அணைக்க விரும்பவில்லை அப்பா! தங்கள் அடி தொழவே வேண்டுகிறேன்!

இருவரும் அணைத்து மகிழ்கின்றனர்.

**பீமன்:** அருமை மிகு திருமகனின் உருவமது பெரிதாகி அவனுடம்பும் உறுதியுடன் அமைந்திருத்தல் பெருமையன்றோ?

**கடோ:** அம்மாவின் ஆசியினால் நான் பெற்றதிவ்வுடம்பு!

**இடும்:** உங்கள் மகன் ஓடமாட்டான்! உண வருந்த அமருங்கள்.

**பீமன்:** அவசியமும் இல்லை இப்போ அருந்தித்தான் வந்துள்ளேன். அடுத் துள்ள வனத்தில்தான் அண்ணனுடன் தம்பியரும் திரௌபதியுடனுள்ளோம். வனவாசம் ஏற்று இப்போ ஐந்தாண்டு களாயிற்று.

**இடும்ப:** எஞ்சியுள்ள காலத்தை என் இடத்திலே களித்தால் ஏற்றமிகு திரௌ பதிக்கும் தங்களது சோதரர்க்கும் ஏவல் புரிவதற்கு எனக்கு வாய்ப்புக்கிட்டு மன்றோ?

**பீமன்:** அது நடக்கப் போவதில்லை!

**கடோற்:** அவ்வாறான முடிவு ஆகாது அன்பு அப்பா! அத்தனை பேருக்கும் அமுதளித்துக் காத்திடும் ஆற்றல் எனக்கில்லை என்று எண்ணி விடலாகாது.

**பீமன்:** மூவுலகையும் காக்கும் முழுமை வலுபெற்றவன் நீ! அதற்காகக் கூற வில்லை அன்பு மிகு மைந்தா! உங்க ளுடன் தங்குவது வனவாசமாகாது. நான் மட்டும் தனியே சில நாட்கள் தங்கிவிட்டு விடைபெற்றுச் செல் கின்றேன்.

**கடோற்:** உங்களுடன் நான் வருவேன். பெரியப்பா, சித்தப்பா அனைவரின் ஆசி பெற்று அக மகிழ்ந்து களித்திருப் பேன். சித்தப்பா அர்ச்சுனரின் அரிய வில் வித்தையினை அவரிடமே கேட்டு அறிந்திடுவேன் அவனி மெச்சும்!

**பீமன்:** அர்ச்சுனன் இப்போது அங்கில்லை அரும் மைந்தா! தேவர்களின் அஸ்தரங் கள் சேர்த்து வரும் நோக்குடனே தேவருலகினுக்கு பார்த்தனவன் போயுள்ளான்.

**கடோற்:** ஆயுதங்கள் பெறுவதனால் அரிய பெரும் போருக்கு ஆயத்தம் நடக்கிறதோ?

**பீமன்:** பெரியதொரு போரொன்று விரைந் தோடி வருகிறது. போர் ஒன்று வருவதனால் ஆயுதங்கள் தேடும் அரும் பணியும் தொடர்கிறது.

-காட்சி மாற்றம்-

தேவருலகம்—இந்திரன் சபை.

<u>பின்னணிப் பாடல்:</u>

இளமையும் எழிலும் எங்கும் இலங்கிடும்
இந்திர லோகம் இது!
பழமையும் புதுமையும் புணர்ந்திடுமின்பப்
பொது மறை பொலிகிறது!
அன்புடன் அறமும் அருகருகமர்ந்தே
அறிவொளி பரந்திடுதே
அமைதி நிறைந்த அமரத்துவமாங்கே
ஆட்சி புரிகின்றதே!

□□

அர்ச்சுனன் வருகிறான். இந்திரன் வரவேற்கிறான்.

**இந்தி:** வருக வருக அர்ச்சுனா எந்தன் ஆசிகள் உனக்கு அளப்பரியதாகுக! தெய்வீக ஆயுதங்கள் அத்தனையும் சேர்ந்துள்ளதா?

**அர்ச்:** ஆயுதங்கள் மட்டுமல்ல, அவற்றைப் பயன்படுத்தும் அத்தனை ஆற்றல்களும் ஏற்றமுடன் கற்றுவிட்டேன்! பூவுலகம் செல்வதற்கு தங்கள் உத்தரவு வேண்டுகிறேன்.

**இந்தி:** மிக்க மகிழ்ச்சி மைந்தா! கந்தர்வ அஸ்திரத்தின் மந்திரத்தை அறிந்தாயோ? சித்திர சேனன் எனும் கந்தர்வ வேத முணர் விற்பந்நர் இருக்கின்றார். அன்னவரை நாடி அறிவதனை பெற்றிடப்பார்!

**அர்ச்:** இறுதிப் போர் ஒன்றுக்காய் அருந் திறமை சேர்த்த என்னை பரதக்கலை பயின்றிடவும் பா இசைக்கக் கற்றிடவும் கூறுவதன் மர்மம் என்ன? போர் முடித்து பகை துரத்தி வெற்றி பெற்ற பின்னாலே வந்தவற்றைக் கற்றிட வசதி உண்டே தான் ஐயா!

**இந்தி:** ஆணழகன் நீ அன்றோ? பதின் மூன்றாம் ஆண்டதனில் உன்னுருவை மறைப்பதற்கு உன்னால் முடிந்திடுமோ? சூரினும் சந்திரனும் காரிருளால் மறைந்திடலாம். ஆனால் அவை உமிழும் கதிரை மறைத்திடவும் கூடுமோ? கூடாதோ! அதுபோலே அர்ச்சுனனின் உருவை மறைத்தாலும் எழு எழிலை மறைக்க வொண்ணா! ஆகவேதான் சொன்னேன்- ஆடலும் பாடலும் உந்தன் உதவிக்குத் துணை போகும்.

சித்திரசேன கந்தர்வனிடம் அர்ச்சுனன் ஆடலும் பாடலும் கற்று சிறப்படையும் வேளையிலே ஊர்வசி கண்டு மையல் கொள்கிறாள்.

**இந்தி:** ஊர்வசி உனை வாட்டும் உற்ற சோகம் என்ன?

**ஊர்:** ஒரு நிலையிலில்லாது உலைகிறது எந்தன் உள்ளம்!

**இந்தி:** பார்ப்போரை மயங்க வைத்து பரவசமூட்டும் நீ பார்த்தவரால் மயங்கி டுதல் இப்பாருக்கு நல்லதல்ல. அலைந் திடும் உன் மனதை அடக்க வழி தேடப்பார்! உன் உளத்தின் உட்குடைந்து உரிய முறை கண்டிடப்பார்!

□□□

அர்ச்சுனன் ஆட ஊர்வசியும் சேர்ந்து இருவருமாய் ஆடுகின்றனர்.

**ஊர்:** ஆட்டத்தில் வல்லவராய் ஆகிவிட்டீர் அர்ச்சுனரே! குருவுக்கு மிஞ்சியதோர் சீடராகி விட்டீரே!

**அர்ச்:** குருவின் அருளின்றி கற்ற வித்தை கமழாது! குரு முன்னே நின்று யாசிக்கும் ஒருவனிடம் அவரருளால் பெறுவதுவே அரும் பேறாய் அமைகிறது.

**ஊர்:** அப்சரசில் ஒருருவாம் அர்ச்சுனனும் மாறிவிட்டால் அப்சரசகன்னியர் நாம் ஒளி இழந்து போயிருப்போம்! அமர் பொருதும் ஆற்றல் பெற்ற பெரு வீரரான தாங்கள் ஆடற்கலையினிலும் பாடும் திறமையிலும் அருஞ் சிறப்புப் பெற்றமையே எவராலும் முடியாத அரிய செயலன்றோ?

**அர்ச்:** நடவாத காரியமோ முடியாத செயலெதுவோ அவனியிலே ஏது தேவி?

**ஊர்:** என் பெயர்தான் ஊர்வசி! பெயர் சொல்லி அழைக்காமல் தேவி என்றேன் அழைத்தீர்கள்?

**அர்ச்:** அது மட்டும் முடியாது அன்புள்ள மாதரசே!

**ஊர்:** முடியாததொன்றுமில்லை என்று முன்னர்தானே பகன்றீர்கள்?

**அர்ச்:** சிறப்புடைய சில மனிதர் எல்லை தனைத் தாண்ட முயன்றிடவும் முடியாது.

**ஊர்:** இந்திர உலகில் வாழும் சுந்தரிகள் எங்களுக்கு அந்தரத்திலே உழலும் மந்த மனம் ஆகாது! எந்தன் மனதேனோ அலைபாய்ந்து துடிக்கிறதே!

**அர்ச்:** அமைதியின்றி அலை பாயும் அருமனதைத் தேற்றுவதில் அவமானம் ஏது மில்லை! ஆசைப்பட்ட பொருளை அடைவதில் தவறுமில்லை.

**ஊர்:** அர்ச்சுனன் அழகே எனை அலைக் களிக்க வைக்கிறது. அன்புடன் எனை ஏற்று அக மகிழ்வு தாருங்கள்!

**அர்ச்:** அதுதான் நடக்காது.

**ஊர்:** நடக்காததேதுமில்லை நினைத்தாலே நடக்கும் என்றீர்! எந்தனை ஏற்பதுவும் நடக்காது என்கின்றீர்! அழகே இல்லாத அபாக்கியவதி நானோ?

**அர்ச்:** அவ்வாறு ஏதுமில்லை. அன்னையவள் ஸ்தானத்தில் எண்ணுகிறேன் அல்லாமல் வேறேதும் எண்ணுதற்கு என் மனது நாடவில்லை. அன்றொருகால் எமது முன்னோன் பூருருவ மன்னவனின் ஆசைக்கிளத்தியாக அமர்ந்ததை மறந்தீரோ?

**ஊர்:** அப்சரசானவள் நான்! உளமகிழும் அன்பர் தமை அரவணைத்திருப்போம் நாம். அன்னையாக மாட்டோம். அதே போல்தான் எவர்க்கும் அடிமையாக விருந்து வாழ்ந்திடவும் மாட்டோம் நாம். அழகுருவாய்த் தோன்றும் எனை அணைத்து மகிழ்ந்திடலாம் அபகீர்த்தி ஏதுமில்லை!

**அர்ச்:** அன்னையாய் உனை ஏற்ற பின்னும் என் அகத்தினில் வேறு உரு திண்ண மாய் ஏறிடவும் முடியாது தாயே! தாய்க்குக் கணவனாய் தனயனவன் மாறுவது தர்மத்துக் கொவ்வாத அதர்ம நெறிதானன்றோ? அன்போடு மன்னித்து அன்னையாக நின்று என்னை வாழ்த்தி அருளுங்கள்! வேறு நிலை நினையாதீர்!

**ஊர்:** தாயார்க்குத் தனயனென தரங்கெட்டுப் போன உன்னை தனையனாகவே என்றும் தரணியிலே நிலைத்திருக்க கொடும் சாபம் கொடுக்கின்றேன். எத்தகைய பெண்ணையும் நீ இனி அடைய முடியாது.என்றுமே எல்லோர்க் கும் மைந்தனாய் வாழ்ந்திருப்பாய்!

<u>பின்னணிப் பாடல்:</u>

காம வெறி கொண்ட அந்தக்
கன்னிகையின் கோபமது
கடும் சாபமதாய் மாறி
காண்டீபனை அணைக்க
வேதனைக் கடலாடி
விம்மலுற்றான் பார்த்தன்
சோதனை ஈதோவென்று
சோர்வுற்றுலைந்திட்டான்.

(தொடர்ந்து வரும்)



**எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

